மஞ்சரி

நந்தன - தை
ஜனவரி, 1953

வைத்தியப் புதுமைகள்
புருஷர்களே, உஷார்!
பூமிக்கு அபாயம்
கென்யா பயங்கரம்
கடவுள் வந்தார்
(ருஷியக் கதை)

-6-
அணா

ஈசுவரன் இருக்கும் இடம்

எல்லாப் பிராணிகளையும் யந்திரத்தில் ஏற்றி வைத்த பொம்மைகளைப் போல் தன் மாயா சக்தியால் ஆட்டி வைத்துக் கொண்டு அவைகளின் இருதயத்திலே ஈசுவரன் நிற்கிறான்.

—பகவத் கீதை.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

போதனைக் கலை

சிறந்த வாத்தியார்கள் மிக்க கலைத் திறமையோடு போதிப்பதைக் கண்டால், என் நண்பர் ஒருவர் அதிக உற்சாகம் அடைவார். காலேஜ் மாணவராகத் தாம் சேர்ந்த முதல் வருஷத்தில் நடந்த ஒரு சம்பவத்தை என்னிடம் அவர் சொல்லியிருக்கிறார்.

கணிதம் என்றால் என் நண்பருக்கு முன்னெல்லாம் கட்டோடு பிடிக்காது. 'ஒரு வருஷ காலம் இந்த அல்ஜீப்ரா கணக்கைக் கட்டி யழவேண்டுமே!' என்ற துயரத்துடன் லெக்சர் அறையில் முதல் நாள் அவர் உட்கார்ந்துகொண்டிருந்தாராம். அப்போது, தலைமைப் புரொபஸர் பிரவேசித்தார். முதல் பிரசங்கத்தைப் புரொபஸர் வெகு சுவாரஸ்யமாக ஆரம்பித்தார்: "எங்கே, இதை நன்றாய்க் கவனியுங்கள், பார்க்கலாம். உங்கள் கவன சக்தியை நான் சோதிக்கப் போகிறேன்."

இப்படிச் சொல்லிவிட்டு, பிளாக் போர்டில் $1+\frac{1}{8}+\frac{1}{9}+\frac{1}{27}+\ldots$ என்ற முடிவில்லாத கணித வரிசையை எழுதத் தொடங்கினார். தமாஷாகப் பேசிக்கொண்டே பிளாக் போர்டு முழுவதும் இதைத் தொடர்ந்து எழுதிவிட்டார்.

கடைசியில், "நண்பர்களே, இதை நான் இன்னும் நீட்டிக்கொண்டே போகலாம்; ஊழூழி காலம் நீட்டலாம். இதற்கு முடிவே இல்லை. இந்த அறை முழுவதும் இதை நீட்டலாம். பூமியெங்கும் நீட்டி, நட்சத்திர மண்டலத்துக்கே போய் விடலாம். அங்கும் இது முடியாது. அதற்கப்பாலும் போகும். எங்கே, இந்த வரிசையைக் கூட்டித் தொகை சொல்லுங்கள் என்றால், நீங்கள் என்ன சொல்வீர்கள்? சாத்தியம் இல்லை என்றுதானே? அதுதான் இல்லை. கூட்டுவது வெகு சுலபம். வியாழக்கிழமை காலை 9- மணிக்கு வாருங்கள். அந்த ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன்" என்றார்; போய்விட்டார்.

கணிதம் வறட்டுப் பாடம் என்ற வெறுப்புப் போய் விட்டது. அதிலும் கலைச்சுவை உண்டு என்று நண்பருக்குத் தோன்றிவிட்டது.

—கென்னத் டபிள்யூ. காமிரான், 'ரோட்டேரியன் மகஸீன்.'

January '53 Regd. No. M. 4975

மஞ்சரி

நந்தன - தை

ஊரும் உலகமும் 1
சிதருத கண்ணுடி 3
ரமணர்: வாழ்வும் வாக்கும் 4
நகர வாகன நிலை .. .. மெட்ராஸ் ஸிட்டி கார்ப்பரேஷன் 7
திரும்பும் வழியில் 8
உங்கள் கடிகாரம் 12
க்விஸ் 16
குழந்தை பத்திரம் .. .. பேரெண்ட்ஸ் மகஸீன் 17
தந்தி எப்படி வந்தது? .. .. அ. இ. ரேடியோ 22
பாபுராவ் பதில் சொல்லுகிறுர் .. .. பிலிமிண்டியா 27
வைத்தியப் புதுமைகள் 29
ஆயுத மன்னன் விடுதலை .. .. பிளிட்ஸ் 32
'கீத கோவிந்த' ஆசிரியர் .. ..பாரதி 37
புருஷர்களே, உஷார் .. ..ஃப்ரீ இந்தியா 40
கார்ட்டூன் கதம்பம் (படம்) 44
தீயுடன் போர் 46
பூமிக்கு அபாயம் .. ..ந்யூ காஸில் க்ரானிக்கிள் 49
கென்யா பயங்கரம் .. ..எவ்வரி படீஸ் வீக்லி 53
ஆண் - பெண் ரகஸ்யம் 59
மல் வித்தை .. ..சுதேசமித்திரன் - தமிழ் நாடு 63
இனித் திக்க வேண்டாம் .. .. .. மாடர்ன் ரெவ்யூ 67
இல்லா நாட்டுச் செய்தி .. .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 71
கடவுள் வந்தார் .. .. லியோ டால்ஸ்டாய் 78
போதனைக் கலை .. .. காமிரான் (3-ஆம் அட்டை)

ஆண்டு 6] நந்தன-தை :: :: ஜனவரி 1953 [இதழ் 2

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

அமெரிக்க ஜனாதிபதி பதவி ஏற்கப் போகிற ஐஸன்ஹோவர் தம்மைச் சந்திப்பதாகச் சொன்னால், தமக்குச் சம்மதமே என்கிறார் ஸ்டாலின். ஐஸன்ஹோவர் இதுபற்றி ஏதும் அபிப்பிராயம் சொல்ல மறுத்துவிட்டார். ஆனால், அவர் ஆட்சியில் ஸெக்ரடரி அவ் ஸ்டேட் பதவி ஏற்க இருக்கும் டல்லீஸ் அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார். உலக சமாதானத்துக்குக் கணிசமான திட்டங்கள் எவையேனும் ஸ்டாலின் வகுத்திருந்தால், அவற்றை ஐக் சர்க்கார் அநுதாபத்தோடு கவனிக்கத் தயார் என்கிறார் டல்லீஸ். இதற்கிடையில் அமெரிக்கா சென்று ஐக்கைப் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் சந்திக்கப் போகிறாராம். அமெரிக்க கோஷ்டி, ஸோவியத் கோஷ்டி என்று உலகம் இரண்டாகப் பிளவு பட்டிருக்கிறது. இரண்டுக்கும் பிரசாரப் போர் நடக்கிறது. உண்மையிலேயே ஐக்-ஸ்டாலின் சந்திப்பு நடந்து கணிசமான உலக சமாதானத் திட்டம் தோன்றினால் உலகத்துக்கே நல்லதுதான். புது வருஷம் அந்த நன்மையைக் கொண்டு வருமா?

ஆந்திர மாகாணம் உடனே வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்து ஆந்திர தேசபக்தர் ஸ்ரீராமுலு உயிர்த் தியாகம் செய்துவிட்டார். இந்த லட்சியத்துக்கு இவ்வளவு பெரிய தியாகம் பொருத்தமோ, இல்லையோ; அவருடைய தியாகம் அளவிடற்கரியது. இதில் இரண்டு வித அபிப்பிராயத்துக்கு இடம் இல்லை. அவர் மரணத்தைப் பின்பற்றி ஆந்திரத்தில் சிறிது கலவரம் நடந்தது வருந்தத் தக்க விஷயம். ஆனால், சென்னை மிக அமைதியாக இருந்தது குறிப்பிடத் தக்கது. சென்னை தமிழ்நாட்டுக்கே உரியதென்றும், அது நீங்கிய ஆந்திரப் பிரதேசங்களைக் கொண்டு ஆந்திர மாகாணத்தை உடனே அமைப்பதென்றும் கூறி, அதற்கான நடவடிக்கைகளை நேரு மேற்கொண்டிருக்கிறார். ஒரு மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதென்றால், பற்பல சிரமங்கள் உண்டு. ஆகவே, பொறுமையாக இந்திய சர்க்காருடன் ஒத்துழைத்து, சகோதரருடன் பாகப் பிரிவினை செய்து கொள்வது போல் தமிழரை விட்டு நட்போடு பிரிவதுதான் ஆந்திரருக்கு அழகு. ஆனால், சில

ஆந்திரர் அப்படிச் செய்ய இஷ்டமின்றி இன்னமும் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருப்பதுதான் விநோதம்.

* * *

பாகிஸ்தானின் அரசியல் அமைப்புச் சட்டம் இன்னும் பூர்த்தியாய்த் தயாராகவில்லை. அதன் அரசியல் அமைப்பின் அடிப்படை அம்சங்களை வகுக்கும் யாதாஸ்து ஒன்றைப் பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை முன் ஆஜர் செய்திருக்கிறார்கள். இஸ்லாம் தர்மத்துக்கு விரோதமாக எந்தச் சட்டமும் தயாராகாதபடி ஐந்து பேரடங்கிய கமிட்டி ஒன்று எப்போதும் பார்த்துக்கொள்ளுமாம். "இது முல்லாக்கள் ஆட்சியாகத்தான் இருக்கப் போகிறது" என்று 'ஈவினிங் ஸ்டார்' போன்ற பாகிஸ்தான் பத்திரிகைகளே கண்டிக்கின்றன. இது மட்டுமா? பாகிஸ்தான் ராஜ்யத் தலைவர் எந்தக் காலத்திலும் ஒரு முஸ்லிமாகவே இருக்கவேண்டுமாம்! அரசியலில் சகல மக்களுக்கும் சம உரிமை வேண்டும் என்ற தத்துவத்தை உலகனைத்தும் ஒப்புக்கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் இப்படி ஒரு நவீன ராஜ்யம் சமய வேற்றுமையை அடிப்படையாகக்கொண்டு அமைகிறதென்றால், அதைக் கண்டு நாம் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

* * *

மழையில்லை, மழையில்லை என்று தவித்ததுபோக, தாங்காத மழையும் புயலும் தோன்றி, தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் பெருஞ் சேதம் விளைத்துவிட்டன. கடல் வேறு பொங்கிக் கரையோரமுள்ள சில கிராமங்களில் அட்டூழியம் புரிந்துவிட்டது. உணவுப் பயிர்கள் நாசமாயின; கால் நடைகள் மாண்டன; குடிசைகள் காற்றில் பறந்தன. சில நூறு மனிதர்களும் இறந்தார்கள். புயலால் கஷ்டத்துக்குள்ளான குடும்பங்களுக்குச் சர்க்கார் ஓரளவு உதவி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், ஏற்கனவே உணவு பற்றாக்குறையால் ராஜ்யம் முழுவதுமே அவதிப்படும்போது, ராஜ்யத்தின் 'நெற்களஞ்சிய'மான தஞ்சை, திருச்சிப் பிரதேசங்களில் பயிரழிவு ஏற்பட்டிருப்பது ராஜ்யத்துக்கே துரதிருஷ்டமாகும். அந்தப் பிரதேசங்களின் விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் சர்க்கார் மிகவும் தாராளமாக உதவி புரிந்து, உணவு உற்பத்தி இடையூறுகளைப் போக்குவது அவர்களுடைய கடமையாகும்.

தியாக புத்தி வேண்டும்

ஆதி காலத்தில் யக்ஞத்தில் ஆகுதி கொடுக்கும்போது, 'இது எனதல்ல; இந்திரனுடையது' என்பார்கள் நம் முனிவர்கள். இன்றும் அதுபோல் நாம் நம் நிலத்திலிருந்தோ தொழிற்சாலையிலிருந்தோ உற்பத்தி செய்யும் அனைத்தையும், 'இவையெல்லாம் எனக்காக அல்ல; சமூகத்துக்காக' என்று அளிக்க முன் வர வேண்டும். அப்போதுதான் இன்றையச் சிக்கல்களெல்லாம் தீரும்.

—வினோபா பாவே

சிதறாத கண்ணாடி

★

எடுவார்டு பெனடிக்டஸ் என்ற ரசாயன சாஸ்திரி பாரிஸில் இருந்த தம் லாபரட்டரியின் மாடிப் படியில் ஒரு சமயம் ஏறிப் போகும்போது, தம் கையில் வைத்திருந்த ஒரு புட்டியைக் கை தவறிக் கீழே போட்டுவிட்டார். அது தரையில் விழுந்ததும் திகிலோடு கண்ணாடித் துண்டைப் பொறுக்கக் கீழே இறங்கினார். ஆனால் நெருங்கிப் பார்த்த போது, புட்டி பல இடங்களில் நொறுங்கியிருந்தாலும், துளியும் சிதறாமல் முழுசாக இருந்தது.

இதெப்படி என்று அவருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அந்தப் புட்டியில், பல வருஷங்களுக்கு முன் எப்போதோ ஸெலுலோஸ் கலந்த திரவத்தை ஊற்றி வைத்திருந்ததாக ஞாபகம் வந்தது. அது இப்போது வற்றிப் போய்விட்டாலும் அதிலிருந்த ஸெலுலோஸ், புட்டிக்குள் ஏடுபோல் படிந்து கிடந்தது. இதனால்தான் புட்டி நொறுங்கிய பின்னும் துண்டு துண்டாகச் சிதறவில்லை என்று தெரிந்தது.

வேறு ஜோலிகள் இருக்கவே பெனடிக்டஸ் அப்புறம் இந்த விஷயத்தை அடியோடு மறந்துவிட்டார். சில நாள் கழித்து, அவர் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது, மோட்டார் விபத்து ஒன்று நேர்ந்தது. அந்தக் காரின் முன் பக்கக் கண்ணாடி உடைந்து அதன் பாகங்கள் துண்டு துண்டாகச் சிதறவே, அதில் உட்கார்ந்திருந்த அழகியின் முகமெல்லாம் ஒரே வெட்டுக் காயம் ஏற்பட்டது. பாவம்! அதைப் பார்க்கவே அவருக்குச் சகிக்கவில்லை.

உடனே பெனடிக்டஸுக்கு அன்று லாபரட்டரியில் புட்டி விழுந்தது நினைவுக்கு வந்தது. விரைவாக வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார். அந்தப் புட்டியை மறுபடியும் நன்றாகக் கவனித்துவிட்டு, ஸெலுலோஸ் திரவம் தயாரித்தார். அதை ஒரு பெரிய கண்ணாடித் துண்டின்மேல் கொட்டி மெழுகினார். மேலே அதே மாதிரி இன்னொரு கண்ணாடித் துண்டை வைத்து நன்றாக அழுத்தினார். உடையாத கண்ணாடியைக் கண்டு பிடித்துவிட்டார் பெனடிக்டஸ். அதுமுதல் கண்ணாடி சிதறி ஆபத்து ஏற்படாதபடி அநேகமாக எல்லாக் கார்களிலும் இப்படி ஸெலுலோஸ் ஒட்டிய கண்ணாடியையே உபயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

—லாரன்ஸ் கால்டன்

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர் இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

அன்னையாரின் சமாதி: ரமண மகரிஷிகளின் தாயார் அவருடன் இருந்து வரத் தொடங்கியபோது இந்த மாமுனிவர் தம் அன்னையாருடன் அதிகமாகப் பேசுவதில்லை. அவருடைய தரிசனத்துக்கு வரும் ஆண்களுடனும் பெண்களுடனும் பேசும் அளவுக்குக்கூடப் பேசுவதில்லை. தம்மைப் பெற்ற தாய் என்பதற்காகத் தனியே பேசிச் சல்லாபம் செய்ய அவருக்கு என்ன இருக்கிறது? அவ்விடத்துக்கு வரும் அன்பர்கள் பகவானிடம் எவ்வளவு பக்தியுடன் இருக்கிறார்கள் என்பதை அன்னையார் கவனித்தார். அவருடைய உள்ளத்தில் பல காலமாக இருந்த சம்பிரதாயப்பற்றெல்லாம் மெல்ல மெல்ல நழுவத் தொடங்கின. அப்போது ஸ்கந்தாசிரமம் என்ற இடத்தில் ரமண பகவான் இருந்து வந்தார்.

அன்னையார் வந்தவுடன், அவ்விடத்தைவிட்டு இந்த ஞானப்பிரான் வேறு இடத்துக்குப் போய் விடுவாரோ என்ற அச்சம் அன்பர்களுக்கு உண்டாயிற்று. ஆனால் ரமண பகவான் அப்படிச் செய்யவில்லை. பற்றெல்லாம் அறவே ஒழிந்த பகவானுக்கு, இப்போது தம் அன்னையாரின் வரவால் மீண்டும் பழைய பந்தம் வந்துவிடும் என்ற அச்சம் உண்டாக நியாயம் இல்லை. ஆதலின் அன்னையார் வந்தமையால் அவர் தம்முடைய நிலையை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையாயிற்று.

வரவர அன்னையாருக்குத் தாமும் மற்றவர்களைப்போன்ற நிலையைப் பெற்றவரே என்ற உணர்வு வந்தது. ரமணர் அவ்வப்போது பழைய வாசனைகள் மாறுவதற்கு எற்ற வகையில் சில கதைகளையும் விஷயங்களையும் எடுத்துச் சொல்லி வந்தார். அதனால் அன்னையாருடைய உள்ளம் வர வரப் பக்குவம் அடைந்து வந்தது.

அடிக்கடி ரமண முனிவர் அன்னையாரிடம் வேடிக்கையாகப் பேசுவார். “அடடா! உங்கள் புடைவையை யாரோ தொட்டு விட்டார்களே! மடி போயிற்று; ஆசாரமே போய்விட்டது” என்று சொல்வார். “இதோ வெங்காயம், முருங்கைக்காய் எல்லாம் இந்தக் குழம்பில் போட்டிருக்கிறார்கள். அதைத் தொடக்கூடாது. தொட்டால் அப்புறம் மோக்ஷத்துக்குப் போக முடியாது” என்று பேசுவார்.

இப்படிப் பேசுவாரே ஒழிய அன்னையாரை இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவதே இல்லை. வர வர அந்த இடத்தின் சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் அன்னையார் பழகத் தொடங்கினர். வருகிற பக்தர்களுக்கு உணவு சமைத்து உண்ணச் செய்யும் தொண்டில் அவருக்கு அதிக ஊக்கம் இருந்தது.

இப்படி ஆறு ஆண்டுகள் அழகம்மையார் ரமண மகரிஷிகளுடன் இருந்து வந்தார். பிறகு அவர் நோய்வாய்ப்பட்டார். அந்தச் சமயங்களில் அவருக்கு வேண்டிய சிகிச்சைகளை இந்த முனிவர் தாமே செய்தார்.

தம்முடைய அன்னையாரின் இறுதிக் காலம் சமீபித்ததை ரமணர் உணர்ந்தார். தம்முடைய வலக் கையை அன்னையாரின் மார்பிலும், இடது கையைச் சிரசிலும் வைத்துக்கொண்டே அமர்ந்திருந்தார். அப்பெருமானுடைய ஹஸ்த தீக்ஷையால், அவருடைய தாயாராகும் பேறு பெற்ற அந்த ஆத்மாவின் உள்ளுணர்வில் பழைய வாசனைத் தொடர்கள் சுருள் சுருளாக ஓடின. பல பிறவிகளின் விளைவாகப் படலம் படலமாகச் செறிந்திருந்த பற்று அற்று, ஞானியினுடைய தீக்ஷா விசேஷத்தால் புடமிட்ட பொன்போல் அந்த ஆத்மா ஆகிவிட்டது.

பகல் எல்லாம் ஆசிரமத்தில் உள்ள யாரும் உணவு கொள்ளவில்லை. இரவு எட்டு மணிக்குப் பகவானுடைய அன்னையார் மகாசமாதி அடைந்தார். தமிழ் நாட்டின் ஞானச் சுடராகிய ரமணரைத் தந்த திருக்கோயில் அதுகாறும் நடமாடும் திருக்கோயிலாக நிலவியது. பிறகு அதன் நடை ஒழிந்தது. அதனைப் பூமிக்குப் புதையலாக்கி அதன்மேல் திருக்கோயில் எழுப்பும் நிலை வந்தது.

அன்னையாரின் உயிர் நீங்கின கணத்தில் ரமணர் எழுந்தார். “இனி நாம் சாப்பிடலாம்; வாருங்கள்; தீட்டும் இல்லை; ஒன்றும் இல்லை” என்று கூறித் தம் பக்தர்களுடன் சாப்பிடச் சென்றார்.

அன்னையார் பிரிந்த நாள் 1922-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் தேதி. மறு நாள் அவருடைய சடலத்தை அன்பர்கள் யாவரும் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். பாலி தீர்த்தக் கரையில் ஓரிடத்தில் சமாதியில் வைப்பதாகத் தீர்மானித்து, பஜனை செய்துகொண்டு அங்கே சென்றார்கள் கர்ப்பூரம், உப்பு, விபூதி இவற்றை நிரப்பி அன்னையாரின் திருவுடலைச் சமாதியில் வைத்து மேலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார்கள். தாயின் உருவிலே வந்த தாயுமானவராகப் பாவித்து அந்தப் பெருமானுக்கு மாதருபூதேசுவரர் என்று திருநாமம் இட்டு வழிபடுவாராயினர்.

ஆறு மாத காலம் வரையில் பக்தர்களும் ரமண முனிவரும் இந்த மாதருபூதேசுவரர் ஆலயத்துக்கு வந்து சென்றார்கள். பிறகு ரமணர் இந்த ஆலயத்துக்கு அருகிலேயே தங்கிவிட்டார். அங்கே பக்தர்கள் வந்தார்கள். அவ்விடத்தில் ஆசிரமம் எழுந்தது. அதுதான் உலகம் புகழும் ரமணாசிரமம். இன்றும் அந்த ஆசிரமம் மக்கள் சென்று வழிபடும் உயர்ந்த திருத்தலமாக விளங்குகிறது. (வாழ்வு)

நான் யார்? ஸப்த தாதுக்களால் ஆகிய ஸ்தூல தேகம் நான் அன்று. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்த

மென்னும் பஞ்ச விஷயங்களேயும் தனித் தனியே அறிகின்ற செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும் நான் அன்று. பேச்சு, நடை, அளித்தல், மலங்கழித்தல், இன்புறல் இவற்றைச் செய்யும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் நான் அன்று. சுவாஸாதி ஐந்தொழில்களேயும் செய்கிற பிராணுதி பஞ்ச வாயுக்களும் நான் அன்று. நினேக்கிற மனமும் நான் அன்று. சர்வ விஷயங்களும் எல்லாத் தொழில்களும் அற்று, விஷய வாசனேகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நான் அன்று.

இவையெல்லாம் நான் அல்லாவிடில் பின்னர் நான் யார்?

மேற்சொல்லிய யாவும் நான் அல்ல என்று 'நேதி' செய்து தனித்து நிற்கும் அறிவே நான்.

அறிவின் சோருபம் என்ன?

அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்.

சோருப தரிசனம் எப்போது கிடைக்கும்?

திருசியமாகிய ஜகம் நீங்கிய இடத்துத் திருக்காகிய சொரூப தரிசனம் உண்டாகும்.

ஜகம் உள்ளபோதே சோருப தரிசனம் உண்டாகாதா?

உண்டாகாது.

ஏன்?

திருக்கும் திருசியமும், கயிறும் பாம்பும் போன்றவை. பொய்யாகத் தோன்றிய பாம்பின் பயம் போனுல் ஒழிய அங்கே இருப்பது கயிறு தான் என்ற ஞானம் உண்டாகாது. அதுபோலக் கற்பிதமான ஜகத்தின் திருஷ்டி நீங்கினுலொழிய அதிருஷ்டமான சொரூப தரிசனம் உண்டாகாது.

திருசியமாகிய ஜகம் எப்போது நீங்கும்?

அறிவு, தொழில் அனைத்துக்கும் காரணமான மனம் அடங்கினுல் ஜகம் மறையும். (வாக்கு)

சிறுவனின் சமயோசித புத்தி



ஒரு சிறுவன் அவசரம் அவசரமாக ஒரு ஷாப்பில் புகுந்தான்.

"ஸார், ஸார்; சீக்கிரம், சீக்கிரம்! மச்சுக் கொக்கியில் துணி மாட்டிக் கொண்டு என் அப்பா தொங்குகிறுர்..." என்றுன்.

"என்ன வேண்டும்? கத்தரிக்கோலா, ரம்பமா? அல்லது யாராவது ஆளே உதவி செய்ய வர வேண்டுமா?" என்று கேட்டார் கடைக்காரர்.

"அதெல்லாம் வேண்டாம், ஸார். சட்டென்று என் காமிராவுக்கு ஒரு ரோல் ஃபிலிம் கொடுங்கள்."

—பில் கார்ல்வெல்.



நகர வாகன நிலை

1. சென்னை நகரத்தில் உள்ள மொத்த மோட்டார் கார் 7,842
2. ,, லாரி 1,363
3. ,, பஸ் 523
4. ,, மோட்டார் ஸைக்கிள் 1,184
5. ,, மோட்டார் கார் 300
6. ,, ஆட்டோ ரிக்ஷா 150
7. ,, டிராம் கார் 108
8. ,, ஒற்றை மாட்டு வண்டி 431
9. ,, கை வண்டி 4,500
10. ,, வாடகை வண்டி 410
11. ,, ரிக்ஷா 3,250
12. ,, டிராம் பாதையின் நீளம் 32 மைல்
13. ,, போலீஸ் பீட் 64
14. ,, நகர பஸ்வில் மைலுக்குச் சத்தம் 7 பை
15. ,, டாக்ஸி காரில் மைலுக்குச் சத்தம் 12 அணா. 4 நிமிஷத்தாமதத்துக்கு 2 அணா கட்டணம். (குறைந்தது ரூ. 1 கட்டணம்)
16. ,, ஆட்டோ - ரிக்ஷாவில் மைலுக்குச் சத்தம் 4 அணா; 5 நிமிஷத் தாமதத்துக்கு (1 அணா; குறைந்த பட்சம் அணா 6)
17. ,, மோட்டார் வாகன வரி வருமானம் ரூ. 41,39, 964.
18. ,, மோட்டார் லைசென்ஸ் கட்டண வருமானம் ரூ. 2,89,873.

—'மெட்ராஸ் ஸிடி கார்ப்பரேஷன்'

திரும்பும் வழியில்

"ஸீதை பரிசுத்தமானவள்" என்று அக்கினி சொல்லி ராமன் அவளை எற்றுக்கொண்டதும் சிவபெருமான் ராமனைப் பார்த்து, "ராமா, நீ தாமரைக் கண்ணன் என்று புகழ் படைத்த மகாவிஷ்ணுவே. இனி அயோத்திக்குத் திரும்பு. பரதனையும் கௌசல்யையையும் தேற்று. மற்றவர்களும் மகிழ்ச்சி அடையும்படி செய். ராஜ்ய பாரத்தை எற்று இட்சுவாகு வம்சம் நிலை பெறும்படி செய். பிறகு அசுவமேதம் செய்து புகழை அடைந்து கடைசியில் தேவ லோகத்துக்கு வா. இதோ மனித உலகில் உன் தந்தையாக இருந்த தசரதன் இருக்கிறான். நீ செய்த நல்வினையின் பயனாக இந்திரலோகம் அடைந்திருக்கிறான். லட்சுமணனுடன் உன் தந்தையை நீ வணங்கு" என்றார்.

ராமன் லட்சுமணனுடன் தசரதனை வணங்கினான். தசரதனும் ராமனை அணைத்துக்கொண்டு, "ராமா, எனக்கு நீ இல்லாத தேவலோகமும், அங்கே தேவரிஷிகள் எனக்குச் செய்த வெகுமானமும் பிடிக்கவில்லை. உண்மையைச் சொல்லுகிறேன். கைகேயி உன்னைக் காட்டுக்கு அனுப்ப என்னிடம் சொன்ன சொற்கள் இன்னும் என் உள்ளத்தில் இருக்கின்றன. இதெல்லாம் ராவணனைக் கொல்லத் தேவர்கள் செய்த எற்பாடு என்று இப்பொழுது தெரிகிறது. உன்னை லட்சுமணனுடன் க்ஷேமமாகக் காணும்போது எவ்வளவு இன்பமாக இருக்கிறது, தெரியுமா? காட்டிலிருந்து திரும்பி வந்த உன்னைக் காணக் கௌசல்யை அதிருஷ்டம் செய்

உலகில் சிறந்த இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

திருக்கிருள். பட்டாபிஷேகம் செய்துகொண்டு சிம்மாசனத்தில் அமரும் உன்னை அயோத்தி மக்கள் கண்டு மகிழ்வார்கள். இனி உன் தம்பிமாரோடு நீண்ட ஆயுளுடன் ராஜ்யத்தை ஆண்டு வா'' என்று ஆசிர்வதித்தான்.

ராமன் கை கூப்பி, ''தாய் கைகேயிக்கும் தம்பி பரதனுக்கும் அநுக்கிரகம் செய்ய வேண்டும். 'பிள்ளையுடன் உன்னை விட்டுத் தொலைக்கிறேன்' என்று தாங்கள் இட்ட சாபம் பலிக்க வேண்டாம்'' என்று கேட்டுக்கொண்டான்.

''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லித் தசரதன் லட்சுமணனை இறுகத் தழுவிக்கொண்டான். பிறகு, 'சீதையோடு கூடிய ராம னுக்கு நீ பணிவிடை செய்து வந்த தால் எனக்கு உன்னிடம் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? இந்திரன் முதலிய தேவர்களும் ராமனை வழி படுகிருர்கள். அவனுக்கு ஆயுள் முழுவதும் பணிவிடை செய்து வா'' என்ருன். சீதையை நோக்கி, ''முதலில் உன்னை ஏற்காததற்காக ராமனிடம் கோபம் கொள்ளாதே. உன் தூய்மையை மெய்ப்பிக்கவே ராமன் இப்படிச் செய்தான். ராமன்தான் உனக்குத் தெய்வம். நீ இவனுக்குச் சிறிதும் குறைவின் றிப் பணிவிடை செய்ய வேண்டும்'' என்று கூறிவிட்டு விமானத்தோடு இந்திரலோகம் சென்ருன்.

பிறகு கைகூப்பி நிற்கும் ராமனை நோக்கி இந்திரன், ''ராமா, என்ன வேண்டுமோ, கேள்'' என் ருன். அதற்கு ராமன், ''எனக் காக உயிரிழந்த குரங்குகள் காய மின்றி உயிர் பெற்று எழுந்திருக் கட்டும். குரங்குகள் இருக்கும் இடத்தில் அகாலத்திலுங்கூட

மரங்கள் மலர்களும் கனிகளும் நிறைந்து விளங்க வேண்டும். நதிகளும் தெளிந்து ஓட வேண்டும்'' என்று வேண்டினான். இந்திரனும், ''அப்படியே ஆகட்டும்'' என்றான். உடனே குரங்குகள் தூங்கி விழித்தவை போல எழுந்து ராமனை வணங்கின. தேவர்கள் எல்லாருமே ராமனை வாழ்த்திவிட்டுச் சென்றார்கள்.

அன்று இரவு ராமன் கவலையற்று உறங்கினான். மறு நாள் காலையில் விபீஷணன் ராமனிடம் வந்து, ''தாங்கள் குளித்துவிட்டு ஆடை ஆபரணம் அணிந்து நான் செய்யும் பூஜையை ஏற்று அருள வேண்டும்'' என்று வேண்டினான். உடனே ராமன் அவனை நோக்கி, ''சுக்கிரீவன் முதலியவர்களை வரச் சொல்லு. எனக்காகப் பரதன் தாபமுற்று இருக்கிறான். அவன் இல்லாமல் நான் குளிக்கவோ ஆடை முதலியவற்றை அணியவோ மாட்டேன். இதோ நான் இப்படியே அயோத்திக்குத் திரும்பிப் போகப் போகிறேன். அயோத்தி இங்கிருந்து வெகு தூரமோ?'' என்றான்.

உடனே விபீஷணன், ''இங்கே புஷ்பகம் என்ற விமானம் இருக்கிறது. குபேரனிடமிருந்து ராவணன் இதைப் பிடுங்கி வந்தான். ராவணன் இறந்த பிறகு நான் இதை உங்களுக்காக வைத்திருக்கிறேன். இதில் ஏறி நீங்கள் ஒரே நாளில் அயோத்திக்குப் போய் விடலாம். என்னிடம் அன்பும் அருளும் உங்களுக்கு இருக்குமானால் இங்கே ஒரு நாள் தங்கி என் உபவாசத்தை ஏற்க வேண்டும்'' என்று வணக்கமாகக் கூறினான். அதற்கு ராமன், ''விபீஷணா, என்னிடம் உனக்கு மரியாதை உண்டு என்று எனக்கும் தெரியும். நான் உன் வார்த்தையை மறுப்பதாக எண்ணாதே. பரதனைக் காண வேண்டுமென்ற ஆவல் அதிகமாக இருக்கிறது. என்னைத் திரும்ப அழைத்துப் போகச் சித்திரகூடத்துக்கு அவன் வந்திருந்தானே! கௌசல்யை முதலிய தாய்மார்களையும் பட்டணத்து ஜனங்களையும் காணவேண்டும் என்றும் எனக்கு ஆவலாக இருக்கிறது. தாமதமின்றி விமானத்தைக் கொண்டு வரச் சொல்லு'' என்றான்.

விபீஷணன் அப்படியே செய்தான். பிறகு ராமன் விபீஷணனிடம், ''இந்த வானரர்களுக்கு அணி முதலியவை கொடு. உயிரைக்கூட மதியாமல் இவர்கள் போர் புரிந்தார்கள்'' என்றான். அவ்விதமே விபீஷணனும் வழங்கினான்.

பிறகு ராமன் சீதையையும் லட்சுமணனையும் அழைத்துக் கொண்டு விமானத்தில் ஏறினான். சுக்கிரீவன், விபீஷணன் முதலியவர்களிடம் ராமன் விடை கொடுக்கும்படி கேட்டபோது, அவர்களும் அயோத்திக்கு வருவதாகச் சொல்லவே அவர்களையும் அதில் ஏற்றிக் கொண்டான். ஆகாயத்தில் பெரிய மேகம் காற்றில் மிதந்து செல்வது போல் அந்த விமானம் பறந்து சென்றது. ராமன் விமானத்தில் இருந்தபடியே சீதைக்கு இலங்கையின் அழகைக் காட்டினான். போர்க்களத்தைக் காட்டி, ''இங்கே உனக்காக ராட்சசருக்கும் வானரருக்கும் போர் நடந்தது; லட்சுமணன் இந்திரஜித்தைக் கொன்ற இடம் இது. நான் உனக்காக ராவணனைக் கொன்றேன். மந்தோதரி இங்கே வந்து புலம்பினாள். இதோ சமுத்திரம் தெரிகிறது.

உனக்காக இதில் அணை கட்டி னேம்'' என்ருன்.

சீதையின் விருப்பப்படி சுக்கிரீவன் முதலியவர்களுடைய மனைவிமாரும் அயோத்திக்குப் புறப்பட்டு வந்தார்கள். பரத்துவாஜருடைய ஆசிரமம் அருகில் வந்தவுடன் அதையும், அங்கிருந்தபடியே சரயூ நதியையும் அதன் கரையில் உள்ள அயோத்தியையும் ராமன் சீதைக்குக் காட்டினன். குரங்குகள் விமானத்திலிருந்து அயோத்தி எப்படி இருக்கிறதென்று எட்டிப் பார்த்தன. ராமன் பரத்துவாஜருடைய ஆசிரமத்தில் இறங்கி அவரை வணங்கினன். பிறகு, "ராஜ்பத்தில் எல்லாரும் க்ஷேமந்தானே? பரதன் ராஜ்யகாரியத்தில் ஈடுபட்டிருக்கிருனு? தாய்மார்கள் உயிருடன் இருக்கிருர்களா?'' என்று கேட்டான். அதற்கு முனிவர், "பரதன் அழுக்குப் படிந்தவனுய் ஜடை தரித்துக் கொண்டு உன் பாதுகைகளைப் பூஜித்து உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருன். மற்றப்படி எல்லோரும் க்ஷேமம்'' என்ருர்.

"அயோத்திக்குப் போகும் வழியில் மரங்கள் அகாலத்தில் கூட அமிருதம் போன்ற பழங்களைக் கொடுக்கும்படி அருள் புரிய வேண்டும்'' என்று ராமன் வேண்டினன். முனிவரும், "அப்படியே'' என்று அருள் புரிந்தார்.

பிறகு ராமன் ஹநுமானைப் பார்த்து, "குகனிடம் போய் நான் க்ஷேமமாகத் திரும்பி வந்ததாகச் சொல். அவன் மிகவும் சந்தோஷப் படுவான். அவன் என் உயிர்த் தோழன். அவன் அயோத்திக்குப் போகும் வழியையும் பரதனைப் பற்றியும் சொல்லுவான். அயோத்திக்குப் போய்ப் பரதனிடம் நடந்ததை எல்லாம் சொல். அவன் முகத் தோற்றத்தைக் கண்டு அவன் எந்த எண்ணத்துடன் இருக்கிருன் என்று அறிந்து வா'' என்ருன்.

பிறகு முனிவர்களைப்போல் வாழும் பரதனைக் கண்டு ஹநுமான் மனமுருகி அவனிடம் ராமன் வருவதைத் தெரிவித்தான். பரதன் மிகவும் மகிழ்ச்சியுடன், ராமன் வருவதை முன்னிட்டு நகரத்தை அலங்கரிக்கும்படி சத்துருக்கினனிடம் சொன்னுன். பின்பு பரிவாரங்களோடும் கௌசல்யை, சுமித்திரை, கைகேயி முதலியவர்களோடும், சிறந்த மந்திரிகள் பின் தொடர ராமனை வரவேற்கச் சென்ருன். ராமன் வரத் தாமதமாயிற்று; அதனுல் பரதன் ஹநுமானை நோக்கி, "ஹநுமானே, நீங்கள் அவசரப்பட்டுச் சொல்லிவிட்டீர்களா? ராமனை இன்னும் காணவில்லையே!'' என்ருன்.

"இப்போதுதான் வானரசேனை கோமதி நதியைத் தாண்டுகிறது போல் இருக்கிறது. இதோ ராமனின் விமானம் சந்திரனைப்போல் பிரகாசித்துக்கொண்டு வருகிறது'' என்ருன் ஹநுமான்.

ராமன் முதலிய எல்லோரும் கீழே இறங்கிப் பரதனது வரவை எதிர்பார்த்து நின்ருர்கள். பரதன் கைகூப்பி ராமனுக்கு நல்வரவு கூறி வணங்கினன். ராமனுடைய உத்தரவுப்படி விமானம் தரையில் வந்து நின்றது. ராமன் பரதனை விமானத்தில் ஏற்றி மடிமேல் வைத்து அணைத்துக்கொண்டான். பிறகு லட்சுமணனையும் சீதையையும் வணங்கச் சொன்னுன். எல்லா வானரங்களையும் வீபீஷணன் முதலியவர்களையும் பரதனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.



உங்கள் கடிகாரம்

★

இந்த நாளில் கைக்கடிகாரம் கட்டுவது எல்லாருக்கும் வழக்கமாயிருக்கிறது. ஆனால், எது நல்லது, எது கெட்டது, கடிகாரத்தைப் பத்திரமாய் வைத்துக்கொள்வது எப்படி என்பவைபற்றி எவ்வளவு பேருக்குத் தெரியும்? கடிகாரம் செய்வதில் நிபுணரான ஹென்ரி ஃப்ரைட் என்ற நியூ யார்க் வாசி சொல்லும் யோசனைகளை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.

உங்கள் கடிகாரம் எவ்வளவு கணக்காக மணி காட்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? கடிகாரம் கணக்காக மணி காட்டி அதிக நாள் உழைக்க வேண்டுமானால், உங்களுக்குப் பிடித்த மட்டும் பெரிய கடிகாரமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும். கடிகாரம் பெரிதாக இருந்தால்தான் அதைச் செய்வதும் ரிப்பேர் பார்ப்பதும் சுலபம். அது சரியாகக் காலமும் காட்டும்; அதன் பாகங்களும் உறுதியாக இருக்கும். ஆண்களுக்கான நல்ல கைக் கடிகாரம் ஒருவருடைய ஆயுட் காலம் வரைக்கும் சரியான மணி காட்டி உழைக்கும். பெண்களுக்கான நல்ல கடிகாரம் 25 வருஷகாலம் சரியாக உழைக்கும். இப்போது வருஷந்தோறும் விலையாகும் பல லட்சம் கடிகாரங்களுள் கைக் கடிகாரத்தின் எண்ணிக்கையே அதிகம். கைக் கடிகாரம் சௌகரியமானது. ஆனால் பைக் கடிகாரந்தான் கைக் கடிகாரத்தைவிடச் சரியாக மணி காட்டும்.

எவ்வளவோ ஆட்டத்துக்கும் அசைவுக்கும் ஈடு கொடுக்க நேரும் கைக் கடிகாரம் ஓரளவாவது சரியாக மணி காட்டுவதே ஆச்சரியந்தான். ஆனாலும் 20 அல்லது 25 பவுன் விலையுள்ள உயர்ந்த கைக் கடிகாரம் நாளொன்றுக்கு ஐந்தே ஸெகண்ட் வித்தியாசத்தில் மணி காட்டும். நாளொன்றுக்கு 25 ஸெகண்ட் வித்தியாசத்தில் மணி காட்டும் கடிகாரத்தைக்கூட நல்ல கடிகாரம் என்றே சொல்லுகிறார்கள். 15 பவுன் முதல் 25 பவுன் வரையில் விலையுள்ள அடுத்த ரகக் கைக் கடிகாரங்களில் நாளொன்றுக்கு ஒரு நிமிஷ வித்தியாசம் இருப்பதைத் தவறாக நினைப்பதில்லை. 10 பவுன் விலையுள்ள கடிகாரம் நாளொன்றுக்கு 5 நிமிஷ வித்தியாசத்தில் மணி காட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

ஜுவல் ரகசியம்: சதா அசைந்துகொண்டே இருக்கும்

கடிகாரப் பகுதிகளில், உராய்வினால் ஏற்படும் சேதத்தைக் குறைப்பதற்காக ஜூவல் (வைரம் போன்ற கல்)களை வைக்கிறார்கள். நுட்பமான கடிகாரங்களிலெல்லாம் ஜூவல் இருக்கும். ஆனால், ஜூவல் இருக்கும் கடிகாரங்களெல்லாம் நுட்பமானவை என்று சொல்ல முடியாது. ஜூவல்களால் கடிகாரத்தின் விலை மதிப்பு ஒன்றும் உயராது. ஒரு டஜன் ஜூவலின் விலை ஒரு பவுன்தான். உராய்வினால் தேசம் ஏற்படும் ஏழு பாகங்களைக் காப்பாற்ற ஏழு ஜூவல் இருந்தால் போதும். உராய்வினால் தேசம் ஏற்படும் பாகங்கள் எல்லாவற்றையும் காப்பாற்ற 17 ஜூவல்கள் போதும். மிகவும் நுட்பமாகக் காலங் காட்டும் பைக் கடிகாரங்களில் 23 ஜூவல்கள் இருக்கும். ஆனால் போலியாக, நல்ல விலைக்கு விற்பதற்காக அவசியமில்லாத இடங்களில் ஜூவல்கள் வைத்த கடியாரங்களும் இருக்கின்றன. எனவே, ஜூவல் கணக்கைக் கொண்டு மட்டும் ஒரு கடிகாரத்தை நல்லதா கெட்டதா என்று தீர்மானிக்க வேண்டாம்.

கடிகாரத்தை எப்படிக் கவனிக்க வேண்டும்? துணிப் பிசிரும் தூசியுமே கடிகாரத்தின் முதல் விரோதிகள். சிறிய பகுதிகளின் அசைவை இவை தடுத்துவிடும்; எண்ணெயை இறுக வைத்துவிடும். திறமையுள்ள கடிகார ரிப்பேர்க்காரர் தவிர வேறு யாரும் உங்கள் கடிகாரத்தைத் திறக்க விடாதீர்கள். காற்றில் பறக்கும் தூசியும், மூச்சிலும் கை விரலிலும் உள்ள ஈரமும் கடிகார யந்திரத்தைக் கெடுத்துவிடும். ஆண்களுக்கான பெரிய கடிகாரத்தை இரண்டு வருஷத்துக்கு ஒரு முறையாவது சுத்தம் செய்து எண்ணெய் போட வேண்டும். சிறிய கடிகாரங்களை வருஷம் ஒரு முறையாவது அல்லது 18 மாதத்துக்கு ஒரு முறையாவது சுத்தம் செய்து எண்ணெய் போட வேண்டும். எந்த எண்ணெயும் இந்தக் கால எல்லைக்குள், ஒன்று உலர்ந்து போகும்; அல்லது இறுகிப் போகும். கடிகாரம் எவ்வளவுக்கெவ்வளவு சின்னதோ அந்த அளவுக்கு இந்த எண்ணெய்க் கோளாறும் சீக்கிரம் ஏற்படும்.

கடிகாரக் கண்ணாடி உடைந்துவிட்டால், கடிகாரத்தை ஒரு காகிதக் கவரில் போட்டு ரிப்பேர்க்காரரிடம் எடுத்துப் போக வேண்டும். துணியிலோ கைக் குட்டையிலோ சுற்றிக்கொண்டு போனால் துணிப்பிசிர் படியும்; முள் ஒடிந்து போகும். கடிகாரம் நுட்பமான யந்திரம் என்பதை மறக்க வேண்டாம்.

ஒரு நாளைக்கு ஒரு நேரம், இன்னொரு நாள் இன்னொரு நேரம் என்று சாவி கொடுப்பது கடிகாரத்துக்கு நல்லதல்ல. தினந்தோறும் காலையில் கடிகாரம் கட்டிக்கொள்ளும்போது சாவி கொடுக்கும் வழக்கத்தைப் பழகிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் ஒரு குறித்த நேரத்தில் முழுப் பலத்தோடும் அது தன் வேலையைத் தொடங்கட்டும். இப்படிச் செய்தால் அந்தக் கடிகாரம் ஒரே மாதிரி தினமும் ஓடும். உபயோகித்தாலும் சரி, உபயோகிக்காவிட்டாலும் சரி, ஒவ்வொரு நாளும் சாவி மட்டும் கொடுத்துவிடுங்கள். முழுச் சாவியும் கொடுக்கத் தவற வேண்டாம். அதிகச் சாவி (ஓவர் வைண்டிங்) ஏறி

விடுமே என்று பயப்பட வேண்டாம். சாவியில் கொஞ்சம் இறுக்கம் தோன்ற ஆரம்பித்தவுடன் சற்று ஜாக்கிரதையாகவே கடைசிச் சுற்றுக்களைச் சுற்றுங்கள். மெயின் ஸ்பிரிங் இறுகியதாகக் கைக்குத் தோன்றியதும் நிறுத்தி விடுங்கள். கடிகார முள்ளைப் பின்புறமாகத் திருப்பக்கூடாது என்பது பாட்டி கதை. சாவி கொடுக்கும்போது சாவியை முன்னும் பின்னுமாகச் சுற்றுவது அவசியமில்லை; ஆனால் சௌகரியம்.

பெண்களுக்கான கடிகாரங்களைக் கைப் பையில் போட்டுக் கொண்டு போகக்கூடாது. ஆண்களுக்கான கடிகாரங்களைவிடப் பெண்களின் கடிகாரங்கள் கெடுவது இரண்டு மடங்கு. பூச்சுப் பவுடர், தூசி, பெண்கள் உபயோகிக்கும் எண்ணெய், ஸென்ட்களில் உள்ள எண்ணெய் இவைகள் பெண்களின் கைப் பையிருந்து கடிகாரத்துக்குள் புகுந்து அதைக் கெடுத்து விடுகின்றன. கைகளைக் கழுவும்போது கைக் கடிகாரங்களைக் கழற்றி விடுங்கள். சமைக்கும்போது கடிகாரம் கட்டிக் கொள்ள வேண்டாம். சூடு கடிகார எண்ணெயைப் பாதிக்கும். ஒரு துளி தண்ணீர் கடிகாரத்துக்குள் புகுவதைவிட வெகு சுலபமாக நீராவி புகுந்துவிடும். தண்ணீரும் சரி, நீராவியும் சரி, யந்திர பாகங்களில் துருவேறச் செய்துவிடும். படுக்கும்போது கடிகாரம் கட்டிக் கொள்ள வேண்டாம். படுக்கையின் துணிப் பிசிர் உள்ளே புகுந்துவிடும். கடிகாரம் தவறித் தண்ணீரில் விழுந்துவிட்டால், உடனே அதை எடுத்துப் 'பென்ஸைன்' திரவத்தில் போட்டு விடுங்கள். பிறகு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ரிப்பேர்க்காரரிடம் கொண்டு போங்கள். தாமதித்தால் பெரிய கேடே நேர்ந்துவிடலாம்.

திறமை மிகுந்த ரிப்பேர்க்காரர்களிடமே கடிகாரத்தைக் கொடுங்கள். அரை குறை ரிப்பேர்க்காரர்கள் கெடுத்துவிடுவார்கள். செலவுக்குச் சோம்பி, விலையுயர்ந்த கடிகாரத்தைக் காலத்தில் சுத்தம் செய்து எண்ணெய் போடத் தவற வேண்டாம். எல்லாப் பாகங்களையும் தனித்தனியாகப் பிரித்து, தக்க திரவத்தில் ஊற வைத்து, தூசி, அழுக்கு, பிசுக்கு எல்லாவற்றையும் போக்க வேண்டும். பிறகு ஒழுங்காகப் பூட்டிச் சரியான காலங் காட்டும்படி செய்ய வேண்டும். தாற்காலிகமான அரை குறை ரிப்பேர் செய்ய வேண்டாம்.

கடிகாரம் வாங்கும்போது: நிறையப் பணம் போட்டுக் கடிகாரம் வாங்க விரும்பினால் நம்பகமான வியாபாரியிடம் வாங்குங்கள். கடிகாரம் அலங்காரத்துக்காக வேண்டுமா, சரியான மணி காட்ட வேண்டுமா என்பதை வியாபாரியிடம் சொல்லுங்கள். தினந் தோறும் அதை எப்படி அணிந்து கொள்ளப் போகிறீர்கள் என்பதையும் அவரிடம் சொல்லுங்கள்.

சில தங்க வெள்ளிக் கேஸ்கள் மெல்லிசாக இருப்பதால், யந்திரத்தைச் சரியாகப் பாதுகாக்க அவைகளால் முடியாது. கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையே வைத்துக் கேஸை நசுக்கிப் பாருங்கள். பின் பக்கம் அமுங்கினால் உறுதி போதாது. 'கோல்டு ஃபில்டு', 'ரோல்டு கோல்டு,' 'தங்க முலாம் கேஸ்' இவை அதிக நாள் உழைப்பதில்லை; தரத்தைப்

பொறுத்தே உழைப்பு இருக்கும். சில ஊர்களில் சில ரசாயனப் புகை பட்டு வெள்ளிக் கேஸ் கறுத்து விடும். துருப் பிடிக்காத எஃகுக் கேஸ் நன்ருக உழைக்கும்; வேர்வை அடிக்கடி பட்டாலும் இதன் நிறம் மாருது. இந்த மாதிரி கேஸ்களின் ஓரத்தில் ரோல்டு கோல்டு அல்லது லேசான தங்க ரேக்கு வைத்திருந்தால் அவைகளும் நாள்பட உழைப்ப தில்லை; பலம் குறைந்த இந்த உலோகங்கள் நாளாவட்டத்தில் நழுவிவிடும்.

'ஸ்விஸ் கடிகாரம்' என்ருல் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனல் இது எல்லா ஸ்விஸ் கடிகாரங் களுக்கும் பொருந்தாது. ஸ்விட் ஜர்லந்துக்காரர்கள் உலகத்தி லேயே சிறந்த கடிகாரங்களைச் செய்வது உண்மைதான். ஆனல் அவர்களே மலிவான, மட்டரகக் கடிகாரங்களையும் செய்கிருர்கள்!

சரியான காலங் காட்டும் கடி காரம் சாதாரண விலைக்கு வேண்டு மானல், விலையுயர்ந்த கேஸ்கள் கொண்ட கடிகாரத்தை விரும்ப வேண்டாம். போட்ட பணத்துக்கு மோசமில்லாத நல்ல கடிகாரம் அப்போதுதான் கிடைக்கும். 'குரோனேகிராஃப்', தேதி அல் லது திதி இவைகளைக் காட்டும் கடிகாரங்களுக்கு விலை அதிகம்.

'வாட்டர் ப்ரூஃப்' என்று விளம்பரம் செய்கிற கடிகாரம் சதுர அங்குலத்துக்கு 35 பவுண்டு அழுத்தமுள்ள தண்ணீரை 5 நிமிஷ நேரம் எதிர்த்து நிற்க முடியும். 'வாட்டர் ரெஸிஸ் டன்ட்' என்ற விளம்பரமுள்ள கடிகாரங்களுக்கு இப்படிப்பட்ட நிர்ணயம் ஒன்றும் இல்லை. இவை களுக்குள் ஈரம் புகுமா, புகாதா என்று சொல்ல முடியாது. நிஜ மாகவே 'வாட்டர் ப்ரூஃப்' ஆக இருக்கும் கடிகாரங்களுக்குள் தூசி, துருப் பிடிக்கும் ஆவி, ஈரம் எதுவும் புக முடியாது.

கடிகாரம் வாங்குவதற்கு முன் அதை நன்ருகப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். கேஸின் மூடி இறுக மூடிக்கொள்ள வேண் டும்; ரிப்பேர்க்காரரின் ஆயுதம் போட்டால்தான் திறக்க முடிய வேண்டும். முள்ளைத் திருப்புவ தற்காகச் சாவிக் கோலை மேலே இழுத்தவுடன் அது முள் திருப்பும் நிலைக்கு வந்துவிட வேண்டும். அழுத்தினல் உடனே சாவி கொடுக்கும் நிலைக்குப் போய்விட வேண்டும். இரண்டுங் கெட்ட நிலையில் அது நிற்கவே கூடாது. சுற்றும்போது சாவிக் கோல் லேசாகவும் சுலபமாகவும் கரகரப் பின்றியும் சுற்ற வேண்டும். நல்ல கடிகாரத்தின் 'டிக் டிக்' சத்தம் ஒரு முறைப்படி இருக்கும்; விரை வாக இருக்கும்; தெளிவாக இருக் கும். கடிகாரம் கடையில் ஆறு மாதமோ அதற்கு மேலோ இருந் திருந்தால், கடைக்காரர் அதைச் சுத்தம் செய்து எண்ணெய் போட் டுத் தரச் சம்மதிக்க வேண்டும்.

விலையுயர்ந்த கடிகாரத்தைக் கண்டவரிடமும் வாங்கக்கூடாது. நம்பகமான வியாபாரியானல்தான், கடிகாரம் செய்தவன் கொடுத் துள்ள உத்தரவாத காலத்துக்கு மேலும் கடிகாரத்தின் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்; ஏதாவது கோளாறு நேரும்போதும், கடிகாரம் பல வருஷகாலம் உழைப் பதற்கும் வேண்டிய உபாயத்தை அவரே செய்து கொடுப்பார்.

க்விஸ்

[இதோ சில கேள்விகள். எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 88-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்]

1. 'ஆழிபோல் மின்னி,
வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம்
உதைத்த சரமழை போல்
வாழ உலகினில்
பெய்திடாய்...''

என்று பாடியவர் யார்?

2. 'திருக்கடன்மல்லை' என்று பழைய சரித்திர நூல்களில் வரும் ஊர் இதோ இவைகளுள் ஒன்று: மயிலாப்பூர், மகாபலிபுரம், மல்லேசுவரம், திருக்கடவூர். எது என்று சொல்வீர்களா?

3. புராணங்களின்படி தர்மபுத்திரருக்கு முன்பே ஓர் அரசன் சூதாடி அரசிழந்திருக்கிறான். அவன் யார்?

4. எட்டாவது எட்வர்டு மன்னர் (இப்போது விண்ட்ஸர் ட்யூக்) முடி துறந்தபோது, அவரை முடி துறக்கச் செய்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி யார் என்று தெரியுமா?

5. ராஜாஜி 1937-இல் சென்னை முதல் மந்திரியாக இருந்தபோது இங்கே கவர்னராக இருந்தவரை ஞாபகம் இருக்கிறதா?

6. இந்தியர்களாக இருந்தும் இங்கிலாந்து கோஷ்டியுடன் சேர்ந்துகொண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் பந்தயங்களில் ஆடிய கௌரவம் மூன்று பேருக்கு உண்டு. அவர்கள் யார்?

7. பம்பாயிலிருந்து டில்லி அதிக தூரமா? சென்னையிலிருந்து டில்லி அதிக தூரமா?

8 சென்னை, பம்பாய், டில்லி, கல்கத்தா இவைகளிலிருந்து புறப்படும் இரவு விமானங்கள் எங்கே சந்திக்கின்றன?

9. அமெரிக்க ஜனாதிபதி தம் பதவிக்காலம் முடியுமுன் இறந்துபோனால், உடனே அந்தப் பதவியை வகிக்க வேண்டிய உரிமை முறையே மூன்று பேருக்கு உண்டு. அவர்கள் யார் யார்?

10. மலைப் பாம்புக்கு விஷம் உண்டா, இல்லையா?

11 அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஒருவர் தையல்காரராக இருந்தவர். அவர் யார்?

12. படத்தில் உள்ளபடி சரிவான ஒரு பலகையில் (ஏ) செங்குத்தாய் நிற்கும் செங்கல், (பி) படுத்திருக்கும் செங்கல் - இந்த இரண்டில் எது வேகமாய் வழுக்கும்?



குழந்தை பத்திரம்

★

நம்முடைய அஜாக்கிரதையாலும், சரியானபடி குழந்தை களை நாம் பழக்காததாலுமே பெரும்பாலும் குழந்தை களுக்கு விபத்துக்கள் நேர்கின்றன சின்னஞ்சிறு குழந்தைகள் விஷயத்தில் நாம் கைக்கொள்ள வேண்டிய 'பத்திர விதிகள்' சென்ற மாத 'மஞ்சரி'யில் வெளியாயின மற்றும் சில விதிகளை இங்கே காணலாம்.

2. பள்ளிப் பிராயத்தில்

குழந்தை பள்ளிக்கூடத்தக்குப் போகத் தொடங்கினல், பிறகு அவனைப்பற்றி நாமே முழுவதும் கவனித்துக்கொள்வது என்பது சாத்தியமில்லை. வீட்டில் ஜாக்கிரதையாயிருக்க நாம் கற்றுக் கொடுத்தால் வீட்டுக்கு வெளியிலும் தன்னைத் தானே பார்த்துக் கொள்ளும் திறமை அவனுக்கு ஏற்படும். பள்ளிக்கூடத்தில் வாத்தியார் பொதுவாகச் சில எச்சரிக்கைகள் செய்வார்; அவ்வளவுதான். மீதிப் பொறுப்பு முழுவதும் பெற்றோரைச் சேர்ந்ததே. எங்கெங்கே குழந்தை ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய சில விவரங்களைக் கீழே தருகிறோம்.

தெருக்கள்: சிறுவன் தெருவில் நடந்து செல்லும்பொழுது கீழ்க் கண்ட விதிகளை அநுசரித்து நடக்கும்படி போதிக்க வேண்டும்:

1. தெருவில் இறங்கி எதிர்ப் பக்கம் செல்லவேண்டுமானல் நின்று ஏதாவது மோட்டார்-காரோ, வேறு வண்டியோ வருகிறதா என்று இரண்டு பக்கமும் பார்த்துவிட்டுப் பிறகு செல்ல வேண்டும்.

2. தெருக்கள் சேருமிடத்தில் மட்டுமே தெருவைக் கடந்து செல்லலாம். எந்த இடத்திலும் ஓடக்கூடாது.

3. தெருவில் விளையாடுவது கூடாது.

4. தெருவின் பக்கத்தில் நடைபாதை இல்லாவிட்டால் வலது பக்க ஓரத்தில் வெகு ஜாக்கிரதையாக நடந்து செல்லவேண்டும்.

5. பள்ளிக்கூடத்துக்குப் போக எந்த வழி ஜாக்கிரதையாக இருக்குமோ அந்த வழியாகவே செல்லுவது நல்லது.

காப்பிரைட்; பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: அக்டோபர், '52), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

சைக்கிள்: சிறுவன் சைக்கிள் விடும்பொழுது, இந்த விஷயங்களைக் கவனிக்கவேண்டியது முக்கியம் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்:

1. எப்படிச் செல்லவேண்டும், எந்தப் பக்கமாய்ச் செல்ல வேண்டும் என்பவை போன்ற விதிகளை முழுவதும் ஒழுங்காய்ப் பின்பற்றி நடக்கவேண்டும். போலீஸ்காரன் கொடுக்கும் ஒவ்வொரு சமிஞ்ஞையையும் சரியாய்ப் புரிந்து கொள்ள வேண்டும்.

2. ரோட்டின் இடது பக்கமே செல்லவேண்டும். ஒன்றன்பின் ஒன்ருக வரிசையாகச் செல்ல வேண்டுமே தவிர, வளைந்தும் நெளிந்தும் சைக்கிளை விடலாகாது.

3. இரண்டு பேர் ஒரே சைக்கிள்மீது ஏறிச் செல்வது ஒரு போதும் கூடாது.

4. வேறு வண்டி எதுவும் வராமலிருக்கிறதா என்று பார்த்துக்கொண்ட பிறகே, தெருவில் இறங்கவேண்டும். நிறுத்தி வைத்திருக்கும் மோட்டார்களின் பின்புறமிருந்து அவைகளைக் கடந்து வரும்பொழுது, அவை புறப்படவில்லையா என்று ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டு வர வேண்டும்.

5. தெருவில் வண்டிகளும் ஜனக்கூட்டமும் அதிகமாக இருக்கும்போது சைக்கிளை விட்டு இறங்கி, மெதுவாய் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு செல்ல வேண்டும்.

6. இரவில் விளக்குடன் செல்ல வேண்டும். வெளுப்பான ஆடை அணிவது நல்லது.

7. சைக்கிளின் பிரேக், விளக்கு முதலியவை நன்ருயிருக்கின்றனவா என்று கவனித்து, எப்பொழுதும் பழுதில்லாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

விளையாட்டு மைதானம்: விளையாடுவதற்கென்று ஒதுக்கியிராத மைதானங்களில் சிறுவன் விளையாடாமல் இருக்கும்படி பெற்ரேர்களும் வாத்தியார்களும் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும். சிறுவன் விளையாடும்பொழுது யாராவது பெரியவர்கள் கூடவே இருந்து கவனிக்க வேண்டும். பின்கண்ட விதிகளை அவன் அநுஷ்டிக்கச் செய்யவேண்டும்:

1. 'சறுக்கு பலகை' (ஸ்லேடு) மீது சறுக்கி விழும்போது, கால் கீழ்ப்புறமும் தலை மேல்புறமும் இருப்பது அவசியம்.

2. 'ஆடு பலகை' (ஸீ-ஸா) மீதிருந்து இறங்குவதற்கு முன் மற்றவருக்கு எச்சரிக்கை செய்துவிட்டு இறங்கவேண்டும்.

3. பந்து விளையாடுவதென்ருல் மைதானத்தில் அதற்கென்று ஏற்பட்டதும் சிறு குழந்தைகள் இல்லாததுமான இடத்தில் விளையாட வேண்டும்.

4. பெரிய பள்ளங்கள், கட்டிட வேலை நடக்கும் பகுதிகள், குடியில்லாத வீடுகள், ரெயில் வண்டிப் பாதைகள் முதலியவை உள்ள இடங்களுக்கருகில் விளையாடக் கூடாது.

நீச்சல்: குழந்தைக்கு நீந்தக் கற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம். அவனுக்கு எவ்வளவு நன்ருய் நீந்தத் தெரிந்துவிட்டாலும் சில விஷயங்களைப்பற்றி எடுத்துரைப்பது நல்லது:

1. ஜில்லென்று குளிர்ந்திருக்கும் ஜலத்தில் தொப்பென்று குதிக்கக் கூடாது; அப்படிக் குதித்தால்

உடம்பு மரத்துப் போய்விடும். குளிர்ந்த ஜலத்தில் மெதுவாய் இறங்கவேண்டும். அதில் அதிக நேரம் நீந்தினால் சீக்கிரமே சோர்வு உண்டாகிவிடும். ஆகவே, கரையை விட்டு அதிக தூரம் நீந்திச் சென்று விடக்கூடாது.

2. கை ஓய்ந்து போகாதிருப்பதற்காகச் சற்று நேரத்துக்கொரு முறை ஜலத்தில் அமைதியாய் மிதக்கவேண்டும்; அல்லது கை வீச்சை மாற்ற வேண்டும்.

3. ஜலத்தில் இறங்குமுன், பாறைகள், மரங்கள் முதலியவை நீருக்கடியில் இல்லாமல் இருக்கின்றனவா என்று பார்த்து இறங்க வேண்டும். 8 அடி ஆழமுள்ள இடத்தில் நீந்துவதுதான் அபாயமில்லாமல் இருக்கும்.

4. இருட்டில் நீந்துவது தவறு.

5. முழுகிப் போவதுபோல் பாசாங்கு செய்து வேடிக்கைக்காகக் கூச்சலிட்டுப் பிறரை உதவிக்கு அழைக்கக் கூடாது.

6. ஏதாவது சிரமம் ஏற்பட்டால் பயந்துபோகாமல் அமைதியாக இருக்கவேண்டும்; கைகளால் அடித்துக்கொண்டு அதிகமாகக் கூக்குரலிட்டு ஓய்ந்துபோகலாகாது. உதவிக்கு வந்தவருக்குச் சௌகரியமாக நடந்துகொள்ள வேண்டும்.

7. நீந்துவதில் தனக்குள்ள சாமர்தியம் இன்ன அளவுதான் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

3. வீட்டில்

பொதுவாக வீட்டில் இந்த அம்சங்களைக் கவனிக்கவேண்டும்:

வசிக்கும் **அறையும்** படுக்கை அறையும்:

1. அறையில் குளிர் காய்வதற்குக் கணப்பு இருந்தால், அதைச் சுற்றிலும் ஒரு தட்டி வைத்து மறைத்து வைப்பது நல்லது. புகைப் போக்கியை எப்பொழுதும் பழுதில்லாமல் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.

2. உயரத்திலிருந்து ஏதாவது எடுக்கவேண்டும் என்றால், அழுத்தமான ஒரு முக்காலியையோ அல்லது சிறிய ஏணி ஒன்றையோ உபயோகிப்பது நல்லது. கால்கள் ஆடிப்போன நாற்காலிகளின்மீது ஏறுவது அபாயம்.

3. கீழே விரித்திருக்கும் பாய்களின் ஓரங்கள் சுருட்டிக்கொள்ளாமல் இருக்கும்படி பார்க்க வேண்டும்.

4. விளையாட்டுச் சாமான்களில் எவையும் காலின்கீழ் அகப்பட்டுத் தடுக்கிவிடாமல் இருக்கும் பொருட்டு அவைகளை ஜாக்கிரதையாய் அப்புறப் படுத்திவிட வேண்டும்.

5. நைந்துபோன மின்சாரக் கம்பிகளை நீக்கிப் புதியவற்றை அமைக்கவேண்டும். டெலிபோன் கம்பியிலோ அல்லது வேறு ஏதாவது கம்பியிலோ கால் மாட்டிக்கொண்டு குழந்தை தடுக்கி விழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

6. குழந்தைக்கு ஜன்னலின் மேல் ஏறும் வயது வந்துவிட்டால், அது விழாதபடி ஜன்னலுக்குத் தகுந்த பாதுகாப்புக்கள் அமைக்க வேண்டும்.

7. குழந்தைக்குப் போட்டிருக்கும் கட்டிலின் இரண்டு பக்கச் சட்டங்களையும் எப்பொழுதும் உயர்த்தியே வைக்க வேண்டும். குழந்தையைத் தனியே தூங்கவைத்து மார்பு வரையில் மட்டுமே போர்த்தி விடவேண்டும்.

8. ஊசி, குண்டூசி, கத்தரிக்கோல் போன்ற வஸ்துக்கள் கீழே சிதறிக் கிடக்கும்படி விடாமல், அவைகளை உடனே பெட்டியில் போட்டு, குழந்தையின் கைக்கு எட்டாத இடத்தில் வைப்பது நல்லது.

9. படுக்கை அறையில் சிறு விடிவிளக்கு வைத்து, அதற்குரிய எலெக்ட்ரிக் ஸ்விட்சைக் கதவிலேயே அமைத்து வைப்பது நல்லது. உள்ளே வரும்பொழுது அந்த ஸ்விட்சைப் போட்டுக்கொண்டால், இருட்டில் தடுக்கி விழாமலும் எதன்மீதாவது முட்டி மோதிக்கொள்ளாமலும் இருக்கலாம்.

10. நெருப்புப் பெட்டிகளைக் குழந்தையின் கண்ணில் படாமல் மறைத்து வைக்கவேண்டும்.

11 நடக்கும் வழியில் நாற்காலியோ மேஜையோ இல்லாமல் அவைகளை ஓரமாய்ப் போட வேண்டும்.

சமையலறை:

1. கீழே எதாவது கொட்டி விட்டால் உடனே துடைக்க வேண்டும்.

2. எரியும் அடுப்பில் எதாவது 'கெட்டில்' வைத்திருந்தால், அதன் பிடியை உள்பக்கமாய்த் திருப்பி வைப்பது நல்லது.

3. அடுப்பில் இருக்கும் பாத்திரத்தை இறக்குவதற்கு இடுக்கி வைத்துக்கொள்வது நல்லது. இல்லாவிட்டால் கையில் பட்டுக் கை கொப்புளித்துப் போய்விடும்.

4. பினைல், லைசால் போன்றவைகளைச் சிறு குழந்தைகள் எடுக்காதபடி ஒதுக்குப் புறமாய் வைக்கவேண்டும்.

5. அடுப்புத் தீ பட்டு உடனே பற்றிக்கொள்ளக்கூடிய சாமான் எதையும் அடுப்புக்கு அருகே போட்டு வைக்கலாகாது.

6. பீரோவின் கதவு, பீரோ டிராயர் ஆகியவைகளை எப்பொழுதும் சாத்தியே வைப்பது நல்லது.

7. யாரும் குழந்தையை வைத்துக்கொண்டு அகலமில்லாத பெஞ்சியிலோ நாற்காலியிலோ உட்காரக் கூடாது. அப்படி உட்கார்ந்தால் திடீரென்று குழந்தையுடன் உருட்டியடித்துக்கொண்டு விழும்படி நேரலாம்.

ஸ்நாந அறை:

1. மருந்துகளை அலமாரியின் மேல் தட்டில் வைக்கவேண்டும். புட்டிகளின்மீது மருந்துகளின் பெயரை எழுதி ஒட்டிவைப்பது நல்லது. மருந்துகளை உட்கொள்ள வேண்டிய முறைகளைச் சரியாய்க் கவனித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

2. க்ஷவர 'பிளேடு'களை, உபயோகித்தபின், கண்ட இடத்தில் எறியாமல் தனியாக ஒரு டப்பாவில் போட்டு மூடி வைக்க வேண்டும்.

3. வழுக்கி விழாமல் இருக்கும் பொருட்டு, ஸ்நானத் தொட்டியின் கீழே ரப்பர்ப் பாய் போட்டுவைப்பது நல்லது.

4. ஜலமும் மின்சாரமும் ஒன்று சேர்ந்திருப்பது மிகவும் அபாயம். ஸ்நான அறையில் ரேடியோ வைத்துக்கொள்ளக் கூடாது. ஈரக் கையுடன் எலெக்ட்ரிக் ஸ்விட்சை ஒருபோதும் தொடலாகாது.

மாடிப் படி:

1. மாடிப்படியில் ஒரு சாமானும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இருந்தால் எதன் மீதாவது இடறிவிழும்படி நேரும்.

2. மாடிப் படியின் தொடக்கத்திலும் முடிவிலும் கதவுகள் இருந்தால் குழந்தை ஏறி விழாமல் மூடி வைக்க வசதியாயிருக்கும்.

3. மாடி நல்ல வெளிச்சமாக இருக்கவேண்டும். மாடிப்படி விளக்குக்கு, படியின் முதலிலும் முடிவிலும் எலெக்ட்ரிக் ஸ்விட்ச் இருப்பது நல்லது.

4. மாடிக் கைபிடி உறுதியாய் இருக்கவேண்டும். அதை ஒரு கையால் பிடித்துக்கொண்டு போவது நல்லது.

5. மரப் படியாக இருந்தால் படிகள் அழுத்தமாக இருக்க வேண்டும். அதன்மேல் கிழிந்த பாய் எதையும் விரிப்பது தவறு.

6. படிகள் மிகவும் வழுவழுப்பாயிருந்தால் வழுக்கி விழ நேரும்.

முற்றமும் கார் ஷெட்டும்:

1. பலகை, பெட்டி இவைகளில் ஆணிகள் இருந்தால் அவற்றை எடுத்து அப்புறப்படுத்தி விடவேண்டும். சிறிய மரத்துண்டுகள் கீழே சிதறிக் கிடக்கும்படி விடக்கூடாது.

2. மண்வெட்டி, கோடரி போன்ற சாமான்களை ஓரமாய்ப் போடவேண்டும். அவற்றை நிமிர்த்தி வைக்கக்கூடாது.

3. ஷெட்டிலிருந்து காரை எடுக்குமுன் கதவுகளைத் திறந்து வைக்கவேண்டும். குழந்தை எவனும் ஷெட் வாசலில் இல்லையா என்று கவனித்தப் பிறகே காரை மெதுவாய்க் கிளப்பி வெளியில் கொண்டு வரவேண்டும்.

4. வழியில் கண்ணாடித் துண்டுகள், உடைந்த தகரம் போன்றவை இறைந்து கிடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

5. குப்பை கூளம், காகிதம் குவிந்து போகும்படி விடக்கூடாது. எண்ணெய் மெழுக்குத் துணிகள் குவிந்து கிடந்தால் சுலபமாய்த் தீப் பற்றிக்கொள்ளும்.

— 'சங்கர்ஸ் வீக்லி'

மின்சாரத்தின் விந்தைகள்
பல; அவற்றுள் ஒன்றுன—

தந்தி எப்படி வந்தது?

எஸ். மகாலிங்கம்

'ஸார், தந்தி' என்ற இந்தக் குரலை நீங்கள் அடிக்கடி கேட்டிருக்கலாம். சிவப்பு முண்டாசு கட்டிய ஒருவன் வெகு வேகமாக சைக்கிளில் வந்து "ஸார், தந்தி" என்று சொல்லி, ஒரு கவரைக் கொடுத்துவிட்டு, கையெழுத்து வாங்கிக்கொண்டு, மறுபடியும் சைக்கிளில் ஒரு தாவுத் தாவி வந்த சுவடே தெரியாமல் மறுகணம் மறைந்துவிடுகிறுன். தந்தி என்றுல் பல வருஷங்களுக்கு முன் சிலபேர்தான் கேள்விப்பட்டிருப்பார்கள். தந்தி ஒரு வீட்டுக்கு வந்துவிட்டால் ஒரே பரபரப்பாக இருக்கும். பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் எல்லாரும் வந்துவிடுவார்கள். தந்தியின் கவரை உடைக்காமல், விஷயத்தை அறிந்துகொள்ளாமல், எல்லாரும் "ஓ" என்று அழக்கூட ஆரம்பித்து விடுவார்கள். கை, கால் நடுங்கும். உடம்பு சிலிர்க்கும். வேர்வை கொட்டும். கண் பூத்துவிடும். கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் வரும். நாவு குழறும். சொல் தடுமாறும். ஏனென்றுல், முன்பெல்லாம் சாவோ யாருக்காவது அபாயமான நிலேயோ இருந்தால்தான் தந்தி வரும். ஆகையால் அந்தக் காலத்தில் தந்தி என்றுல் ஒரே பயம். ஆனுல், இந்தக் காலத்தில் தந்தியைக் கண்டு நடுங்குவாரில்லே. கல்யாணத்துக்கும் தந்தி; சாவுக்கும் தந்தி. 'சென்னையிலிருந்து புறப்படப் போகிறேன்' என்று ஒரு தந்தி. 'புறப்பட்டு விட்டேன்' என்று மற்றொரு தந்தி. வாழ்த்துக்கும் தந்தி; வருத்தத்தைத் தெரிவிப்பதற்கும் தந்தி. இப்படி உலகமே தந்தி மயமாக இருக்கிறது.

எட்டாம் ஹென்றிக்கு எவ்வளவு மனைவிமார்கள், அசோக சக்கரவர்த்தி எவ்வளவு கல்தூண்கள் நட்டார், ராபர்ட் புரூஸ் எவ்வளவு தரம் தோல்வி அடைந்தான், கஜினி முகம்மது எவ்வளவு தடவை படையெடுத்தான், ராவணனுக்கு எத்தனை தலைகள் என்று கேட்டால் டக் என்று உடனே எல்லாரும் சொல்லிவிடுகிறுர்கள். ஆனுல், தந்தியைப் பற்றிக் கேட்டால், ஒன்றும் தெரியாது. தந்தி ஆரம்பித்ததே ஒரு பெரிய கதை. முன் காலத்தில் ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்துக்குச் செய்திகளை அனுப்புவதும், அங்கிருப்பவரிடமிருந்து செய்தி அறிவதும், மிகவும் கடினமாக இருந்தன. அதிகப் பணம் செலவழித்து, ஆட்களின் மூலம் செய்திகளை அனுப்பி வைத்தார்கள். இதனுல்

காப்பிரைட்: அகில இந்திய ரேடியோ நிலேயம் (தமிழ்ப் பேச்சு: 15-7-'52-இல் நிகழ்ந்தது), திருச்சி.

கால தாமதம் ஏற்பட்டது. மேலும் செய்தி போய்ச் சேருமோ சேராதோ என்ற கவலை. காட்டைக் கடக்கவேண்டும்; மலையைத் தாண்டவேணடும். நடு வழியில் திருடர்களின் தொல்லை. கொடிய விலங்குகளின் ஆபத்து. இவ்வளவையும் சமாளித்துச் செய்திகளை நம் முன்னோர்கள் அனுப்பினார்கள். அரசர்களும் செல்வச் சீமான்களும் பணம் செலவழித்து இப்படிச் செய்தியை அனுப்பமுடியும். ஆனால், ஏழை மக்கள் என்ன செய்வார்கள்? அப்படியிருந்தும், வசதிகள் இல்லாத அந்தக் காலங்களில் செய்திகளைப் பரப்ப, பல முறைகளைக் கையாண்டார்கள். உயரமான குன்றுகளின்மேல் இரவில் தீ மூட்டியும் பகலில் புகை மண்டலங்களை எழுப்பியும் செய்திகளைத் தெரிவித்தார்கள். தீக்கொழுந்தின் தன்மையிலிருந்தும் புகை மண்டலங்களின் எண்ணிக்கைகளிலிருந்தும், அவைகள் எவ்வளவு வேகத்துடன் மேலே எழும்புகின்றன என்பதிலிருந்தும், தூரத்தில் இருப்பவர்கள் செய்தியை அறிந்துகொண்டார்கள். ஆனால், குன்றுகள் இல்லாத, காடுகள் நிறைந்த பிரதேசங்களில் தாரை, தம்பட்டங்கள் அடித்துச் சப்தத்தை உண்டுபண்ணி, ஒருவருக்கொருவர் செய்தியைத் தெரிவித்துக் கொண்டார்கள். புறாக்களின் மூலமும் செய்திகளை அனுப்பி வந்தார்கள். இப்பொழுதும் இந்த வழக்கம் உண்டு.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஸர் ரோலண்ட்ஸ் ஹில் என்னும் ஆங்கிலேயர் செய்திகளை அனுப்புவதற்குப் பென்னி போஸ்ட் என்ற முறையை ஏற்படுத்தினார். இந்த முறை பிரபலமடைந்தது. பற்பல தூர தேசங்களுக்குக் குறைந்த செலவில் செய்திகள் அனுப்பி வந்தார்கள். வர்த்தகம் முன்னேறி ரெயில் வண்டியும் ஏற்படவே கடிதங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு விரைவில் போய்ச் சேர்ந்தன. தபால்களை மிக விரைவில் வெகுதூரம் எடுத்துச் செல்ல இப்போது ஆகாய விமானங்கள் பயன்படுகின்றன. தபால் மூலம் அனுப்புவதைவிட மிக விரைவாக அதிகத் தொலைவில் இருப்பவர்களுக்குச் செய்திகளை அனுப்ப வேண்டிய அவசியம் சில வேளை ஏற்படுகிறது; அப்படி விரைவாகச் செய்திகளை அனுப்பும் முறையைக் கண்டுபிடிக்கப் பலர் ஆராய்ச்சி செய்தார்கள். அந்த முயற்சியின் பயனாக 19-ஆம் நூற்றாண்டில் தந்தி டெலிபோன், கம்பியில்லாத் தந்தி இவை ஏற்பட்டன. இந்த மூன்று சாதனங்களும் மின்சார சக்தியால்தான் இயங்குகின்றன. முதல் முதல் மின்சார சக்தி குறித்து ஆராய்ச்சி செய்தவர்களுக்குள் பெஞ்சமின் ஃபிராங்க்ளின் பிரசித்தி பெற்றவர். இந்த மின்சார சக்தி மக்களின் வசதிகளுக்கான பல சாதனங்களில் இப்போது பயன்பட்டு வருகிறது. ஓர் ஆங்கில அறிஞர் கூறியபடி, இந்த உலகமே மூன்றுவிதமான சக்திகளால்தான் இயங்குகிறது: (1) மின்சாரம், (2) வெப்பம், (3) அன்பு.

1837-இல் அமெரிக்க விஞ்ஞானி ஸாமுவேல் மோர்ஸ் என்பவர், கம்பி குட்டையானாலும் நீளமானாலும், அதன் வழியாக மின்சார அலைகள் ஒரு கொடியில் செல்லும் என்பதை அறிந்தார்.

உடனே அப்படிச் செல்லும் மின்சாரத்தின் மூலம் செய்திகளை அனுப்பலாம் என்ற யோசனை அவருக்குத் தோன்றியது. மின்சாரத்தின் உதவியால் விரைவில் செய்திகளை அனுப்ப ஒரு வழியும் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த கருவிக்குத்தான் மோர்ஸின் 'தொனிக்கும் தந்திக் கருவி' (மோர்ஸ் ஸவுண்டர்) என்று பெயர்.

மோர்ஸ் தந்திக் கருவி மின்சாரக் காந்த சக்தியினால்தான் இயங்குகிறது. ஒரு தேனிரும்பைப் பட்டு அல்லது பருத்தி நூலால் சுற்றிய ஒரு கம்பிச் சுருளுக்குள் செருகி, சுருளின் வழியாக ஒரு பாட்டரியின் மூலம் மின்சாரத்தைப் பாய்ச்சினால், இரும்பு காந்தமாகிறது. இரும்பு ஆணிகளை அது ஆகர்ஷிக்கும். இதற்கு 'மின்சாரக் காந்தம்' என்று பெயர். மின்சாரம் பாயும் வரையில்தான் தேனிரும்பு காந்தமாக இருக்கும். மின்சாரம் பாய்வது நின்றவுடன் இரும்பு காந்த சக்தியை இழந்துவிடும். ஆகர்ஷிக்கப் பெற்ற இரும்பாணிகளும் கீழே விழுந்துவிடும். இப்படித் தோன்றிய அநித்திய காந்தத்துக்கு மின்சார காந்தம் என்று பெயர். மின்சார காந்தத்துக்குச் சாதாரண காந்தத்தை விடக் காந்த சக்தி அதிகம். இந்தக் காந்த சக்தியைக் கொண்டுதான் தந்திக் கருவிகள் வேலை செய்கின்றன.

ஒவ்வொரு தந்தி ஆபீஸிலும் ஒரு தந்திக் கட்டையும், தொனிக்கும் கருவி ஒன்றும் உண்டு. எல்லாத் தந்தி ஆபீஸ்களும் மின்சாரம் செல்லும் தந்திக் கம்பிகளால் இணைந்துள்ளன. தொனிக்கும் கருவியில் மின்சாரக் காந்தமும், அதற்குமேல் ஓர் இரும்புத் துண்டும் இருக்கின்றன. இரும்புத் துண்டு மேலும் கீழும் அசையக் கூடியது. இந்த இரும்புத் துண்டு, இரண்டு திருகாணிகளுக்கு நடுவில் இருக்கிறது. தந்திக் கட்டையும் தொனிக்கும் கருவியும் கம்பி மூலம் இணைந்திருக்கின்றன. தந்திக் கட்டை மின்சார பாட்டரியோடு இணைந்திருக்க, மின்சார பாட்டரி பூமியோடு பொருத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தந்தி வாங்கும் ஆபீஸிலுள்ள தொனிக்கும் கருவியின் மின்சாரக் காந்தத்தைச் சுற்றி இருக்கும் கம்பியைப் பூமியோடு சேர்த்திருப்பார்கள். தந்தி அடிக்கும் ஆபீஸிலுள்ள தந்திக் கட்டையை அழுத்தினால், மின்சார பாட்டரியிலிருந்து மின்சாரம் தந்திக் கம்பிக்குப் பாய்ந்து, தந்தி வாங்கும் ஆபீஸிலுள்ள தொனிக்கும் கருவியின் மின்சாரக் காந்தத்தை அடைகிறது. அங்கிருந்து பூமியின் வழியாகத் திரும்பவும் மின்சார பாட்டரிக்கு வந்துவிடுகிறது. ஏனென்றால், பூமியின் வழியாக மின்சாரம் சுலபமாகச் செல்லும். மின்சாரம் பாயும்போது மின்சாரக் காந்தம், காந்தத் தன்மையினால் தொனிக்கும் கருவியின் மேலுள்ள இரும்புத் துண்டை ஆகர்ஷிக்கும். உடனே இரும்புத் துண்டு, கீழுள்ள திருகாணிமீது பட, 'டிக்' என்ற ஒரு சப்தம் கேட்கும். தந்திக் கட்டையை அழுத்தாமல் விட்டுவிட்டால், மின்சாரம் பாய்வது நின்றுவிடும். மின்சாரக் காந்தம், காந்தத்தன்மையை இழந்தவுடன், இரும்புத் துண்டு மேல் நோக்கிச் சென்று, மேலுள்ள திருகாணியில் படும். உடனே 'டிக்' என்ற சப்தம் மறுபடியும் கேட்கும். தந்திக் கட்டையை அமுக்கி

உடனே விட்டுவிட்டால் 'கட' என்ற சப்தமும், அமுக்கிச் சிறிது நேரம் கழித்து விட்டால் 'கட்' என்ற சப்தமும் தொனிக்கும் கருவியிலிருந்து கேட்கும். இந்தக் 'கட', 'கட்' என்ற இரண்டு சப்தங்களையும் பலவிதமாகச் சேர்த்து எழுத்துக்களையும் எண்களையும் குறிக்கிறார்கள். இந்த முறைக்குத் தான் 'மோர்ஸ் சமிஞ்ஞை' (மோர்ஸ் கோட்) என்று பெயர்.

தொனிக்கும் கருவியில் இன்ன சப்தம் இவ்வளவு தரம் கேட்டால் இன்ன எழுத்தை அல்லது எண்ணைக் குறிக்கும் என்று மோர்ஸ் கோடில் சொல்லியிருக்கிறது. உதாரணமாக ஒரு 'கட' சப்தத்தை உண்டாக்கினால் E என்ற எழுத்தையும், ஒரு 'கட்' சப்தத்தை உண்டாக்கினால் T என்ற எழுத்தையும் குறிக்கும்.

அதே மாதிரியாக இரண்டு 'கட்' சப்தம் M என்ற எழுத்தையும், மூன்று 'கட்' சப்தம் O என்ற எழுத்தையும், இரண்டு 'கட' சப்தம் I என்ற எழுத்தையும், மூன்று 'கட' சப்தம் S என்ற எழுத்தையும் குறிக்கும். 5 'கட' சப்தம் ஐந்து என்ற எண்ணையும், ஒரு 'கட' நாலு 'கட்' சப்தங்கள் 1 என்ற எண்ணையும் குறிக்கும். இந்த மாதிரியாக எல்லா எழுத்துக்களுக்கும், எண்களுக்கும் சமிஞ்ஞை முறை இருக்கிறது. மோர்ஸ் கோடில் 'கட்' சப்தத்தைப் புள்ளியினாலும், 'கட' சப்தத்தை ஒரு சிறிய கோட்டினாலும் குறித்துக் காட்டியிருக்கிறார்கள். E, T- இந்த இரண்டு எழுத்துக்களும் ஆங்கில பாஷையில் அதிகமாக உபயோகமாவதால் E-க்கு ஒரு 'கட' சப்தத்தையும், T-க்கு ஒரு 'கட்' சப்தத்தையும் கொடுத்திருக்கிறார்கள். மோர்ஸ் சமிஞ்ஞை முறை மிகவும் எளிய வகையிலும் சாதுரியமாகவும் அமைந்திருக்கிறது. இந்த முறையினால் இப்போது ஒரு தந்திக் கம்பி வழியாக ஒரே காலத்தில் ஒரு நிமிஷத்தில் 500 எழுத்துக்களை அனுப்பலாம். தந்தியின் பயனை மக்கள் விரைவில் உணரலானார்கள். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள முக்கிய ஊர்கள் தந்திக் கம்பியினால் இணைக்கப்பெற்றன. டல்ஹௌஸி கவர்னர் - ஜெனரலாக இருந்தபோது 1853-ஆம் ஆண்டில் நம் நாட்டுக்கு முதல் முதலாக இந்தத் தந்தி முறை வந்தது.

கடலால் பிரிவுபட்டிருக்கும் நாடுகளையும் இணைக்கக் கடலுக்குள் கனத்த கம்பிகளைப் போட்டு அவற்றின் மூலம் செய்திகளை அனுப்புகிறார்கள். இந்தக் கடல் தந்திக்குக் 'கேபிள்' என்று பெயர். இப்போது மிகவும் பெரிய நகரங்களான சென்னை, பம்பாய், டில்லி, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் டெலிபிரிண்டர் முறையைக் கையாளுகிறார்கள். தந்தி கொடுக்கும் ஆபீஸில் மின்சார 'டைப்' அடிக்கும் கருவி ஒன்று இருக்கிறது. அதில் சாதாரண டைப்ரைட்டர் யந்திரம் எழுத்துக்களை அடிப்பதுபோல் அடித்தால், மின்சாரக் காந்த சக்தியின் மூலம் தந்தி வாங்கும் ஆபீஸிலுள்ள ஒரு கருவியில் சுற்றியிருக்கும் நாடா போன்ற காகிதச் சுருளில் செய்தி உடனுக்குடனே பதிவாகிறது. இந்தக் காகிதத்தின் ஒரு பக்கம் பசை தடவியிருக்கும். நாடாவைத் தந்தி ஆபீஸர் உடனே கத்தரித்துத் தந்திபாரத்தில் ஒட்டி விடுகிறார்.

கம்பிகள் இல்லாமலே மின்சார சக்தியினால் செய்திகளை ஆகாயத்திலுள்ள ஈதர் என்ற பொருளின் மூலம் வெகு விரைவில் அனுப்ப முடியுமென்பதை 1896-இல் இத்தாலிய விஞ்ஞானி மார்க்கோனி கண்டு பிடித்தார். அதன் பயனாகத்தான் நாம் ரேடியோவில் பாட்டுக்களையும் கதைகளையும் கவிதைகளையும் கட்டுரைகளையும் பிரசங்கங்களையும் கேட்க முடிகிறது. கடலில் செல்லும் சப்பல், ஆகாயத்தில் பரந்து செல்லும் விமானம், கடலுக்கு அடிப்பாகத்தில் செல்லும் சப்மரீன் இவைகளுக்குச் செய்தியை அனுப்பவும் இவைகளிடமிருந்து செய்திகளைத் தெரிந்துகொள்ளவும் முடிகிறது. இதனால் எவ்வளவோ உயிர்கள் மீள வழி இருக்கிறது.

தந்தி, கம்பியில்லாத தந்தி இவைகளின் பயனாகத்தான் வர்த்தகச் சரக்குகளின் விலைகளை அப்போதைக்கப்போது தெரிந்து கொள்ளுகிறோம்; உலகின் பல பாகங்களில் நடக்கும் விஷயங்களை உடனுக்குடனே தெரிந்துகொள்ள முடிகிறது. இந்தப் புதிய சாதனங்களினால் கடல் சூழ்ந்த உலகம் மிகவும் சுருங்கிவிட்டதாகத் தோன்றுகிறது. உலக க்ஷேமத்துக்கும், பொருள் உற்பத்திக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் இவை அவசியமாகிவிட்டன.

காவல் விளக்கு



அமெரிக்காவைச் சேர்ந்த உட்டா மாகாணத்தில் ஒரு பண்ணைக்குக் காட்டுக் கலைமான்கள் இரவில் வந்து வைக்கோலையெல்லாம் தின்றழித்தன. விளக்கைக் கண்டால் கலைமான்கள் அஞ்சி ஒதுங்கியிருக்கும் என்று அந்தப் பண்ணையின் முதலாளி வான் ஆல்மைன் என்பவர் எண்ணினார். ஓர் அரிக்கன் விளக்கை ஏற்றி வைத்தார். பிறகு நடந்ததை அவரே இதோ சொல்கிறார்:

"ராத்திரி வெகுநேரம் கழித்து ஜன்னல் வழியே பார்த்தேன். ஏதோ ஒரு வெளிச்சம் நகர்ந்துகொண்டேயிருக்கக் கண்டேன். கிட்டப் போய்ப் பார்த்தால், ஆண் கலைமான் ஒன்று என் விளக்கைத் தன் கொம்பிலே மாட்டிக்கொண்டு, பெண் கலைமான்கள் மேய்வதற்கு வெளிச்சம் காட்டிக்கொண்டிருந்தது!"

—'ரோனுக் வொர்ல்டு நியூஸ்'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபிலிமிண்டியா' நவம்பர் இதழில் வெளியானவை.

கேள்வி: இந்தியாவில் எப்போது போதுமான உணவுப் பொருள் கிடைக்கும்?

பதில்: ஒரு போதும் இல்லை. விதைக்கிறவர்களைவிட உண்ணுகிறவர்களை அதிகமாக உற்பத்தி செய்துவருகிறோமே!

* * *

கே: மனிதன் அநித்தியமானவன். கடவுள்—?

ப: கடவுளும் மனிதனுடன் இறக்கிறார்.

* * *

கே: எல்லா ருஷியப் பத்திரிகைகளிலும் என்ன இருக்கிறது?

ப: மை; வேறு ஒன்றும் இல்லை.

* * *

கே: ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த விஷயம் உங்களுக்குப் பிரியமானது?

ப: அதைப்பற்றிப் பேசுவது. அதற்குப் பணம் செலவில்லை, பாருங்கள்.

* * *

கே: மற்றவர்களோடு வாதம் செய்து கட்சி பேச விரும்புகிறீர்களா?

ப: இல்லை. வார்த்தைகள் யாரையும் திருப்திப்படுத்துவதில்லை. அவை நம்முடைய தொண்டைக்கும் வயிற்றுக்கும் வலியை உண்டாக்குகின்றன.

கே: எந்த விஷயங்களில் ருஷியாவும் அமெரிக்காவும் ஒரே மாதிரி இருக்கின்றன?

ப: ஒரே ஒரு விஷயத்தில்: ஆயுத பலமும் உதவியும் அற்ற நாடுகளை அடக்கி உபயோகப்படுத்தும் விஷயத்தில் ஒரே மாதிரி இருக்கின்றன?

* * *

கே: கொரியா யுத்தம் எப்போது நிற்கும்?

ப: உலக யுத்தம் ஆரம்பமானதும்.

* * *

கே: பெண்மணியிடம் உள்ள உண்மை அன்பை எப்படித் தெரிந்துகொள்வது?

ப: நான் ஒரு சமயம் ஒரு பெண்மணியை நகைக் கடைக்கு அழைத்துக்கொண்டு போய், "வைர மோதிரம் வாங்கித் தருகிறேன்" என்று சொன்னேன். "அது வீண் செலவு" என்று சொல்லி அவள் அதைத் தடுத்துவிட்டாள். மலிவான சின்ன நகை ஒன்று மாத்திரம் வாங்கிக்கொண்டாள். அந்தப் பெண்மணி அன்புள்ளவளென்றும் புத்திசாலியென்றும் நினைத்தேன். ஒரு வருஷம் கழித்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்.

கே: மேல் நாடுகளுக்குத் தர இந்தியாவிடம் என்ன இருக்கிறது?

ப: வார்த்தைகள்! பழஞ்சொற்கள் நம் வேதாந்தத்தைச் சொல்கின்றன; புதியவை நம் பிச்சைக்காரத்தனத்தைக் காட்டுகின்றன.

* * *

கே: மின்னல் என்பது என்ன?

ப: கருமேகங்களின் முழக்கத்துக்கும் கோபத்துக்கும் இடையே தோன்றும் புன்னகை.

* * *

கே: இப்போது நமக்கு ஒரு விவேகானந்தர் தேவையென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ப: இனிமேல் உபதேசிகளே நமக்கு வேண்டியதில்லை. ஏற்கனவே அந்த உருப்படிகள் நம்மிடம் எவ்வளவோ உண்டு. இப்போது ஒரு ஹிட்லரோ ஒரு ஸ்டாலினோதான் தேவை.

* * *

கே: கர்ப்பமுள்ள ஸ்திரீ அதைப்பற்றி என்ன உணர்ச்சி கொள்கிறாள்?

ப: முதல் கர்ப்பமாக இருந்தால் பெருமைப்படுகிறாள்; இரண்டாவதானால் பொறுமையாக இருக்கிறாள்; அதற்குமேல் வியாதியாகி விடுகிறது.

* * *

கே: கனவை விற்க முடியுமா?

ப: ஜோஸ்யர்கள் விற்கிறார்களே.

* * *

கே: மரணம் நிச்சயமானால் இந்த டாக்டர்களெல்லாம் எதற்கு?

ப: பிரயாணம் சுகமாக இருக்கும்படி பண்ண.

* * *

கே: கம்யூனிஸத்தின் இலக்கணத்தை உங்களுக்குத் தோன்றியபடி சொல்லுங்கள்.

ப: அமெரிக்காவில் பரவுகிற கொடிய வியாதி அது; அணுக்குண்டு மருந்தால் அதைப் போக்கி விடலாமென்று அவர்கள் நம்புகிறார்கள்.

* * *

கே: உங்கள் வெற்றிக்காக உங்கள் நண்பர்கள் என்ன சிரமப்பட்டார்கள்?

ப: போகும் வழியில் நாம் நண்பர்களைச் சந்திப்பதில்லை. வழியின் முடிவில் அவர்கள் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாவ் மாவ் அடையாளம்

கென்யாவில் யாரையாவது போலீஸ்காரர் சந்தேகித்தால், இப்படிக் கையைத் தூக்கச் சொல்லிப் பரிசோதிக்கிறார்கள்—மாவ் மாவ் கத்திக் கீறல் வடு இருக்கிறதோ என்று பார்ப்பதற்காக! 53-ஆம் பக்கம் உள்ள 'கென்யா பயங்கரம்' என்ற கட்டுரையைப் பார்க்க.

வைத்தியப் புதுமைகள்

★

வைத்திய சாஸ்திரத்தில் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. புதிது புதிதாகப் பல விஷயங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளில் எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டிய சுவாரஸ்யமான சில தகவல்களின் திரட்டு இது.

பாலே மனிதனுக்கு மிகச் சிறந்த உணவு என்று உலகமெல்லாம் கொண்டாடுகிறது. குழந்தைகளுக்குப் பால் மட்டும் நிறையக் கொடுத்துவிட்டால், வேறு ஆகாரமே தேவையில்லை என்றுகூடப் பல பெற்றோர் நினைக்கிறார்கள். இவான்ஸ்வில் என்ற இடத்தில் உள்ள ஹெரால்டு டி. விஞ்ச், வில்லியம் டி. ஷிவ்லீ என்ற இரண்டு டாக்டர்களும் இது தவறு என்று அபிப்பிராயப் படுகிறார்கள். ப்ரோட்டீன் சத்துள்ள உணவுகளைச் சிறிதும் உண்ணாமல் பாலையே குழந்தைகள் பருகினால், அவைகளின் உடல் நலம் குன்றி விடுமாம். பசி மந்தம், சிற்றுயிர்ப் பிணிகள், எடை குறைதல், வாந்தி, அஜீர்ணம் இவையெல்லாம் அந்தக் குழந்தைகளுக்கு ஏற்படுமாம். பாலைத் தவிர, ப்ரோட்டீன் சத்துள்ள உணவுகளையும் குழந்தைகளுக்குக் கொடுப்பது அவசியமாம்.

* * *

நீங்கள் தூங்கும்போது எப்படிப் படுக்கிறீர்கள்? கவிழ்ந்தா, நிமிர்ந்தா? இரண்டுமே கெடுதல் தான். இப்படிப் படுப்பது உங்கள் உடம்பில் உள்ள எலும்பு மூட்டுகளுக்குச் சிரமம் கொடுக்கிறது. இன்ன விதம் என்று சொல்ல முடியாத உடம்பு வலிகளும் பிற்காலத்தில் இதனால் ஏற்படுகின்றன என்று டாக்டர் ஜேம்ஸ் மக்டானல் என்பவர் 'லான்ஸெட்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் எழுதுகிறார்.

நீளமாக ஒருக்களித்துப் படுத்துத் தூங்குவதுதான் சரியான வழி என்று அவர் கருதுகிறார். முதலில்

மல்லாக்கப் படுக்கவேண்டும். தலையணையின் இரண்டு முனைகளையும் பிடித்து இழுத்துத் தோளுக்குக் கொண்டு வர வேண்டும். இதனால்

அது ஒரு சும்மாடுபோல் அமையும். இதன்பின் ஒருக்களித்து, தலையும் கழுத்தும் அந்தச் சும்மாட்டில் பதியும்படி படுத்துத் தூங்க வேண்டுமாம்.

கவிழ்ந்து படுப்பவனின் முழங்கால், அளவுக்கு மிஞ்சி நிமிர்ந்து மூட்டுக்குச் சிரமம் கொடுக்கிறது. இப்படிப் படுப்பவன் தலையை ஒரு புறம் சாய்க்கவேண்டி வரும்; அதனால் கழுத்தை முறுக்கிக்கொள்கிறான். ஒருக்களித்துப் படுப்பவனுக்குத் தோளும் இடையும் ஆதரவாக அமைவதால், அவனே சுகமாகத் தூங்குகிறான்.

* * *

ரணசிகிச்சையில் சில பேருடைய கையையே வெட்டிவிடும்படி நேருகிறது. அப்படிப்பட்டவர்களின் நிலை என்ன? என்றுமே கையிருந்தவர்கள் திடீரென்று முடமானால், அவர்களுக்கு வாழ்க்கையே சகிக்க முடியாமல் போகும். இதற்காக ஐக்கிய அமெரிக்காவில் புதுமையாக மின்சாரக் கை ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அது எல்லாருடைய கைகளையும் போலவே வளைகிறது; மடங்குகிறது; விரல்களை மூடுகிறது; திறக்கிறது.

நெவார்க் என்னும் இடத்தில் உள்ள டாக்டர் ஹென்றி எச். கெஸ்லர் என்பவர், இந்தக் கை இன்னமும் பரீட்சார்த்த நிலையிலேயே இருப்பதாகச் சொல்லுகிறார். இதுவரைக்கும் ஜனங்களின் உபயோகத்துக்கு வரவில்லை.

* * *

“பத்து மாசம் சுமந்து பெற்றேன்” என்று தன் குழந்தையைப் பற்றி எந்தத் தாயும் சொல்வது வழக்கம். சில கர்ப்பங்களைப் பன்னிரண்டு மாசம் தரித்துப் பிரசவித்ததாகக்கூட உரிமை கொண்டாடுவார்கள். ‘அப்பா யார்?’ என்பதுபற்றிய அமெரிக்க வழக்குகளில் இந்தச் சிக்கல் சில சமயம் நேரிடுகிறது.

டெட்ராயிட் நகரில் உள்ள ஹென்றி ஃபோர்டு ஆஸ்பத்திரியின் டாக்டர் எச். எல். ஸ்டுவேர்ட் என்பவர், 135 கர்ப்பஸ்திரீகளை நன்றாகச் சோதித்துப் பார்த்தார். பொதுவாகப் பெண்கள் கர்ப்பம் தரித்திருக்கும் காலம் சராசரி 270 நாள் என்று புலனாயிற்று. மிக அதிகமாகப்போனால் 285 நாளைக்கு மேல் எவளும் பிரசவிக்காமல் கர்ப்பம் தரித்திருக்கவில்லை. 10 மாசமோ அதற்கு மேலோ எந்தப் பெண்ணும் கர்ப்பத்தைச் சுமந்திருக்க முடியும் என்பதற்குச் சான்று ஏதும் இல்லை என்று ‘தி ஜர்னல் அவ் தி அமெரிக்கன் மெடிக்கல் அஸோஸியேஷன்’ என்ற பத்திரிகையில் அவர் எழுதியிருக்கிறார்.

* * *

பெண்ணின் கண்ணீர், காதல் போராட்டத்தில் சக்தியற்றுப்

போனாலும் போகலாம்; ஆனால், சிற்றுயிர்ப்பிணிகளுடன் நடத்தும் போரில் அப்படிச் சோடை போகாதாம். பெண்ணின் கண்ணீர் என்ன, ஆணின் கண்ணீர்கூடத்

தான் அதில் சக்தி மிக்க ஆயுதமாயிருக்கிறதாம். பார்க்செஸ்டர் ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியாகும் 'ஜர்னல் அவ் மெடிஸின் அண்ட் ஸர்ஜெரி' என்ற பத்திரிகை இந்த ரகசியத்தை வெளியிட்டிருக்கிறது.

மனிதர்களின் கண்ணீரில் ஒரே ஒரு சொட்டை எடுத்து, 6000 சொட்டுத் தண்ணீரோடு கலந்தால் கூடப்போதுமாம். அந்தக் கலப்பு நீரே நூற்றுக்கணக்கான தினுசு நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி உடையதாய் இருக்குமாம். 'லைஸோஸைம்' என்ற ஒருவகை ரஸாயன சத்து, மனிதர்களின் கண்ணீரில் ஏராளமாய் இருக்கிறது. அதுவே, கண்ணீருக்கு இந்தக் கிருமி கொல்லும் சக்தி இருப்பதன் காரணமாம்.

* * *

"ஒரு மனிதனுடைய இரண்டு காலின நீளமும் சமமாயிருக்கத் தேவையில்லை. ஒன்றை விட மற்றொன்று $1\frac{1}{2}$ அங்குலம் குறைவாயிருந்தால்கூடத் தொல்லை விளையாது" என்று வைத்திய சாஸ்திர பாட புஸ்தகங்கள் சொல்லுகின்றன. இது சரியல்ல என்று இப்போது டாக்டர் பெர்ட் வி. வைலீ என்பவர் வாதிக்கிறார். இவர் டென்னஸீ மாகாணத்தைச் சேர்ந்த நாக்ஸ்வில் நகர 'அக்குலீப் க்ளினிக்' என்ற ஆஸ்பத்திரியில் பதவி வகிப்பவர்.



நீண்ட காலமாய் முதுகு வலியால் அவதிப்படுகிறவர் பலர் உண்டு. அவர்களின் வலிக்குக் காரணம் ஒரு காலைவிட மறு கால் சற்று நீளமாயிருப்பதுதான் என்று புலப்பட்டதாம். காலுக்குக் கால் இப்படி $\frac{1}{4}$ அங்குலம் வித்தியாசப் பட்டாலே முதுகு வலி ஏற்படுகிறதாம். பணத்தைக் கொட்டி எத்தனையோ வைத்தியம் செய்தும், 'விச்சோடி'க் கால் உள்ளவர்களின் வலி குணமாகவில்லை. அவர்களுடைய குட்டைக் கால் ஜோட்டின் குதிகாலுக்கு அடியில் $\frac{1}{4}$ அங்குலம் உயரம் ஒரு கட்டையை வைத்துத் தைத்துவிட்டதும், அவர்களுக்கு முதுகு வலி தீர்ந்தது.

காலுக்குக் கால் தோன்றும் நீள வித்தியாசம் பிறவியிலேயே ஏற்படுவதாம். ஆனால், 30 அல்லது 35 வயதுக்குப் பிறகுதான் அதனால் முதுகு வலி தோன்றுகிறதாம்.

குடும்ப பட்ஜெட்

"ஸாம், உன் குடும்ப வரவு செலவு எப்படி நடக்கிறது?"

"அதுவா? என் சம்பளத்தில் 40% உணவுக்கு, 30% வீட்டு வாடகைக்கு, 30% துணி மணிகளுக்கு, 20% தமாஷாக்களுக்கு - இந்த விகிதாசாரப்படி செலவு செய்கிறேன்."

"அப்படியா? மொத்தம் 120% ஆகிறதே!"

"ஆமாம்; அதுதான் எனக்கு நன்றாய்த் தெரியுமே" என்று உறுமினான் ஸாம்.

—'டிக் - பிக்'

ஆயுத மன்னன் விடுதலை

★

யுத்தக் குற்றவாளி க்ருப் விடுதலை அடைந்தார். மறுபடியும் யுத்த வியாபாரத்தில் இறங்கப் போகிறார். அவர் குடும்ப சரித்திரம் இது.

1800-இல் 4,000 பேர் வசித்து வந்த சிற்றூர் எஸ்ஸன். 1850-இல் அதன் ஜனத்தொகை 10,000 ஆகி 1870-இல் நடந்த யுத்தத்துக்குப் பின் 50,000 ஆகப் பெருகி விட்டது. இன்று ஜெர்மனியிலுள்ள பெரிய நகரங்களில் ஒன்றாக விளங்குகிறது எஸ்ஸன். இப்போது இதன் ஜனத்தொகை சுமார் 6,50,000. இப்படி ஜனங்கள் பெருகியதற்குக் காரணம் க்ருப் என்ற குடும்பத்தார் நடத்தி வந்த ஆயுதத் தொழிற்சாலைதான். 1939-இல் இந்தத் தொழிற்சாலையில் சுமார் 1,20,000 பேர் வேலை பார்த்து வந்ததாகத் தெரிகிறது.

பெரிய பெரிய உலைக் கூடங்களும், யந்திரச் சாலைகளும் அங்கே ஆயுதங்களையும் மற்ற யுத்த தளவாடங்களையும் உற்பத்தி செய்து வருகின்றன. க்ருப் தொழிற்சாலைக்கே சொந்தமாக நிலக்கரிச் சுரங்கங்களும் இரும்புச் சுரங்கங்களும் வேறு இருக்கின்றன.

மக்டேபர்க்கிலுள்ள க்ருப்-க்ருஸன் தொழிற்சாலையில் இரும்புக் கவசம் முதலியவை தயாராகின்றன. கீல் துறைமுகத்தில் இருந்த ஜெர்மானியா கப்பல் தளமே க்ருப்புக்குச் சொந்தமானது; முதல் உலக மகா யுத்தத்துக்கு முன் இங்கே முதல் முதலாக யூ-போட் என்ற நீர் மூழ்கிப் படகு தயாரித்துவந்தார்கள். 1938-இல் யந்திர எண்ணெய் ஆலை ஒன்று கட்டினார் க்ருப்.

ஜெர்மனியில் மேல் சைலீஷியப் பிரதேசத்தில் உள்ள எஃகுத் தொழிற்சாலையில் க்ருப்புக்குப் பெரும் பங்கு உண்டு. க்ருப் முதலாளிகளுக்குச் சொந்தமாக ஆஸ்திரியாவில் சுரங்கமும் தொழிற்சாலையும், ஸ்பெயினில் கப்பல் தளங்களும் இரும்புச் சுரங்கங்களும் இருக்கின்றன; ஹாலந்தில் கப்பல் கம்பெனிகள் வேறு உண்டு.

ஸ்வீடனில் சில பேரைத் தன் சார்பாக நியமித்து யுத்த தளவாடங்களை விற்பனை செய்து வந்தது க்ருப் கம்பெனி. 1939-வரை உலக முழுவதும் இப்படி அநேக விற்பனை ஏஜெண்டுகளையும், தொழிற்சாலைகளிலும் ராணுவத்திலும் உளவுகாரர்களையும் வைத்துப் பல தகவல்களை அறிந்து வந்தது.

க்ருப் குடும்பத்தார் எஸ்ஸனுக்கு அருகில் உள்ள ஒரு மலை மேல் வசித்து வருகிறார்கள். 'வில்லா ஹ்யூகல்' என்ற அவர்களுடைய பங்களாவில்தான் லட்சக்கணக்

மூலம்: ப்ளிட்ஸ் (ஆங்கிலம்), பம்பாய்.

கான மக்களை நாசம் செய்யும் கொடிய ஆயுதங்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டு வந்தார்கள். இப்படியே செல்வச் சீமான்களாக ஆகிவிட்டார்கள் இந்தக் குடும்பத்தார்.

மற்றக் கம்பெனிகளைப்போல் க்ருப் தொழிற்சாலையும் சாமானியமானது என்று எண்ணிவிடக் கூடாது. ஜெர்மன் சக்கரவர்த்தியாக இருந்த முதல் வில்ஹெம் அதை ஜெர்மனியின் 'தேசிய ஸ்தாபனம்' என்று பாராட்டியிருக்கிறார். பல கவலைகளுக்கிடையிலும் ஹிட்லர் இதற்கென்று விசேஷச் சலுகை அளிக்க உத்தரவிட்டிருந்தார் என்றால் பாருங்கள். எப்போதும் இந்தத் தொழிற்சாலை க்ருப் குடும்பத்தைச் சேர்ந்ததாகவே இருக்க வேண்டும்; அப்படிச் சந்ததி இராதபட்சத்தில் இதை வாங்குபவர் க்ருப் என்ற பெயரிலேயே தொடர்ந்து இதை நடத்த வேண்டுமென்று அந்த உத்தரவில் கண்டிருக்கிறது. இதோடு, சில சமயங்களில் க்ருப்பிடமிருந்து வரிகூட வசூலிக்காமல் விட்டுவிடும்படி ஹிட்லர் தம் நிதி மந்திரியிடம் சொல்லியிருந்தார்.

நெப்போலியன் காலத்தில் ஏற்பட்டது இந்தத் தொழிற்சாலை. அப்போது பிரிட்டன்தான் எஃகு உற்பத்திக்குப் பேர் போன நாடு. மேற்கு ஜெர்மனியில் முதல் முதலாகச் சில பேர் இந்த மாதிரி எஃகு தயாரிக்க முற்பட்டார்கள். அவர்களில் ஃப்ரெடரிக் க்ருப் ஒருவர். பரம்பரையாக வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் இவர். எஃகு வியாபாரத்தில் திவாலாகி இறந்து போனார். ஆனாலும் இவருடைய மகனான ஆல்ஃபிரெட் எப்படியோ பரம்பரைச் சொத்தில் கொஞ்சத்தை மீட்டுவிட்டார். இது ஒரு காலத்தில் இவர்களுடைய முன்னோர் வாங்கினது. அப்போது பிளேக் என்ற கொள்ளை நோய் தாண்டவமாடியது; அதனால் சொற்ப விலைக்குக் கிடைத்தது இந்தச் சொத்து.

ஆல்ஃபிரெட் தலையெடுத்ததும் எஃகு வார்ப்படத் தொழிற்சாலை ஒன்றை நடத்தத் தொடங்கினார். முதலில் இதில் 11 பேர் வேலை செய்து வந்தார்கள். அரை குறையாகத் தெரிந்திருப்பதைவிட இதில் நன்றாகத் தேர்ந்திருந்தால் வியாபாரம் பலமாகும் என்று தோன்றவே ஆல்ஃபிரெட் 1839-இல் மாறுபெயரோடு இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போனார். போதுமான முதல் கையில் இராததால் பிரஷிய (பழைய ஜெர்மன்) சர்க்காரிடம் சுமார் எட்டுத் தடவை விண்ணப்பம் செய்து கொண்டார். அப்படியும் ஒரு பதிலும் இல்லை. அப்போது அவர் தொழிற்சாலை ஆயுத உற்பத்தியில் ஈடுபடாதிருந்ததுதான் இதற்குக் காரணம்.

1851-இல் ஆல்ஃபிரெட் பிரிட்டனுக்கு வந்தார். தாம் எஃகில் வார்த்த துப்பாக்கி ஒன்றை அங்கே நடந்த ஒரு பிரபலக் கண்காட்சியில் காட்சிப் பொருளாக வைத்தார். விக்டோரியா மகாராணியும் ஆயுத உற்பத்தி அதிகாரியும் அதைப் பார்த்து வியந்தார்கள். ஒரு பதக்கமும் அதற்காகக் கிடைத்தது. இருந்தாலும் சொந்த நாட்டில் அவர் வியாபாரம் ஓங்காமலே இருந்து வந்தது. முதல் வில்ஹெம் ரீஜண்ட் பதவிக்கு வந்த பிறகுதான் ஆல்ஃபிரெட்டுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது.

எஸ்ஸனிலுள்ள தொழிற்சாலையை வந்து பார்வையிடும்படி ஆல்ஃபிரெட் கேட்டுக்கொண்டதன் பேரில் வில்ஹெம் அங்கே வந்தார். பின்னல் 1859 - இல் வில்ஹெம் தம் கொள்கைகளை அமல் நடத்தத் தொடங்கியதும் க்ருப் தொழிற்சாலை நாட்டில் செல்வாக்குப் பெற்றது. எஃகில் வார்த்த 300 துப்பாக்கிகளுக்கு வில்ஹெம் முதல் முதலாக 'ஆர்டர்' கொடுத்தார்.

ஜெர்மன் சாம்ராஜ்யம் சென்ற நூற்ருண்டில் ஈடுபட்ட மூன்று யுத்தங்களிலும் தலை நிமிர்ந்து நின்றதற்கு க்ருப் தயாரித்த துப்பாக்கிகளே காரணம். ஆகவே, தமக்கு விசேஷச் சலுகை அளித்துப் பண உதவியும் செய்ய வேண்டுமென்று க்ருப் விண்ணப்பித்துக் கொண்டார். ஜெர்மன் ராணுவத்துக்காகத் தயாரித்த புது விதத் துப்பாக்கிகளைப்போலவே வெளி நாடுகளுக்கும் தயாரித்தனுப்பும் சலுகை வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டார் க்ருப். இதன் பயனக 1866-இல் பிரஷியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் நடந்த யுத்தத்தில் பிரஷியப் படைவீரர்களை ஆஸ்திரியர்கள் க்ருப் துப்பாக்கிகளாலேயே சுட்டுத் தள்ளினர்கள் என்ருல்பாருங்கள்!

ஆல்ஃபிரெட் 1877-இல் இறந்ததும் ஃபிரெடரிக் க்ருப் இந்தத் தொழிற்சாலையின் அதிபரானர். அது முதல் ஆயுத உற்பத்திப் போட்டியில் பல நாடுகள் ஈடுபட்டன. அதனல் க்ருப்பின் செல்வாக்கு இன்னும் பெருகியது.

க்ருப் தொழிற்சாலை நிர்வாகிகள் ஆயுதங்களை உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு அனுப்புவதோடு மட்டுமின்றி மேலும் மேலும் 'ஆர்டர்கள்' கிடைக்க வழி என்ன என்று ஆராய்ந்தார்கள். புதிய புதிய தொழில் நுணுக்கங்களைக் கண்டு பிடித்தும் வெளிநாட்டுப் போட்டியைச் சமாளிக்கப் பல பேடெண்ட் உரிமைகளை அப்படியே வாங்கியும் நேரடியான அரசியல் பிரசாரம் செய்தும் ஆயுத வெறியைத் தூண்டிவிட்டார்கள்.

ஒரு சமயம் ஜெர்மன் கப்பற் படைப் பலத்தைப்பற்றிய ரகசியத் தகவலைக்கூடத் தம்மைப்போன்ற பிரிட்டிஷ் ஆயுதவர்த்தகர்களுக்கு எட்டவிட்டார்களாம் க்ருப் நிர்வாகிகள். 'அந்தப் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் உடனே இன்னும் அதிகமாக ஆயுத உற்பத்தி செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காரை வற்புறுத்துவார்கள்; இதனல் நமக்கு அங்கிருந்து ஆர்டர் கிடைக்கும்' என்ற எண்ணத்தோடுதான் இப்படி அவர்கள் செய்தார்கள்.

1902-இல் ஃபிரெடரிக் இறந்ததும் அவருடைய மகள் பெர்த்தா க்ருப் தொழிற்சாலையின் சொந்தக்காரியானுள். செய்ஸர் இரண்டாம் வில்ஹெமே முன் நின்று அவளை கஸ்டவ் வான் போலன் - ஹால்பாக் என்ற ஜெர்மன் ராஜதந்திரிக்கு மணம் செய்து வைத்தார். இனி க்ருப் குடும்பப் பெயரையே அவர் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

இரண்டாம் வில்ஹெம் காலத்தில் ஜெர்மனியின் வெளிநாட்டுக் கொள்கையே க்ருப் தொழிற்சாலையைப் பொறுத்துத்தான் அமைந்திருந்தது என்று சொல்லவேண்டும். க்ருப் நிர்வாகிகளுக்கும் ஜெர்மன் பாங்கிக்கும் தர வேண்டிய பாக்கித் தொகையை வெனிசுயலா செலுத்தாததால் 1902-இல் அந்த

நாட்டைப் பயமுறுத்த ஜெர்மன் யுத்தக் கப்பல்களை அனுப்பினார்கள். 1905-இல் ருஷியாவுக்கு க்ருப் சில டார்ப்பிடோ படகுகளை விற்றார். அப்போது ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஜெர்மனி நடுநிலைமை நாடாக இருந்தும் இப்படி ருஷியாவுக்கு க்ருப் அவைகளை விற்றார் என்றால் பாருங்கள்.

திடீரென்று வில்ஹெம் 1905-இல் மொரோக்கோவிலுள்ள டாஞ்சியர் துறைமுகத்தில் வந்து இறங்கினார். ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் மனஸ்தாபம் மூண்டது. இதற்கெல்லாம் காரணம் க்ருப்தான். தமக்குப் போட்டியாகப் பிரான்ஸில் ஆயுதத் தொழிற்சாலை நடத்தும் ஷ்னீடர்-குரூஸோட் என்ற கம்பெனியார் மொரோக்கோவில் பிரெஞ்சுச் சாமான்களைத் தவிர வேறெதையும் இறக்குமதி செய்ய விடாமல் தடுத்து வரவே க்ருப்புக்கு எரிச்சல் தாங்கவில்லை. இவருடைய யோசனையின் மேல்தான் வில்ஹெம் டாஞ்சியரில் இறங்கினார். ஜெர்மன் ராஜதந்திரிகளின் மூலம் துருக்கியில் ஷ்னீடர் கம்பெனிக்குப் போட்டியாக ஆயுத சப்ளைக்கு க்ருப் ஆர்டர் வாங்கிக்கொள்ளை லாபம் வேறு அடித்தார். தமக்குப் பிடித்த ஜெர்மன் சர்வ கலாசாலைகள் சிலவற்றில் புரொபஸர்களை நியமிக்க ஏற்பாடு செய்து அதற்காக நிதி ஒன்றும் அளித்தார். ஒவ்வொரு வருஷமும் ரகசியத் தகவல் சேகரிப்பதற்கென்றே சுமார் 10 லட்சம் மார்க் செலவிட்டார். இந்தத் தொகையைப்பற்றிய கணக்கோ வழக்கோ ஒன்றையும் காட்டுவதில்லை. இவருடைய ரகசியக் கையாள் ஒருவனே பல வருஷ காலம் ஜெர்மன் ராணுவத்தில் ஆயுதப் பரிசோதனை அதிகாரியாக இருந்து வந்தான்.

முதல் உலக மகா யுத்தம் தொடங்குவதற்குப் பல மாதங்களுக்கு முன்னேயே க்ருப்புக்கு அதைப்பற்றித் தகவல் எட்டிவிட்டதாம். இதனால் இவர் வெளி நாட்டிலிருந்து ஆயுத உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களை ஏராளமாக வரவழைத்தார். யுத்தத்தின்போது ஸ்விட்ஜர்லாந்து வழியாக க்ருப் ஏராளமான ஆயுதங்களை எதிரி நாடுகளுக்கு விற்று வந்தார் என்றால் ஆச்சரியமாக இல்லையா?

அப்போது ஜெர்மன் அதிகாரிகளுக்கு க்ருப் என்ன சமாதானம் சொன்னார் தெரியுமா? "இப்படி வியாபாரம் பலமாக நடந்தால்தான் யுத்தகாலத்திலும் வெளிநாட்டிலிருந்து மூலப் பொருள்கள் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும். இதனால் சண்டையும் நீடிக்கும்" என்றாராம். எது எப்படிப் போனாலும் சரி, பகை நாடுகள் இரண்டிலும் ஆயுதம் உற்பத்தி செய்து வந்த க்ருப் போன்ற வியாபாரிகளின் பாடு கொண்டாட்டமாக இருந்தது.

1918-இல் சண்டை நின்றதும், அது சம்பந்தமான ஒப்பந்தப்படி க்ருப் தொழிற்சாலையில் சில பகுதிகளை அழித்துவிட வேண்டும் என்று முடிவாயிற்று. நேச நாடுகளின் கூட்டு அதிகாரத்தின் கீழ் வந்தது இந்தத் தொழிற்சாலை. வருஷத்தில் நாலு பீரங்கியும் ஜெர்மனியின் சிறு கப்பற் படைக்குக் கவசமும் மட்டும் செய்ய வேண்டியது என்று அந்த அதிகாரிகள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இதை மீறி க்ருப் ஒரு தரம் ஏதோ செய்யப் போய் அவர்கள் அதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். அது முதல் க்ருப் நிர்வாகிகள் பல வருஷ காலம் வரை ஒழுங்காகவே நடந்து வந்தார்கள். டைப் அடிக்கும் யந்திரம், யந்திரக் கலப்பை, தொழில் வளர்ச்சிக்கான யந்திரங்கள், ரெயில் வண்டிகள், திருப் பிடிக் கா தகத்தரி, கத்தி முதலிய சாமான்களைத் தயாரித்து வந்தார் க்ருப். ஆனாலும் ஒரு பக்கம் அந்தத் தொழிற்சாலையைச் சேர்ந்த ஆயுத ஆராய்ச்சி நிபுணர்கள் புதிய ஆயுத 'டிஸைன்'களை அவ்வப்போது காகிதத்தில் எழுதி அவை சம்பந்தமாக ஆலோசனை செய்துதான் வந்தார்கள். முதல் மகா யுத்தத்தில் நடு நிலைமை வகித்த நாடுகளில் இருந்த கம்பெனிகள் பலவற்றைப் பிரிட்டனிலிருந்து கிடைத்த தொகையைக் கொண்டும் இன்னும் பலவிதமாகவும் வாங்கினார்கள் க்ருப் நிர்வாகிகள். பிரிட்டனில் இருந்த விக்கர்ஸ் என்ற கம்பெனியார் தோட்டாவிலுள்ள திரிக்காக க்ருப்பிடமிருந்து பேடெண்ட் உரிமைக்கு 'லைஸென்ஸ்' வாங்கியிருந்தார்கள். ஒப்பந்தப்படி ஒரு தோட்டாவுக்கு 1 ஷில்லிங் 3 பென்ஸ் வீதம் லைசென்ஸ் கட்டணம் க்ருப்புக்குக் கிடைத்தது. இந்தத் தொகையைத் தரும்படி விக்கர்ஸ் கம்பெனியாரை க்ருப் கேட்டபோது அவர்கள் அதற்கு ஈடாக ஸ்பானிஷ் இரும்புச் சுரங்கக் கம்பெனி ஒன்றில் தமக்குள்ள பங்கில் ஒரு பகுதியை க்ருப்பின் பேருக்கு மாற்றிவிட்டார்கள்.

இதனால் முதல் மகா யுத்தம் முடிந்த சில வருஷங்களுக்கெல்லாம் வெளி நாடுகளில் க்ருப் புக்குச் சொந்தமான கம்பெனிகளில் ஆயுத உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டார்கள். இருந்தாலும் ஸ்வீடனில் போஃபோர்ஸ் கம்பெனியில் பெரும் பங்குதாரராக ஆன பிறகுதான் க்ருப்புக்கு நல்ல யோகம் அடித்தது. அங்கே கனமான துப்பாக்கிகளும் ஆகாய விமானத்தை வீழ்த்தும் பீரங்கிகளும் உற்பத்தி செய்யலானார்கள்.

1924 முதல் 1929-வரை க்ருப் தொழிலதிபர் ஜெர்மன் ஆலை முதலாளிகள் சங்கத்தின் கட்டுத் திட்டங்களுக்கு அடங்கியே நடந்து வந்தார். பின்னால் ஹிட்லரின் ஆட்சி ஏற்படுவது கஸ்டவ் க்ருப் (பெர்த்தாவின் கணவர்) புக்குப் பிடிக்கவில்லை. ஜெர்மன் குடியரசின் தலைவரான ஹிண்டன்பர்க்கிடம் சொல்லி ஹிட்லரைப் பதவிக்கு வர வொட்டாமல் தடுக்கப் பார்த்தார். ஆனால் அந்த ஆட்சி ஏற்பட்டதும் க்ருப்பையே ஹிட்லர் ஜெர்மனியின் தொழிலதிகாரியாக நியமித்தார். அது முதல் க்ருப்பே பெரிய நாஜியாக மாறிவிட்டார்!

அப்புறம் ஹிட்லருக்காக க்ருப் ஆயுத உற்பத்தி செய்ததும் இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்ததும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நேச நாட்டினர் மறுபடியும் ஜெர்மனியை வென்றதும் க்ருப்பை யுத்தக் குற்றவாளியாக்கி, அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தார்கள். சமீபத்தில் அவரை விடுதலை செய்திருக்கிறார்கள். இதோடு போகவில்லை. பழைய வியாபாரத்தில் இவர் குடும்பம் ஈடுபடப் போகிறது!

மேல் நாட்டினரும் கொண்டாடும் பக்திக் கவிஞர்—

'கீத கோவிந்த' ஆசிரியர்

வாவிலால சோமயாஜுலு

தெலுங்கர்களுக்கு 'அஷ்டபதி' என்றால் உயிர். வெகு காலமாகப் பாடகர்களுடைய சங்கீத வித்தையின் அளவுகோலாகக் 'கீத கோவிந்த'த்தை மதித்து வந்தார்கள். கோவிந்தன் விஷயமான கீதங்களைக் கொண்ட பிரபந்தமாகையால் அதற்கு இந்தப் பெயரே பொருந்துமென்று அதன் ஆசிரியர் இப்படி வைத்திருக்க வேண்டும்.

மகா கவியாகிய ஜயதேவர் ஒப்பற்ற பக்த சிகாமணி. பக்தர்களுடைய சரித்திர மூலமாக அவர் வாழ்க்கை வரலாறுகள் சில தெரியவருகின்றன. 15-ஆம் நூற்றாண்டில் சந்திர தத்தர் என்பவர் தொகுத்த 'பக்த மாலை'யில் ஜயதேவருடைய வாழ்க்கை சில சர்க்கங்களில் இருக்கிறது. அவரைப்பற்றிய கர்ண பரம்பரைக் கதையும் வழங்குகிறது. அவருடைய இளவயது வரலாறு தெரியவில்லை.

அவருடைய மனைவியின் பெயர் பத்மாவதி. 'கீத கோவிந்த'த்தில் ஜயதேவர், "பத்மாவதி சரண சாரண சக்ரவர்த்தி" என்று தம்மைச் சொல்லிக் கொள்ளுகிறார். ஜகந்நாத க்ஷேத்திரத்தில் ஒரு பிராம்மணர் ஜகந்நாதரை ஆராதித்து வந்தார். அவருக்கு ஒரு பெண் பிறந்தாள். அவர் அந்தப் பெண்ணுக்குப் பத்மாவதி என்று பெயரிட்டு, "மகா விஷ்ணுவைத் தவிர வேறு யாருக்கும் இந்தக் கன்னிகையைக் கொடுக்க மாட்டேன்" என்று சபதம் செய்திருந்தார். அவளுக்கு வயது வந்தபின், ஜகந்நாதருடைய சேவைக்கு அவளைச் சமர்ப்பணம் செய்ய வேண்டுமென்று அழைத்துக் கொண்டு போனபோது, வழியில் ஜகந்நாத சுவாமி தோன்றி, "அன்பனே, உன் பக்தியை மெச்சினேன். எனக்குத் தத்தம் செய்த இந்தக் கன்னிகையை என் சிறந்த பக்தனாகிய ஜயதேவனுக்குக் கொடு. அதுவே எனக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தரும்" என்று சொன்னாராம். அந்தச் சமயத்தில் ஜயதேவர் துறவியாக வாழ்ந்து வந்தார். பத்மாவதியின் தந்தை அவரை அணுகி நடந்ததைத் தெரிவித்தார். ஆனால் ஜயதேவர் கண்டிப்பாகப் பத்மாவதியை ஏற்க மறுத்து விட்டார். பத்மாவதியின் தந்தையோ, "இது பகவானுடைய கட்டளை" என்று சொல்லி அவளை அங்கேயே விட்டுப் போய் விட்டார். பத்மாவதி

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

முகங் கோணுமல் வெகு நாள் ஜய தேவருக்குப் பணிவிடை செய்து வந்தாள். நாளாக ஆகச் சிநேகம் முற்றவே அவளை ஜயதேவர் மணந்துகொண்டார். இது 'பக்த மாலை' என்ற நூலிலிருந்து தெரி கிறது.

ஜயதேவர் தம் வழிபடு கடவு ளான நாராயண மூர்த்தியின் கைங் கரியத்துக்காகப் பிருந்தாவனம், ஜயபுரம் முதலிய இடங்களுக்குச் சென்று பணம் சேகரித்துக்கொண்டு திரும்பி வந்தார். வழியில் திருடர் கள் அவருடைய கை கால்களை வெட்டிவிட்டுப் பணத்தை அப கரித்துக்கொண்டு போய்விட்டார் கள் என்று ஒரு கதை சொல்லு கிறது.

ஜயதேவருக்குச் செட்டியார் ஒருவர் சீடராக இருந்தார். அவர் ஜயதேவரைத் தம் ஊருக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சில நாள் வைத்திருந்து திருப்பி அனுப்பினுர். ஜயதேவர் பணத்தை விஷமாகக் கருதுகிற வர். அதனுல் அவருக்குத் தெரி யாமல், அவருக்கு உபயோகப் படட்டும் என்று கொஞ்சம் பணத்தை அவர் போன பல்லக்கில் மறைத்து வைத்திருந்தார் செட்டி யார். இது எப்படியோ பல்லக்குச் சுமக்கும் போகிகளுக்குத் தெரிந்து விட்டது. பல்லக்கை நடுக் காட்டுக் குச் செலுத்திப் போகிகளே அவ ருடைய கை கால்களை வெட்டிப் போட்டு விட்டுப் பணத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார்க ளென்று எ. வி. நரசிம்மலு பந்துலு தாம் எழுதிய 'கீத கோவிந்த' முகவுரையில் குறிப்பிட்டிருக் கிருர். மொத்தத்தில் அவருடைய பணத்தைத் திருடர்கள் அபகரித்த தும் அவர் கைகால்களை வெட்டிய தும் உண்மையாகவே இருக்க வேண்டும். அந்தச் சமயத்தில் காட் டுக்கு வந்த ஓர் அரசன் அவரை எடுத்துக்கொண்டு போய்ச் சிகிச்சை செய்து பத்மாவதியையும் அவரை யும் தன்னிடமே வைத்துக் கொண்டான்.

வேதவியாசரே ஜயதேவராகக் கேந்துபில்வம் என்னும் திந்து பில்வ கிராமத்தில் அவதரித்த தாக ஒரு கொள்கை இருக்கிறது. திந்துபில்வ கிராமத்துக்கு நாலு காத தூரத்தில் கங்கா நதி ஓடிக்கொண் டிருக்கிறது. அதற்குத் தினந்தோறும் ஸ்நானத்துக்கு ஜயதேவர் போய் வருவாராம். இவ்வளவு தூரம் அவர் நடந்து கஷ்டப்படுவதைப் பொறுக்காத கங்காதேவி ஒரு நாள் ஜயதேவரிடம், "தினமும் உன்னுல் என்னிடம் வர முடியாது. நானே உன்னிடம் வரு கிறேன்" என்று சொல்லித் திந்து பில்வ கிராமத்துக்கே வந்து கொண்டிருந்ததாக ஒரு கதை வழங்குகிறது.

ஜயதேவர் தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் உபகாரம் செய்பவர். தம்மை இம்சித்த திருடர்கள் சாதுக்களாக அரண் மனைக்கு வந்தபோது அரண் மனைச் சேவகர்கள் அவர்களைக் கண்டு பிடித்து ஜயதேவர் முன் கொண்டு போய் நிறுத்திஞர்கள். ஜயதேவர், "இவர்கள் எனக்குப் பேருதவி செய்தவர்கள்" என்று சொல்லி ராஜ சபைக்கு அனுப்பி விசேஷச் சம்மானங்கள் வாங்கிக் கொடுத்தார். போகும் வழியில் பூமி பிளந்து அவர்களை விழுங்கி விட்டதாம். ராஜ சேவகர்கள் வந்து இந்தச் செய்தியைச் சொன்னவுடன் ஜயதேவர் அந்த

இடத்துக்குச் சென்று மகா விஷ்ணுவைப் பிரார்த்திக்கவே பகவான் மீண்டும் அவர்களுக்கு உயிர் அளித்தாராம்.

பத்மாவதியினுடைய கற்பின் பெருமையைப் பரிசோதிக்கச் சாத்தியகி என்னும் அரசன், ஜயதேவர் இல்லாத சமயம் பார்த்து அவளிடம் வந்து, "உங்கள் கணவரைத் துஷ்டர்கள் கொன்று விட்டார்கள்" என்று பொய் சொன்னான். இதைக் கேட்டவுடன் பத்மாவதி உயிரை விட்டு விட்டாள். ஜயதேவர் திரும்பி வந்து கிருஷ்ணனைப் பாடியவுடன் தூங்கி எழுந்தது போல் அவள் எழுந்தாளாம்.

ஜயதேவர் தம் தம் ஊர்க்காரர் என்று வங்காளிகளும் ஒரிஸ்ஸாக் காரர்களும் உரிமை கொண்டாடு கிறார்கள். அவர் ஒரிஸ்ஸாவாசி என்று சொல்ல ஒரு காரணம் இருக்கிறது. பிரதாபருத்திர மகாராஜா 16 - ஆம் நூற்றாண்டில் ஒரிஸ்ஸாவை ஆண்டவன். ஜகந்நாதர் ஆலயத்தில் தேவ தாசிகள் 'கீத கோவிந்த'த்தைத் தவிர வேறு ஒன்றையும் பாடக் கூடாது என்று அவன் உத்தரவு பிறப்பித்ததாக ஒரு சாசனம் இருக்கிறது. மகாராஷ்டிரரும் இவர் ஒரிஸ்ஸாவைச் சேர்ந்தவர் என்றே சொல்கிறார்கள். ஒரிஸ்ஸாக் கவிகள் எல்லாரும் ஜய தேவர் தம் தேசத்தினரென்றே ஒரு முகமாகக் கோஷிக்கிறார்கள்.

ராதைக்கும் கிருஷ்ணனுக்குமுள்ள பிரேமையை விஷயமாகக் கொண்ட 'கீத கோவிந்த'த்தை மனனம் செய்து அதன் மேலான சிருங்கார பாவத்தில் லயித்து, கேவல முக்தர்களாகும்படி ஜயதேவரே 'கீத கோவிந்த' சுலோகம் ஒன்றில் சொல்கிறார்.

ஒன்பது வித பக்தி மார்க்கங்களில் நாயக நாயகீ பாவம், எட்டாவதாக வருவதால் எட்டுப் பாதங்களைக் கொண்ட அஷ்டபதிக்கு இந்தப் பொருத்தமும் இருக்கிறது.

'கீத கோவிந்தம்' உலகப் புகழ் பெற்ற காவியம். வெகு காலத்துக்கு முன்பே இது மேல்நாட்டினர் கருத்தைக் கவர்ந்தது. இதை ஸர் வில்லியம் ஜோன்ஸ், எட்வின் ஆர்னல்டு என்பவர்கள் ஆங்கிலத்திலும், லாஸன் என்பவர் லத்தீனிலும், ரூக்கட் என்பவர் ஜெர்மன் பாஷையிலும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதன் பெருமை காரணமாக இதே போன்ற பல நூல்கள் ஒரியா மொழியிலும் சம்ஸ்கிருதத்திலும் தோன்றியிருக்கின்றன. ஒரிஸ்ஸாவில் முதலில் 'கீத கோவிந்தம்' பாடித் தான் பஜனைகளை ஆரம்பிக்கிறார்கள். ஆவணியில் கிருஷ்ணாஷ்டமி அன்று கலிங்க வாசிகளும், கார்த்திகை சுக்கில ஏகாதசியன்று மகாராஷ்டிரர்களும், வல்லபாசாரியருடைய சிஷ்யர்களும் 'கீத கோவிந்த'த்தை மெய்மறந்து பாடுவார்கள். ஜைன அரசனாகிய ஸ்ரீ ஹர்ஷனும், விக்கிரமசேன மன்னனும் வித்துவான்களைக் கொண்டு 'கீத கோவிந்தம்' பாடச் சொல்லிக் கேட்பார்களாம். ஜயதேவர் 'பியூஷ கீதை' என்ற வேறொரு நூலும் செய்திருக்கிறார். 'ராம லீலை'யாக நடிக்கத் தகுந்தது இது.

'கீத கோவிந்த'த்துக்குப் பல வியாக்கியானங்கள் உண்டு. அவற்றுள் கும்ப ராணா என்பவர் எழுதிய 'ரஸிகப் பிரியா' என்பதே மிகவும் சிறந்தது.

புருஷர்களே, உஷார்

★

ஆணே பெண்ணை ஆட்டிவைக்கிறான் என்று நினைக்கிறோம். ஆனால் பிராணி வர்க்கத்தைப் பாருங்கள்; உண்மை புரியும். இது தமாஷ் கட்டுரைதான். ஆயினும், பூச்சியினத்தைப்பற்றிய ரஸமான செய்திகள் அடங்கியது. எஸ். பி. கே. குப்தா என்பவர் 'ஃப்ரீ இந்தியா'வில் எழுதியுள்ள கட்டுரையைத் தழுவியது.

மினுமினுக்கான டால்சம் பவுடரையும் புக்கே ஸ்நோவையும் பரிமள தைலத்தையும் தலையில் தடவி வாரிக்கொண்டு, காஷ்மீர் பாணியில் ஜடையை அலங்கரித்துக்கொண்டு ஒய்யாரமாக எழில் நிறைந்த பார்வையோடு 'விறுவிறு' என்று நடந்து செல்லும் மாதர்களின் காதல் வலையிலே சிக்கி விடாதீர், ஐயா! கடந்த ஆண்டுகளில் பெண்களின் ஆதிக்கத்தைப்பற்றிய பேச்சுக் குறைந்துவிட்டது. ஆனால் பெண்களின் போக்கு மாறி, எல்லாத் துறைகளிலும் அவர்கள் ஆண்களை அடக்கி அரசாட்சி புரிந்து அல்லி அரசாணிகளாக விளங்குகிறார்கள்!

ஆண்களாகிய நமக்கு அவர்கள் குலாம் போடுவது போக, நாம் அவர்களிடம் சிரம் வணங்கி, அவர்கள், 'நான் வருவேன் முன்னே; கணவன் வருவார் பின்னே' என்று ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஜம்மென்று கையை ஆட்டிக்கொண்டு, புடைவையைப் 'புஸு புஸு' என்று காற்றில் அலைத்துக்கொண்டு தாங்கள் முன்னே செல்ல, நாம் போர்ட்டர் மாதிரி எல்லாச் சாமான்களையும் தூக்கிக்கொண்டு தொடர்வதா?

மனித வர்க்கத்தில் பெண் ஆட்சி இன்னுங்கூட அதிகரிக்கவில்லை. ஆனால் பூச்சி இனத்தில் முடி சூடா மகிஷாசுரமர்த்தினிகளாக விளங்குபவை பெண் பூச்சிகளே!

* * *

ஆமாம், புருவத்தை மேலே உயர்த்தி ஆராய்ச்சி செய்ய இறங்காதீர்! நீர் ஆண் வாசகர்தானே? அப்பொழுது நீர் பலம் நிறைந்த குழுவைச் சேர்ந்தவர். அதோடு பெண்ணினம் உமக்குக் கைகட்டிச் சேவகம் புரிந்து, 'என்ன வேண்டும், கணவரே?' என்றும், 'கணவனல்லாது பிறிதொரு தெய்வம் தொழமாட்டேன்' என்றும் கூறவேண்

காப்பிரைட்; ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்; 30-11-'52), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

டாமா? மேலும் உம்முடைய கிருதா மீசையும் தாடியும் (அவைகளை க்ஷவரம் செய்யாமல் அப்படியே விட்டிருந்தால்) உம்முடைய ஆண்கோலத்தையல்லவா எடுத்துக் காட்டுகின்றன! விஞ்ஞானியைக் கேளும். 'சிங்கத்தின் பிடரிபோன்ற உம்முடைய கறுத்த தாடி, மயிலின் தோகை போன்ற கிருதா மீசை இவையெல்லாம் உம் மனைவியை ஊடலுக்கு அழைப்பதற்காகவே, ஈசன் சிருஷ்டித்தவை' என்று கூறுவான்.

* * *

அத்தபடி ஒரு பெண்ணின் வரத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்றால்....? முழங்காலை நீட்டி மண்டி போட்டு, 'என்னை நீ மணம் புரிந்துகொள்வாயோ, குயிலே, மயிலே, ஆடே, கோழியே....!' என்றெல்லாம் கூறி, அவள், 'ஆகட்டும் நாயகரே, உம்மையல்லாத வேறொரு புருஷனைக் கண்டெடுத்தும் பாரேன்' என்று கூறும் வரையில் நீர் நாய் படும் அவஸ்தையைத்தானே ஐயா படுகிறீர்? மேலும் நீர் அவளை மணந்து கொண்டால் மூன்று சத்தியம் செய்கிறீர்: 'உனக்கு ஆயுள் முழுவதும் ஓசியில் சாப்பாடு போடுவேன்' என்பது ஒன்று; இரண்டாவது, 'உனக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குப் படிப்பு, சோறு எல்லாம் அளிக்கிறேன். என் பணிவிடையும் நான் செய்கிறேன்' என்பது. கடைசியாக, 'உன்னை மகிழ்விப்பேன்' என்பது. இல்லையா!

இவ்வளவுக்கும் அவள் நன்றியோடு நடந்துகொள்கிறாளா என்ன? "இவர் மூஞ்சியைப் பார்! அறுபது ரூபாய் 'கிளார்க்' சம்பளத்தில் என்ன ஆகிவிடும்?" என்றெல்லாம் தூற்றுவதில்லையா?

ஐயா, இவ்வளவெல்லாம் இருக்கட்டும். நல்ல வேளை, உம்மை உயிரோடு வைத்திருக்கிறாளே, அதுவே தேவலையே? ஆனால் இந்தப் பூச்சிவர்க்கத்திலே ஆணினம் பெண்ணினங்களிடம் படும் மரண அவஸ்தையைக் கேட்பானேன்? அதைப் பார்த்தால் நம் மனைவிகள் சீதாபிராட்டிகளும் தமயந்திகளுமே ஆவார்கள்.

* * *

ஆண் தேனீ அல்லது சோம்பேறி ஈ இருக்கிறதே, அதன்பாடு அதோகதிதான். கனம் மகாராணி

யாரான பெண்தேனீக்குக் கைகட்டிச் சேவகம் புரிய ஆயிரக்கணக்கான சுறுசுறுப்புள்ள வேலைக்கார ஈக்கள் இருக்கின்றன. 'காதலை அநுபவிக்கவேண்டும்' என்று பெண் தேனீயிடம் பறந்து செல்லுவதுதான் ஆண் சோம்பேறித் தேனீயின் கடைசி விருப்பம். அதோடு அது இறந்து போகிறது.

வயது வந்த ராணித் தேனீ, ஆயிரக்கணக்கான சோம்பேறி ஈக்களில் ஒன்றைத் தேர்ந்து கொள்கிறது. அந்த ஈயும் பதினைந்து நிமிஷநேரமே ராணியோடு சம்போகத்தை அநுபவிக்கிறது. இச்சை தீர்ந்ததும் ராணி ஓடி விடுகிறது.

பதினைந்து நிமிஷ இன்பத்தில் வாழ்வையே அர்ப்பணம் செய்கிறது சோம்பேறி ஆண் ஈ. சம்போகம் ஆன பிறகு ராணி பறந்து செல்லும்போது ஆண் ஈயின் எந்தப் பாகத்தையும் பொசுக்கிவிடக் கூடும். அதன் பாடு அதோகதிதான்! தன்னுடைய போராட்டம் முடிந்ததும் ஆண் ஈயின் உற்பத்தி செய்யும் அங்கத்தையும் பிய்த்துக்கொண்டு போய் எங்கேயாவது எறிந்துவிடுகிறது ராணி. உடனே ஸ்ரீமான் சோம்பேறி ஈ, சொர்க்கத்துக்குப் பிரயாணம் செய்கிறது!

ஆண் ஈயின் மூலம் கருத்தரித்த ராணி ஈ உடனே 1500 முதல் 5000 வரை முட்டைகளை இட்டுவிடுகிறது. அவைகளனைத்தும் வேலைக்கார ஈக்களாகிவிடும். அவை நான்கு வருஷகாலம் ராணிக்குப் பணிவிடை செய்யும். எந்த ஆண் ஈ அப்போது இருந்தாலும் அதன்பாடு ஆபத்துத்தான். ராணி அவைகளைக் கொலை செய்து விடும்படி உத்தரவு இட்டுவிடுவாள்!

உமக்குக் கண்ணீர் இருந்தால் அதை இப்போது வடியும், ஐயா! ஆண் தேனீயைவிட ஆண் தேளின் கதி இன்னும் மோசம்! ஆண் தேள் சற்று நேரக் காதலன்தான். கொஞ்சிக் குலாவும்போது அது பெண் தேளை அணைக்கிறது. தன் கூரிய கொடுக்கைப் பெண் தேளின் மேல் பதிய வைக்கிறது. இரண்டு தேள்களும் அணைத்தபடியே சிற்றின்பத்தை அநுபவிக்க ஓரிடத்துக்குச் செல்லுகின்றன. பிறகு பெண் தேள், ஆணைக் கொன்றுவிடுகிறது.

பெண் தேள்தான் குட்டிகளைப் பாலூட்டி வளர்க்கிறது. இது பெரிய காரியமல்லவா?

ஓர் ஆண் தேள், பெண் தேளிடம் சிக்கி அதற்கு இரையாகாமல் தப்பி ஓடுவது மிகவும் அபூர்வம்.

* * *

ஆண் சிலந்திகளின் சிறிய உருவம் அவைகளைக் காப்பாற்றுகிறது. ஆண் சிலந்தியின் உருவமும் பெண் சிலந்தியின் உருவமும் மிகவும் வேறுபாடு உள்ளவை. 6-அடி உயரமும் 150 பவுண்டு எடையும் உள்ள ஆணுக்கு 76 முதல் 90 அடி வரை உயரமும் 2,00,000 பவுண்டு எடையுமுள்ள மனைவி வாய்ப்பதுபோல்தான்!

அநேகமாக ஆணினத்தை அணுகும்வரையில் பெண் சிலந்தி தன் விரோதிகளிடம் பொழுதைக் கழிக்கிறது. ஆனால் சிற்சில சமயங்களில் காதல் அரும்பி, ஆணைப் பெண் அணுகிக் களி நடம் புரியும். இரண்டும் ஒன்றாகச் சாப்பிடும். சில ஆண் சிலந்திகள் பெண்ணை விரும்பி அணுகும்போது அதற்கு இரை கொண்டுவந்து கொடுக்கும். சேர்ந்த பிறகு (இது கொஞ்ச

நேரமே நீடித்திருக்கிறது) பெண் சிலந்தி ஆண் சிலந்தியின் தலையை விழுங்கி விடுகிறது! காம ஆசை நீங்கியதும் மீண்டும் பசி எடுப்ப தால் அது அப்படிச் செய்கிறது!

* * *

நூத்தக் கிளியின் இனத்தைச் சேர்ந்த ஒருவகைப் பூச்சி இன்னும் கொடூரம் வாய்ந்தது. அதில் ஆணைப் பெண் தழுவி அணைக்கும் போதே அதைத் தலையோடு விழுங்கி விடுகிறது. ஆண் தப்ப யோசனை செய்வதற்குமுன் அதன் தலை பெண்ணின் வயிற்றுக்குள் பத்திரமாக இருக்கும்!

வேறு சில பூச்சிகளில் பெண்கள் புத்தி வாய்ந்தவை. அவை தம் கணவன்மார்களை நன்றாக வேலை வாங்குகின்றன. ஆண்களை அடக்கி ஆண்டு, தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் அவை பெற்றுவிடுகின்றன.

இந்தச் சிற்றின்பத்துக்காகவும், சிறிது சாப்பாட்டுக்காகவும் ஆடு மாடுகள் போல உழைத்துத் தம் உயிரையே விடுகின்றன ஆண் பூச்சிகளில் பல! இதில் என்ன இன்பம் இருக்கிறது,பாவம்!

இதைப் போக்க வேண்டுமானால் எல்லாப் பிராணிகளும் (ஆணினங் கள் மாத்திரம்) ஒன்று சேர்ந்து ஒரு மகாநாட்டைக் கூட்டவேண் டும். தமக்குள் தேர்தல் நடத்த வேண்டும்; பிரதிநிதியைத் தேர்ந்து கொள்ள வேண்டும். உடனே தம் குறைகளைப் போக்கக்கூடிய சட்டங்களை அமலுக்குக் கொண்டு வர வேண்டும்.

ஆண்களே, உஷார்! இந்தச் சந் தர்ப்பத்தைக் கைவிட்டு விடாதீர் கள்! உடனே கூட்டம் போட்டுத் தேர்தல் நடத்துங்கள்! குறை நீங்கி நீங்கள் சுகமாக வாழ வேண்டுமானால் உடனே மகா நாட்டைக் கூட்டுங்கள்!

சர்ச்சில் பிரசங்கப் பெருமை

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் ஒரு சமயம் டாக்ஸி அமர்த்திக்கொண்டு காமன்ஸ் சபைக்குப் போனார். டாக்ஸி டிரைவரை வாசலில் நிறுத்தி, "இங்கேயே ஒரு மணி நேரம் காத்திரு. நான் திரும்பி வருகிறேன்" என்றார்.

"அது முடியாது. நான் உடனே வீட்டுக்குப் போய், ரேடியோவில் சர்ச்சில் துரையின் பிரசங்கத்தைக் கேட்க வேண்டும்" என்றான் டிரைவர்.

பிரதம மந்திரிக்குப் பிரமாத சந்தோஷம் வந்துவிட்டது. பெருந்தொகை ஒன்றை இனாம் கொடுத்தார்.

டிரைவர் ஆனந்தம் பொங்க அந்தப் பணத்தைக் கையிலே வைத்தபடி பார்த்தான். "சரி, ஸார். பரவா யில்லை. நான் காத்திருக்கிறேன். சர்ச்சில் துரை எக்கேடு கெட்டும் போகட்டும்" என்றான்.

—'பாரிஸ்—மாட்ச்'

கார்ட்டூன் கதம்பம்



இந்தியாவில் உள்ள அந்நிய ஆதிக்க மூட்டைப்பூச்சிகள்.

—'சங்கர்ஸ் வீக்லி'



குள்ளனும் அரக்கனும் துணை சேர்ந்த கதை.

—'அமிர்தபஜார் பத்திரிகை'

யூஸஃப் டாடு தலைமையில் தென்னாப்பிரிக்கப் போராட்டம்.

—'ஃபோரம்'



பிரிட்டனில் நடப்பது இது.

—'எவ்வரிபடிஸ் வீக்லி'

தீயுடன் போர்

★

"தீ விபத்தா! ஐயோ, என்ன செய்வேன்!" என்று அலறிப் பயனில்லை. "தீயணைக்கும் படை வந்துதான் வேலை தொடங்க வேண்டும்" என்று நினைப்பதும் தவறு. எவரும் உடனே அதனுடன் போராடக்கூடிய வழிகளைச் சொல்லும் இதற்கு ஆதாரம் 'காரொனெட்' பத்திரிகையில் பால் டபிள்யூ. கார்லி என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரை.

எங்காவது தீப் பற்றிக்கொண்டால் உடனே ஒரே பரபரப்பும் திகிலும் ஏற்பட்டுத் திகைத்து நிற்கிறோமே, அது தான் கூடாது. சட்டென்று தீர்மானித்து அப்போதே அதைத் தடுக்க வேண்டும். தீப் பிடிக்க முடியாத வஸ்து எதாவது அருகில் இருந்தால் அதைப் போட்டுத் தீயை உடனே அணைத்துவிடலாம்.

சமைக்கும் போதுதான் பெரும்பாலும் இப்படித் தீ விபத்து ஏற்படுகிறது. சமீபத்தில் ஓர் அம்மாள் விஸ்கான்ஸின் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்திலே, கெரோஸின் ஸ்டவ் ஒன்றை ஏற்றி விட்டு அதில் கெரொஸின் எண்ணெயை ஊற்றிக் கொண்டிருந்தாள். 'பர்னர்'ரில் கொஞ்சம் எண்ணெய் சிந்திவிட்டது. உடனே ஒரேயடியாய்த் தீ பற்றிக் கொண்டது. மற்றப் பெண்களாக இருந்தால் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடியிருப்பார்கள். ஆனால் அவள் உடனே அருகில் இருந்த ரத்தினக் கம்பளத்தை ஸ்டவ் மீது போட்டு மூடிவிட்டாள். பெரிய தீ விபத்து ஏற்படாமல் அதோடு அடங்கிவிட்டது. ஆகவே, சமயோசித புத்தி இருக்க வேண்டியது அவசியம்.

நியூ ஜெர்ஸியில் ஓர் அம்மாள் மேல் மாடிக் கூடத்தில் ஒட்டடை அடித்துக் கொண்டிருந்தாள். கீழிருந்து புகை நாற்றம் வீசியது. ஸ்நான அறையில் குட்டைகளை மாட்டும் இடத்தருகில் சிறு ஸ்டவ் ஒன்றை வைத்துவிட்டுப் போயிருந்தாள்; இரண்டு குட்டைகள் தீப் பற்றிக்கொண்டு விட்டன. அவள் அங்கே போவதற்குள் அறையின் ஜன்னல் திரையில் தீ பரவி விட்டது. யோசனை செய்யக்கூட நேரமில்லை. ஒட்டடைத் துடைப்பத்தால் அந்த இடத்தில் அப்படியும் இப்படியும் அடித்தாள். திரையிலிருந்த தீ அணைந்துவிட்டது. பிறகு அந்தக் குட்டைகளைக் கீழே தள்ளித் துடைப்பத்தால் அடித்து அடித்து ஒருவிதமாகத் தீயை அணைத்துவிட்டாள். தீ அணைக்கும் படையைச் சேர்ந்தவன்கூட இதைவிட விரைவில் அணைத்திருக்க முடியாது.

வீட்டிலேயே கைக்கெட்டிய தூரத்தில் இப்படி எத்தனையோ சாமான்கள் கிடைக்கும்.

பரபரப்பில்லாமல் அவைகளை உப யோகிக்கத் தெரியவேண்டும்; அவ்வளவுதான். அடுப்பில் எண்ணெய் சிந்திப் பற்றிக்கொண்டால் உப்பு டப்பாவிலிருந்து உடனே கொஞ்சம் உப்பை எடுத்து அதில் போடுங்கள். பட்டென்று அது அடங்கி விடும்.

சோடா (பைகார்ப்) உப்பு இருந்தால் பின்னும் விசேஷம். அதை நாலைந்து கை எடுத்து அள்ளி வீசிவிட்டுப் போங்களேன். அப்புறம் கால் நடுங்கிச் சோர்ந்து போனாலும் பரவாயில்லை. ஆனால் சர்க்கரை, மாவு போன்ற பண்டங்களை வீசி எறிந்தால் வெடித்துத் தெறித்துத் தீ இன்னுங்கூடப் பரவிவிடும்.

தோட்டம் இருப்பவர்கள் நீர் இறைக்க ரப்பர்த் தண்ணீர்க் குழாய் வைத்துக்கொண்டிருக்கலாம். அது இருக்கிறதே என்ற யோசனை சமயத்தில் சகஜமாகத் தோன்றுவதில்லை. ஆனால் தீ அணைக்க அதைவிடச் சுலபமான சாதனம் வேறு எதுவுமே இல்லை. முன் ஜாக்கிரதையாகச் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்: முதலில் தீ அணைக்கும் ஆபீஸுக்குத் தெரிவித்து விடுங்கள். தீ அணைக்கும் படை வருவதற்குள் நாமே அதைச் சமாளித்து விட்டால் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் அவர்கள் வந்து பார்த்துக் கொள்ளலாம். ஓர் அறையில் பற்றி விட்டால் கூடிய வரைக்கும் தீ பரவாதபடி அதை மூடி விட்டு ஜன்னல் வழியாகத் தண்ணீரை உள்ளே அடியுங்கள். நெருப்பு எங்கே புறப்படுகிறதோ அந்த இடத்தைப் பார்த்துத் தண்ணீர் அடிக்க வேண்டும்; புகை மேல் அடித்துப் பலனில்லை. இப்படிக் கொஞ்ச நேரம் மேலும் கீழும் வலது பக்கமும் இடது பக்கமும் அடித்துக்கொண்டேயிருக்க வேண்டும்.

சில சமயம் நமக்குத் தெரியாதபடி தீ விபத்து ஏற்படலாம். புகைக் கூண்டில் அதிகச் சூடேறித் தீப் பற்றிக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் சீர்கெட்ட மின்சார 'வயர்' உருகி இப்படி நேரலாம். கூரையையோ சுவரையோ கடப்பாரையால் இடித்துத் தண்ணீர் அடித்தால் நல்லது. ஆனால், எல்லாருக்குமே இதற்கெல்லாம் வசதி இருந்துவிடும் என்று சொல்வதற்கில்லை.

தீ மூண்ட இடத்தை எதோ ஒரு விதமாகக் கண்டு பிடித்து அதை அணைத்ததும் வெகு சுவரில், தூரத்துக்கு அது பரவவில்லையா என்று கவனியுங்கள். சுவரில் உள்ள வர்ணம், சுவரில் ஒட்டியிருக்கும் காகிதம் இவை கருகியிருந்தாலும் அந்த இடத்தை உடனே கவனிக்க வேண்டும். சுவர் இன்னும் சூடாகவே இருக்கிறதோ என்றும் பார்க்க வேண்டும். கூரையில் மரச் சட்டம் அடித்திருந்தால் ரப்பர்த் தண்ணீர்க் குழாயை அவ்வளவு உயரத்தில் கொண்டு போய்த் தண்ணீர் அடிக்க முடியாது. அதுவும், இரண்டடுக்கு மாடி வீடாக இருந்தால் கேட்கவே வேண்டியதில்லை.

இப்படிக் கூரை பற்றிக்கொள்வது நமக்குச் சாதாரணமாகத் தோன்றலாம். இதனால் ஊரே கூடச் சில சமயம் பற்றிக் கொண்டு போய்விடுமென்றால் பாருங்கள்.

எதற்கும் கைக்குக் காவலாக அலுமீனிய ஏணி ஒன்று வாங்கி

வைத்துக்கொள்வது நல்லது. அது தூக்க லேசாகவும் இருக்கும்.

எல்லாவற்றையும் விட 'எக்ஸ் டிங்குவிஷர்' என்ற தீ அணைக்கும் கருவிதான் ஒவ்வொரு வீட்டிலும் அவசியமாக இருக்க வேண்டும்; 'இதில் எத்தனையோ தினுசு இருக்குமே; எதை வாங்குவது?' என்று தோன்றலாம். 40 - பவுண்டு கனமுள்ள பெரிய 'எக்ஸ்டிங்குவிஷர்' வாங்குவதைவிட அதே விலைக்குக் கைப் பம்புமாதிரி இருக்கும் சிறிய 'எக்ஸ்டிங்குவிஷர்' வாங்கி விடலாம். இதிலுள்ள திரவந்தான் நீராவியை உண்டு பண்ணித் தீயை அணைக்கிறது: (1) சாதாரணமாக எண்ணெயினால் தீப் பற்றிக்கொண்டாலும் சரி, மின்சாரத்தினால் அப்படி ஏற்பட்டாலும் சரி, உடனே இதைக் கொண்டு அணைத்துவிடலாம். ஆனால் உபயோகிக்கும் விதம் தெரிந்து இதை உபயோகிக்க வேண்டும். (2) இந்தத் திரவம் எளிதில் இறுகாது; வேண்டியிருந்தால் கருவியைத் திறந்து அவ்வப்போது நிரப்பிக்கொள்ளலாம். (3) சற்றுத் தொலைவிலிருந்து அடித்தாலும் போதும்; தீ அதிகமாகப் பரவ வொட்டாமல் கப்பென்று அடங்கிவிடும்.

இந்தக் கொஞ்சம் திரவத்தினால் என்ன பிரமாதமாகச் சாதித்து விட முடியும் என்று தோன்றலாம். திரவம் கொஞ்சமாக இருந்தாலும் எரியும் பொருளின் மேல் பட்டதும் ஏராளமான ஆவி (வேப்பர்) கிளம்புகிறது. அது தான் உடனே தீயை அடக்கி விடுகிறது.

சமீபத்தில் ஒரு வீட்டில் ஓர் அம்மாள் விளக்கிலிருந்து எண்ணெய் எங்கேயோ ஒழுகுகிறதே என்று தயங்கிப் பார்த்துக் கொண்டே, தீக் குச்சியைக் கீழே போட்டு விட்டாள். அதில் நெருப்பு இருந்ததால், உடனே கீழே சிந்தியிருந்த எண்ணெயில் தீப் பற்றிக்கொண்டு குப்பென்று மேலே கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்து விட்டது. அவள் இன்னது செய்வது என்று புரியாமல் திகைத்துக்கொண்டிருக்கும் போது அவளுடைய பெண் ஓடி வந்து சுவரில் மாட்டியிருந்த சிறு 'எக்ஸ்டிங்குவிஷ'ரை எடுத்து உடனே தீயை அணைத்துவிட்டாள்.

இதில் ஒன்று முக்கியமாகக் கவனிக்கவேண்டும்: தீ எங்கே மூண்டதோ அந்த இடம் பார்த்து இதைப் பீச்ச வேண்டும். இதனால் ஆவி அப்படியே கப்பிக்கொள்ளும். தீயை நெருங்கி வந்துதான் இப்படிக் கை 'எக்ஸ்டிங்குவிஷரை' உபயோகிக்க வேண்டும் என்பதில்லை; 20 அடி தூரத்திலிருந்து தீயில் தெறிக்கும்படி திரவத்தை அடித்தால் போதும். இதுவும் ரப்பர்த் தண்ணீர்க் குழாயும் இருந்தால், தீ பரவாதபடி இப்படி எவ்வளவோ சந்தர்ப்பங்களில் நாமே சமாளித்துவிடலாம்.

கன்னியின் பிரார்த்தனை

கன்னிப் பெண் ஸாலி ஒரு நாள் மாலையில் செய்த பிரார்த்தனை இது: "ஆண்டவரே, உம்மை நான் வேறு ஒன்றும் கேட்கவில்லை. என் தாய்க்கு ஒரு மருமகனை அனுப்பும். இதுவே நான் கேட்பது."

—மெக் பார்டன்

பூமிக்கு அபாயம்

★

"அணுக்குண்டு உலகை அழித்துவிடும்" என்கிறார்கள்; "செவ்வாய் மனிதர்கள் வந்து போர் தொடுப்பார்கள்" என்கிறார்கள். இவையெல்லாம் சரியோ, தவறோ சொல்ல முடியாது. வானவெளி அபாயம் என்றும் நேரக்கூடும். இதை 'ந்யூகாஸில் க்ரானிக்கிள்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் டேவிட் டைட் என்பவர் எழுதியிருக்கிறார்.

அமெரிக்காவில் வாஷிங்டனைச் சேர்ந்த வியாட்டில் என்ற நகரில் 1952 மே 11-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சூரியோதயத்தில் தூங்காமல் விழித்திருந்த மக்களைச் சற்று நேரம் ஒரு பெருங் கிலி பிடித்து உலுக்கிவிட்டது. வியாட்டிலுக்கு வடமேற்கே மிகப் பெரிய எரி நட்சத்திரம் (மீட்டியர்) ஒன்று விழுந்து இடியோசை போன்ற பேரொலியோடு வெடித்தது. அப்போது உண்டான பிரகாசம் வானையே விழுங்கிவிட்டது.



ஒவ்வொரு நாளும் பல கோடி எரி நட்சத்திரங்கள் பூமியை நோக்கிப் பாய்வதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். பெரும்பாலானவை பூமிக்கு வருவதற்கு முன்பே, வரும் வேகத்தில் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. என்றாலும், கனமான சில, பூமியில் வந்து தாக்கிவிடுகின்றன. இப்படித் தாக்குபவற்றின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. "எரி நட்சத்திரம் போன்ற சிறு ஆகாய வெடிகுண்டு மட்டுமன்றி, இதைவிடப் பெரிய 'ஆஸ்டெராயிட்' என்ற சிறு கிரகமும் திடீரென்று வான வெளியிலிருந்து பாய்ந்து பூமியைத் தாக்கும் அபாயம் என்றும் இருந்து கொண்டே இருக்கிறது" என்பது சமீபகால வான ஆராய்ச்சியால் தெரியவருகிறது.

இந்த அபாயத்தைப் பார்க்கும்போது, அணுக் குண்டு

அபாயம் வெகு அற்பமாகவே தோன்றும். இதுவரையில் கண்டு பிடித்த அல்லது கற்பனே செய்த எந்தச்சாதனமும் இந்தப் பேராபத்தைச் சமாளிக்க முடியாது.

இப்படி ஓர் அபாயம் இருப்பது நிஜந்தானு? 'மில்க்கி வே' (பால் வீதி) என்று வான வெளியின் மிக மிகப் பெரிய அமைப்பொன்றுக்குப் பெயர் கொடுத்திருக்கிருர்கள். பல பல நட்சத்திரக் கூட்டங்கள், கிரகங்கள் எல்லாம் சேர்ந்த பேரமைப்பு இது. இதன் வடிவம் வட்டமான ஒரு தட்டைப் போன்றது. இந்தத் தட்டின் குறுக்களவு 60 கோடி கோடி மைல். பிரம்மாண்டமான இந்த அமைப்பில் பூமி ஒரு தூசி அளவுதான். இந்தப் பேரமைப்பைப் போன்ற 10 கோடி பேரமைப்புக்கள் பிரம்மாண்டத்தில் (யூனிவர்ஸ்) இருக்கின்றனவாம். எனவே, ஆகாய வெளியில் சஞ்சரிக்கும் பொருள்களின் எண்ணிக்கை, கணக்குக்கும் கற்பனைக்கும் எட்டாது.

எரி நட்சத்திரமாகும் வான அண்டங்களில் சில சஞ்சரிக்கும் பாதைகள் ஒரு முறைக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக இருக்கின்றன; வேறு சிலவற்றின் பாதைகளோ ஒழுங்கில்லாமல் வக்கிரமாக இருக்கின்றன. இப்படி ஒழுங்கான பாதையிலும் ஒழுங்கற்ற பாதையிலுமாக வான வெளியில் கனவேகமாகப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் கணக்கற்ற அண்டங்கள் ஒன்ருேடொன்று எப்போதாவது மோதிக்கொள்ளாமலா இருக்கும்?

இத்தகைய மோதல்கள் முந்தி நேர்ந்திருக்கின்றன; 'இன்றும் சரி, என்றும் நேர்ந்து கொண்டேதான் இருக்கும்' என்று எண்ண இடம் இருக்கிறது. பூமியோடு 200 கோடி வருஷமாக (பூமியின் வயது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம்) வேறு ஒரு கிரகமும் மோதவில்லையே என்பது இதற்குச் சமாதானமல்ல. வான சாஸ்திரக்கணக்கில் இந்த 200 கோடி வருஷம் கண்ணிமை நேரங் கூட அல்ல. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் பூமியும் சுக்கிரனும் மோதிக்கொள்ள மயிரிழை தப்பியதாக வான சாஸ்திரிகள் சொல்கிருர்கள். இவைகள் ஒன்றை ஒன்று இவ்வளவு நெருங்கியதன் பலனுகத்தான பூமியின் இருசு செங்குத்து நிலேயிலிருந்து 23 டிகிரி சாய்ந்துவிட்டதாம்!

கிரகங்கள் மோதிக்கொள்வது, வான வெளியில் நடந்து கொண்டே இருக்கும் ஒரு தினசரி சம்பவம் என்பதை, தினந்தோறும் பல இடங்களில் வானத்தில் தோன்றும் எரி நட்சத்திரங்களே நிரூபிக்கின்றன. சிறு கிரகங்கள் மோதுவதால் சிதறுண்ட பிசிர்களே எரி நட்சத்திரங்கள். வானப் பொருள்கள் தமக்குள் மோதுவது இல்லே என்ருல் எரி நட்சத்திரங்களும் இல்லே.

எரி நட்சத்திரம் மட்டுந்தான் பூமியில் மோதும் என்ருல் - அது மிகப் பெரியதானுலும் - பிரமாதமான சேதம் ஒன்றும் நேர்ந்துவிடாது. 1908-ஆம் வருஷம் ஜூன் 30-ஆம் தேதி ஸைபீரியாவில் உள்ள 'பொடுகாமின்னேயா துங்கஸ்க்கா' என்ற நதிக்கரையில், ஜன நடமாட்டமில்லாத இடத்தில் மிகப் பெரிய எரிநட்சத்திரம் ஒன்று விழுந்ததால் ஏற்பட்ட சேதத்தைவிட அதிகச் சேதமா ஏற்படப்போகிறது? அது ஸைபீரியா முழுவதையுமே ஓர்

உலுக்கு உலுக்கிவிட்டது. ஐரோப்பா ஆசியாக் கண்டங்களின் பெரும் பகுதியில், அது வெடித்த தால் உண்டான பேரொளி பரவியது. லண்டன் அல்லது மாஸ்கோ நகரத்தின்மேல் அது விழுந்திருந்தால், சில விநாடிகளில் அந்த நகரங்கள் இருந்த சுவடே தெரியாமல் போயிருக்கும். இவ்வளவுதான்.

அதைவிடப் பெரிய கிரகம் ஒன்று பூமியின் மேல் மோதினால் என்ன நேரும்? 1932-இல் ரீன்மத் என்ற ஜெர்மன் வான சாஸ்திரி வான வெளியில் கண்டு பிடித்த ஒரு சிறு கிரகம் பூமியை நோக்கிக் கன வேகமாகப் பாய்ந்து வருவதை, 1937 அக்டோபரில் வான சாஸ்திரிகள் பார்த்தார்கள். பூமியோடு அது மோதியே விடும் என்று பயந்தார்கள். அதன் குறுக்களவு 2 மைல். அதுமட்டும் பூமியில் மோதியிருந்தால் உலகின் பெரும்பகுதிக்குப் பயங்கரமான நாசம் ஏற்பட்டிருக்கும். ஆனால் தெய்வாதீனமாக அக்டோபர் 30 - ஆம் தேதி அது பூமியை விட்டு 4 லட்சம் மைல் தூரம் விலகிப் போய்விட்டது. வான வெளிக் கணக்கில் 4 லட்சம் மைல் தூரம் என்பது உராய்ந்து செல்வது போலவே ஆகும். மயிரிழை பிசகிய இந்த அபாயம் அந்த நூற்றாண்டின் வான சாஸ்திரிகளை எல்லாம் ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

"ஒவ்வொரு வருஷமும் சுமார் 300 கிரகங்களைப் புதிதாகக் கண்டு பிடிக்கிறார்கள். ரீன்மத் கிரகம் இன்னும் ஐந்து மணி நேரம் தப்பியிருந்தால், நம் பூமியில் வந்து மோதியிருக்கும். அப்படி நேர்ந்திருந்தால் நமக்கு அதைப் பற்றிய செய்தியெல்லாம் வெட்ட வெளிச்சமாகி யிருக்கும். இந்த மோதுதலோடு அணுக் குண்டின் சேதத்தை ஒப்பிட்டால், அணுக் குண்டுச் சேதம் எறும்புக்கடி அளவு என்றுதான் சொல்லவேண்டும்" என்று கிரீன்விச் வான ஆராய்ச்சி நிலையத் தலைமை விஞ்ஞானியான டாக்டர் ஆலன் என்னிடம் சொன்னார். சுமார் 5,000 வருஷங்களுக்கு முன் 10 லட்சம் டன் கனமுள்ள எரி நட்சத்திரம் ஒன்று அரிஸோனா என்ற அமெரிக்க மாகாணத்தில் மோதியதாம். அது விழுந்த இடம் ஒரு மைல் குறுக்களவும் 600 அடி ஆழமும் உள்ள ஒரு கிண்ணம்போல் குழிந்துவிட்டது. இந்தப் பள்ளத்தை இன்று 'கேனன் டயப்ளோ' (Cannon Diablo) என்று வழங்குகிறார்கள்.

வருஷம் முழுவதும் பூமியின் மேல் எரி நட்சத்திரப் பொடி உதிர்ந்துகொண்டே இருக்கிறது. ஒரு வருஷத்தில் பூமியில் விழும் இந்தப் பொடியின் எடை 600 டன். இந்தப் பொடியினால் பூமியின் மேற்பரப்பு மாறி அதன் பரிமாணமும் கனமும் அதிகரிக்கின்றன. இப்படி வருஷந்தோறும் பூமி பருத்துக்கொண்டே வருவதால் அதன் ஆகர்ஷண சக்தி (கிரேவிட்டி)யும் அதிகரிக்கிறது. இதனால் ஒவ்வொரு வருஷமும் அதிகமான எரி நட்சத்திரங்கள் பூமியை நோக்கி விழுகின்றன.

அமெரிக்கக் கப்பற் படை வான ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் வில்லியம் மார்க்கோவிட்ஸ் என்பவர் 1951 மார்ச்சில், புதுக்கிரகம் ஒன்றை வான வெளியில் கண்டார். "இதன் குறுக்களவு சுமார் 50 மைல் முதல் 100 மைல் வரை இருக்கலாம். இதன் சஞ்சாரப் பாதையை இன்

னும் கணிக்கவில்லை. இது எப்படிச் சஞ்சரிக்கிறதோ தெரியாது. சூரியனைச் சுற்றி வரும் இது பூமியில் மோதுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது'' என்கிறார் மார்க்கோவட்ஸ். வேறு கிரகம் ஒன்றிலிருந்து மனிதனைப் போன்ற அறிவாளிகள் பூமியின்மேல் படையெடுக்கப் போகிறார்களென்று போலி விஞ்ஞானிகள் பேசுகிறார்கள். அவ்வளவு தூரம் நம் கற்பனையை ஓட்ட வேண்டாம். ஆனாலும் என்றாவது ஒரு நாள் வான வெளியிலிருந்து கிரகங்கள் வந்து மோதுவதால் நம் பூமிக்கு ஆபத்து நேரலாம்; இதைமாத்திரம் இல்லை என்று சொல்வதற்கில்லை.

வாழ்க்கைச் செலவு

ஓர் இளம் மனைவி முதல் முதலாகக் குதிரை ரேஸுக்குப் போனாள். குதிரைகள் சடசடவென்று, ஜய ஸ்தம்பத்தைத் தாண்டிப் பாய்ந்ததை அவள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரேஸ் சங்க ஸ்டேவர்டு ஒருவர், ''என்ன, அம்மா? இதைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்று கேட்டார்.

''தோன்றுவதென்ன? வாழ்க்கைச் செலவுதான் ஞாபகம் வருகிறது.''

''வாழ்க்கைச் செலவா? அது ஞாபகம் வருவானேன்?''

''ஏனோ, எனக்குத் தெரியாது. எதைப் பார்த்தாலும் எனக்கு உடனே வாழ்க்கைச் செலவே ஞாபகம் வருகிறது'' என்றாள் பெண்.

—'என்லைன் நியூஸ்'

மணத்துக்கு இடைஞ்சல்

இந்தக் காலத்தில் மண வாழ்க்கைக்குப் பேரிடைஞ்சலாயிருப்பது என்ன தெரியுமா? ஒருவன் தன் வருமானத்தைக் கொண்டு ஒரு சர்க்கார், ஒரு மனைவி இரண்டு பேரையும் சம்ரட்சிக்க வேண்டியிருப்பதுதான்.

—'தி பெனிஃபிட் நியூஸ்'

பொய்ப் பல் கட்டிக்கொண்ட பெண்

மண வாழ்க்கை சம்பந்தமாகப் பல லட்சக்கணக்கான பெண்கள் சந்தேகம் கேட்டு, டொராதி டிக்ஸ் என்பவளுக்குக் கடிதங்கள் எழுதிப் பதில் பெற்றிருக்கிறார்கள். அவளிடம் அப்படி வந்த கடிதங்களுக்குள் அவளுக்குப் பிரியமான ஒன்று இது: ''என்னை ஒரு வாலிபன் காதலித்து, தன்னை மணக்கும்படி கேட்டிருக்கிறான். என் பல் பொய்ப்பல் என்று அவனுக்குத் தெரியாது. தெரிவிக்கட்டுமா, வேண்டாமா?'' இதற்கு டொராதி டிக்ஸ் அளித்த ஒரே வாக்கியப் பதில் இதுதான்: ''வாயை மூடு.''

—'தி டைஜெஸ்ட் அவ் வேர்ல்ட் ப்யூட்டி'

கென்யா பயங்கரம்

★

'கொலைக் கூட்டம்', 'கொள்ளைக் கூட்டம்' என்றெல்லாம் தோன்றும்படி, 'மாவ் மாவ்' இயக்கத்தைப் பற்றிச் செய்திகள் வருகின்றன. உண்மை என்ன? அதை விளக்கும் இந்தக் கட்டுரைக்கு ஆதாரங்கள்: (1) 'எவ்வரி படிஸ் வீக்லி'; (2) 'இல்லஸ்ட்ரேடட்'; (3) 'தி டெய்லி டெலிகிராஃப்'; (4) 'மாடர்ன் ரெவ்யூ'; (5) 'டைம்'.

'உள்ள மகிழ்ச்சி கொண்ட நாடு' என்று பிரிட்டிஷ் கவர்னர் ஒருவர், கென்யா நாட்டைப் புகழ்ந்தார். அதன் தலை நகரம் நைரோபி. அந்த நகரத்து வீதிகளிலே இப்போது ஆயுதம் தாங்கிய போலீஸ்காரர் ஜோடி ஜோடியாக நடக்கிறார்கள். இருண்டுவிட்டால் ஐரோப்பியப் பெண்கள் வெளியிலே காரில் போகக்கூட அஞ்சுகிறார்கள். நாட்டின் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு வேறு பிறந்திருக்கிறது. மாவ் மாவ் (Mau Mau) என்ற பயங்கரப் புரட்சிக் கூட்டத்தின் செயல்கள் தான் இதற்கெல்லாம் காரணம் என்று சொல்லுகிறார்கள்.

பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்காவின் ஒரு பகுதியே கென்யா. (இப்போது பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்கா முழுவதற்குமே 'கென்யா' என்ற புதுப்பெயர் வழங்குகிறது.) கென்யாவின் விஸ்தீர்ணம் சற்றேறக்குறைய 2,25,000 சதுரமைல். ஜனத்தொகை சுமார் 55,00,000. பிரிட்டிஷ் காலனி, ப்ரொடெக்





இப்படி நாகரிகமாய்த் தோன்றும் சிக்தயுக்கிளைக்கூட நம்ப முடிய வில்லையாம்.

டரேட் இரண்டுமாக இருப்பது கென்யா. (காலனி என்றால் குடியேறும் நாடு. ப்ரொடக்டரேட் என்றால் பாதுகாப்புக்கு உள்பட்ட நாடு. பாதுகாப்புக்கு உள்பட்ட நாட்டின் சுதேசிகள், பாதுகாப்பளிக்கும் சர்க்காரின் பிரஜைகள் அல்ல.) கென்யாவின் ஜனத்தொகையில் சுதேசிகள் போக மற்றவரில் 30,000 பேர் ஐரோப்பியர்; 1,00,000 பேர் இந்தியர்.

சுகமான சீதோஷ்ண ஸ்திதியுள்ள பிரதேசமாயிருப்பதால், வெள்ளைக்காரர் இங்கே குடியேற வசதியாயிருக்கிறதாம். இந்த நாட்டில் அருமையான ஆறுகள் ஓடுகின்றன. இங்கிருந்து ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளுக்கும் ஐரோப்பாவுக்கும் போய்வரச் சௌகரியமான ஆகாய விமானப் பாதைகள் இருக்கின்றன. வேட்டையாடச் சிறந்த இடம் கென்யா. இந்த நாட்டில் சில வருஷங்களுக்கு முன் வரைக்கும் ஆப்பிரிக்கச் சுதேசிகள், தங்களுக்கென்று ஒதுக்கிய பிரதேசங்களிலேயே பெரும்பாலும் இருந்துகொண்டு, விவசாயம் புரிந்தும் ஆடுமாடுகள் வளர்த்தும் சௌக்கியமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். எந்த ஐரோப்பியன் தங்களுக்கிடையே வந்தாலும், அவனை இவர்கள் அன்போடு உபசரித்து, வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். இப்போதோ நிலைமை அடியோடு மாறிவிட்டது. என்?

"இந்தக் கொந்தளிப்பு, கொஞ்ச காலமாகவே உள்ளுக்குள் குமிழ் விட்டுக்கொண்டிருந்திருக்கிறது. கென்யாவில் மட்டும் அல்ல; ஆப்பிரிக்கா எங்குமே தொல்லைகள் வரக் காத்திருக்கின்றன. இவைகளின் மூல காரணம், ஆப்பிரிக்க மக்களிடம் ஒரு பெரிய சமூகப் புரட்சி ஏற்பட்டிருப்பது தான்.

"நைரோபி நகரில் இப்போது கலவரம் தோன்றியிருக்கிறது. இங்கே லட்சம்பேர் இன்று வசிக்கிறார்கள். இந்த நகரம் இருக்கும் இடம், 55 வருஷங்களுக்கு முன்னே, புல்லும் கல்லும் நிறைந்த காடாக இருந்தது. வீடு, வாசல், குடும்பம் முதலிய ஆதரவு எதுவும் அற்ற 70 ஆயிரம் ஆப்பிரிக்கச் சுதேசிகள் இங்கே வந்து கிடக்கிறார்கள். பெரும்பாலோருக்கு வேலைகூடக் கிடைக்கவில்லை. பெண்கள் ஒரு மடங்கு என்றால், ஆண்கள் நாலு மடங்கு இருக்கிறார்கள். பெண்களில் பலர் வேசைத் தொழில் புரிந்து ஜீவிக்கிறார்கள்.

"விலைவாசிகள் வானளாவ ஏறி விட்டன. கூலி விகிதம் மட்டும் பின் தங்கி நிற்கிறது. கஷ்டமும் கவலையும் அதிகரித்துவிட்டன. இந்தச் சுதேசிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்குள்ள வெள்ளைக்காரர்கள் வெகு சௌக்கிய மாகவும் சுகபோகங்களோடும் வாழ்கிறார்கள். இது போக, நிற வேற்றுமை வேறே பாராட்டுகிறார்கள். இந்த நிலைமையில், தானாகவே புரட்சி தோன்றாதிருக்குமா?" என்று எலிஸெபெத் ஹக்ஸ்லீ என்பவர், லண்டன் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகையில் எழுதுகிறார்.

எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் காலனிகளுக்குச் சுய ஆட்சி வழங்குவதுதான் தங்கள் கொள்கை என்று பிரிட்டிஷார் சொல்லுகிறார்கள். ஆனால் சாசுவதமாய்க் குடியேறிய வெள்ளைக்காரர்களுக்கும் சேர்ந்துதான் இந்தச் சுய ஆட்சி என்று சுதேசிகள் நினைக்கவில்லை. இப்போது வெள்ளைக்காரர்களே பெரும் சம்பளம் வாங்குகிறார்கள். சுய ஆட்சி வந்ததும், எல்லா வெள்ளைக்காரர்களும் போய்விடுவார்கள் என்பது சுதேசிகளுடைய அபிப்பிராயம். "போகத்தான் போகிறார்கள்; உடனே போய்விடட்டுமே" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

சுதேசிகளுக்குள் கிக்குயு (Kikuyu) என்ற வகுப்பார்

போலீஸார் சந்தேகித்த கிக்குயுக்களை இப்படிக் கூட்டங்கூட்டமாகக் கைது செய்து வளைத்துப் போட்டிருக்கிறார்கள்.

தான், வெள்ளையர் - எதிர்ப்பு இயக்கத்தில் முகாமை வகிக்கிறார்கள். இவர்கள் கென்யா கடற்கரையிலிருந்து விக்டோரியா ஏரி வரைக்கும் உள்ள பிரதேசத்திலும், உகண்டா, தங்கனியாகா இவற்றின் பகுதிகளிலும் வசிக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை சுமார் 10,00,000.

கிக்குயு மத்தியச் சங்கம் என்ற ஒன்று அரசியல் லட்சியத்துடன் முப்பது வருஷங்களுக்கு முன் அமைந்தது. ஜமீன்தாரி போன்ற ஒரு முறையையும், பிரிட்டிஷ்காரரையும் ஒழிக்க வேண்டும் என்பது இந்தச் சங்கத்தின் நோக்கம். இரண்டாவது உலக யுத்த காலத்தில் இந்தச் சங்கத்தைக் கலைத்து விடவேண்டும் என்று கென்யா பிரிட்டிஷ் சர்க்கார் தடை உத்தரவு போட்டு விட்டார்கள். சங்கம் சட்ட விரோதமானதிலிருந்து, மாவ் மாவ் என்ற பயங்கர இயக்கம் தோன்றியது. இந்தச் சங்கத்தில் சுமார் 1,00,000 பேர் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மாவ் மாவ் சங்கத்தில் கிக்குயு வகுப்பினர் மாத்திரம் அல்ல; வேறு வகுப்பார்களும் சேர்ந்திருக்கிறார்கள். பலாத்காரமோ, வேறு எந்த வழியினாலாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் இந்தச் சங்கத்தின் நோக்கம்.

இந்தச் சங்கத்தில் சேர விரும்புகிறவனை ஒரு சிறு குடிசைக்கு அழைத்துச் செல்லுகிறார்களாம். அங்கே இருட்டில் அரை மணி நேரம் நிர்வாணமாக அவன் உட்கார்ந்திருக்க வேண்டும். பிறகு மற்றொரு குடிசைக்கு அவனை அழைத்துச் செல்லுகிறார்கள். அங்கே ஒரு பெரிய குரு இருப்பார். ஒரு பலிபீடம் அமைந்திருக்கும். அதற்கருகே அபேட்சகனை நிறுத்துவார்கள். அந்தப் பீடத்தைச் சுற்றிலும் புல்லையும் பிய்த்த ஆட்டுக்குடலையும் இறைத்திருப்பார்கள். அங்கே ஒரு 'கமான்' வளைவு இருக்கும். அபேட்சகன் அதில் ஏழு தடவை புகுந்து புறப்பட வேண்டும். அப்புறம் ஒரு வாழையிலையை ஏந்திக்கொண்டு பெரிய குரு அவனிடம் வருவார். அந்த இலையில் இரண்டு ஆட்டுக் கண்களை முள்ளால் குத்தி வைத்திருப்பார்; ஆட்டு ரத்தமும் தடவியிருப்பார். இந்த ரத்தத்தில் சிறிது எடுத்து, அபேட்சகனின் நாவில் குரு தடவுவார். ரத்தத்தினால் சிலுவைக் குறி ஒன்றை அவனுடைய நெற்றியில் இடுவார். "நான் எப்போதும் என் கிக்குயு பெயரையே வைத்திருப்பேன்; கிறிஸ்தவப் பெயரை வைத்துக் கொள்ள மாட்டேன்" என்று அபேட்சகன் ஒரு பிரமாணம் செய்வான். பின்பு அவன் கையை உயர்த்தச் சொல்லி, கட்கத்தில் பேனாக்கத்தியால் ஏழு தடவை குரு கீறுவார். "வெள்ளைக்காரரை இந்த நாட்டிலிருந்து விரட்ட என்னாலான முயற்சியெல்லாம் புரிவேன். அவசியமானால் கொலையும் செய்வேன். போலீஸ்காரருக்கு உதவி புரிய மாட்டேன்" என்று அபேட்சகன் சத்தியம் செய்வான். இதன் பின் சங்கத்துக்கு மூன்று பவுன் காணிக்கை செலுத்தி விட்டால், அவன் சம்பூர்ண அங்கத்தினன் ஆகி விடுவானாம்.

"இந்த நாட்டை ஆள்பவர் நாங்கள்—அதாவது மாவ் மாவ்.

"எங்கள் பிரமாணம் ஏழு வருஷத்துக்குச் செலாவணியாகும்.

"சர்க்காரிடம் பிரமாணம் செய்வோரைக் கொல்வோம்.

"இந்த விளம்பரத்தை அழிப்பவரைக் கொல்வோம்.

"சர்க்காரிடம் காட்டிக் கொடுப்பவரைக் கொல்வோம்"

என்ற விளம்பரம் பல மரங்களில் தொங்குகிறது. அந்த விளம்பரத்தில் ஏழு பேர் அடங்கிய மாவ் மாவ் கமிட்டி ஒன்றின் கையெழுத்துக்கள் இருக்கின்றன. ஏழு என்பது மந்திர சக்தியுடைய எண்ணும்.

இந்தச் சங்கம் இருப்பதை மூன்று வருஷத்துக்குமுன் நைவாஷா பிரதேசத்தில்தான் முதல் முதலாக டேவிட்ஸன் என்ற தொழிலாளர் அதிகாரி கண்டு பிடித்தார். அவரே இதற்கு இந்தப் பெயரை வைத்தார். மாவ் மாவ் என்பதற்கு அர்த்தம் எதுவும் இல்லை. என்றாலும், பெயர் நிலைத்துப் பரவிவிட்டது.

பிரிட்டிஷாருக்குச் சாதகமாக இருந்த வராஹியு, டேரி என்ற இரண்டு சுதேசிச் சிற்றரசர்களை மாவ் மாவ் புரட்சிக்காரர் கொன்று விட்டார்கள். சில வெள்ளைக்காரர்களையும் கொலை செய்துவிட்டார்கள். மக்களிடம் இவர்களுடைய செல்வாக்கு அதிகரித்து வருகிறது.

இந்திய ராணுவத்தில் பதவி வகித்த மாஜி கர்னல்களும், மாஜி மேஜர்களும் மற்றும் பிறருமாகப் பல வெள்ளைக்காரர் இங்கே நிலம் பெற்றுப் பெரிய பண்ணைமுதலாளிகளாக வாழ்கிறார்கள். சில ஏக்கர் நிலம் உள்ளவர் முதல் பல சதுர மைல் நிலம் உள்ளவர் வரைக்கும் பல வகையினராக இருக்கிறார்கள். விவசாயப் பண்ணைகளும் கால் நடைப் பண்ணைகளும் நடத்துகிறார்கள். விலையுயர்ந்த சாராயம் குடிக்கிறார்கள். அருமையான உணவு சாப்பிடுகிறார்கள். சுமார் 5 லட்சம் சுதேசிகளை அமர்த்திக்கொண்டு வேலை வாங்குகிறார்கள். இந்த வெள்ளைக்காரரின் நிலைமை இப்போது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. மாவ் மாவ் செல்வாக்கினால், பல சுதேசிகள் இவர்களுடன் ஒத்துழையாமை புரியத் தொடங்கிவிட்டார்கள். இரவுத் தூக்கமில்லாமல், துப்பாக்கியை எடுத்துக்கொண்டு தங்கள் பண்ணைகளை இவர்கள் இப்போது சுற்றிப்பார்த்துவர வேண்டியிருக்கிறது.

சுதேசி ஊழியர்களை, மீதி இடத்தில் உள்ள ஐரோப்பியர்களைவிடக் கென்யா வெள்ளையர்கள் அதிகச் சௌக்கியமாகத்தான் நடத்துகிறார்கள். ஆனால், நிற வேற்றுமையை மட்டும் விடவில்லை. "சுதேசிகளிடம் நாங்கள் அன்போடு நடந்துகொண்டால் போதாதா? ஐம்பது வருஷத்துக்கு முன்பு மரத்துக்கு மரம் தாவிக் கொண்டிருந்த குரங்குகள்தானே இவர்கள்!" என்று வெள்ளைக்கார முதலாளிகள் வாதிப்பதாக அமெரிக்க 'டைம்' நிருபர் சொல்லுகிறார். கிக்குயுக்கள் சொல்லும் கட்சி இது: (1) எங்களுக்கு அதிக நிலம் வேண்டும்; (2) அதிகக்கூலியும் நல்ல படிப்பு வசதியும் வேண்டும்; (3) படித்த எல்லாச் சுதேசிகளுக்கும் சொத்துள்ள சுதேசிகளுக்கும் ஓட்டுரிமை வேண்டும்.

இதற்கெல்லாம் வெள்ளைக்காரர் இணங்கவில்லை. கிக்குயு அரசியல் சங்கத்தையே கலைத்தார்கள். ரகஸ்ய மாவ் மாவ் இயக்கம் தோன்றிவிட்டது. கிக்குயுக்களின் 'முடிசூடா மன்னன்' என்று சொல்

லத் தரும் ஜோமோ கென்யாட்டா என்பவரே அதன் தலைவர் என்று பிரிட்டிஷார் சந்தேகித்தார்கள். ('ஜோமோ' என்பதற்கு 'எரியும் ஈட்டி' என்று பொருள்.) ஜோமோ கென்யாட்டா பல சுதேசிப் பள்ளிக்கூடங்கள் நடத்தி வந்தார். அவைகளையெல்லாம் சர்க்கார் மூடிவிட்டார்கள். அவருக்கும் தேசப்பிரஷ்ட உத்தரவு போட்டு அவரைச் சிறை செய்தார்கள். அவர் மீது சர்க்காருக்கு இரண்டு சந்தேகங்கள்: (1) அவரே மாவ் மாவ் இயக்கத்தின் சூத்திரதாரி; (2) அவர் ஒரு கம்யூனிஸ்ட். கிக்குயுக்களின் கோரிக்கைகளில் இப்போது ஜோமோ கென்யாட்டாவை விடுதலை செய்யவேண்டும் என்பதும் சேர்ந்திருக்கிறது.

மாவ் மாவ் இயக்கத்தை எதிர்க்கச் சுதேசிகளில் ஒரு பகுதியினரையே வெள்ளைக்காரர் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. மாவ் மாவ்களின் மந்திரத்தை மந்திரத்தாலேயே எதிர்க்கவேண்டும் என்று இப்போது சில கிக்குயுக்களே கிளம்பியிருக்கிறார்களாம். மாவ் மாவ் பிரமாணத்துக்குப் பதிலாகத் 'தெங்கே' என்ற பிரமாணத்தை மந்திர தந்திரங்களோடு அவர்கள் செய்கிறார்கள். 'தெங்கே' பிரமாண கோஷ்டி ஒன்று, ஒரு சந்தையில் பகிரங்கமாக ஓர் ஆட்டுக் குட்டியைக் கொண்டுவந்து நிறுத்தி மெல்ல மெல்ல அடித்து, மாவ் மாவ்களைச் சபித்துக் கொண்டே கொன்றது. இந்தத் 'தெங்கே' சாபத்தைப் பலிக்காமல் செய்வதற்காக இதே சமயத்தில் மந்திரோச்சாடன பூர்வமாக இரண்டு நாய்களை மற்றொர் இடத்தில் மாவ் மாவ்கள் கொன்று விட்டார்களாம்!

மாவ் மாவ் இயக்கத்தை அடக்க இப்போது பிரிட்டிஷ் சர்க்கார் மிகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். சந்தேகப்பட்டவர்களையெல்லாம் கூட்டங் கூட்டமாகப் போலீஸார் கைது செய்கிறார்கள். பிரிட்டிஷ் துருப்புகளையும் உபயோகிக்கிறார்கள். கொழும்பிலிருந்து 'மொம்பாஸா' என்ற பிரிட்டிஷ் க்ரூய்ஸர் கப்பலும் கென்யாவுக்கு அவசரம் அவசரமாய் ஓடியது.

இப்படியெல்லாம் அடக்குமுறையைக் கைக்கொள்வதோடு நிற்காமல், 1953 தொடக்கத்தில் ஒரு ராயல் கமிஷனை நியமித்து, கென்யாவுக்கு அனுப்புவதென்று சர்ச்சில் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். அது கென்யா தொல்லையின் காரணங்களை ஆராய்வதோடு, விவசாய அபிவிருத்தி, ஆலைத்தொழில் வளர்ச்சி, தொழிலாளர் சம்பளம், வேலையில்லாத் திண்டாட்டம், வியாபாரம், சுரங்கத் தொழில், சமூகப் பாதுகாப்பு முதலிய பல விஷயங்களையும் விசாரணை புரிந்து, பரிகாரங்கள் வகுத்துச் சிபார்சு செய்யுமாம். அந்தக் கமிஷனால் நல்ல பலன் விளையுமா என்பது சந்தேகந்தான். ஏனென்றால், கென்யா வெள்ளைக்காரர்கள் துளியும் சுதேசிகளுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்று மூர்த்தன்னியமாய் இருக்கிறார்கள். துளி கொடுத்தால், அத்தனையும் போய் விடும் என்பது அவர்கள் பயம்.

ஆண்-பெண் ரகஸ்யம்

★

இல்லற சுகம் எல்லாருக்கும் ஏன் கிட்டுவதில்லை? இதுபற்றிய சில கேள்விகளையும் நிபுணர்களின் ஆராய்ச்சியில் கண்ட பதில்களையும் இங்கே காணலாம். இந்தக் கேள்வி - பதில்களுக்கு ஆதாரம் 'லுக்' பத்திரிகையில் வெளியான ஒரு விவரமே.

1. தம்பதிகளில் ஆண் - பெண்களின் சுபாவம் மாறுபட்டிருந்தால்தான் இரண்டு பேரும் இன்பமாக வாழ்வார்கள்-இது சரியா, தவறு?

2. குடும்பத்தில் யார் தலைமை ஏற்று நடந்துகொண்டால் மண வாழ்க்கை அதிக இன்பமாக இருக்கும்?—(அ) கணவனா; (ஆ) மனைவியா; (இ) இரண்டு பேரும் சரி சமமாக இருப்பதா?

3. மனைவி கணவனை இப்படிச் சில விஷயங்களில் குறை கூறுகிறாள்: (அ) மனுஷர் பொய் பேசத் தயங்குகிறதில்லை; (ஆ) அன்பாக நடந்துகொள்வதில்லை; (இ) அவர் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அது உருப்படுகிறதில்லை; (ஈ) அவருக்குத் தயாதாட்சிண்ணியமே இல்லை; மகா சுயநலப் பேர்வழி.—இவற்றில், மனைவிக்கு எல்லாவற்றையும்விடப் பெருங்குறையாகத் தோன்றுவது எது?

4. கணவனுக்கும் இப்படிச் சில குறைகள் உண்டு: (அ) மனைவி அன்பாக நடந்துகொள்வதில்லை; (ஆ) எதற்கெடுத்தாலும் குறை சொல்கிறாள்; (இ) அவள் தொண தொணப்புச் சகிக்கவில்லை; (ஈ) என் சொந்தக் காரியத்திலெல்லாம் தலையிடுகிறாள்; (உ) அவளுக்குத் துளிக்கூடத் தயாதாட்சிண்ணியமே இல்லை; மகா சுயநலக்காரி.—இவற்றில், அவனுக்கு எல்லாவற்றையும் விடப் பெருங்குறையாகத் தோன்றுவது எது?

5. இன்பமாக வாழ்ந்திருந்த பெற்றோரின் மக்களுடைய மண வாழ்க்கைதான் இன்பமாக இருக்கும் - இது சரியா, தவறு?

6. கீழ்க்கண்டவற்றுள், எந்த விஷயத்தில் தம்பதிகள் ஒத்துப்போக அதிக நாள் பிடிக்கிறது? (அ) மதம்; (ஆ) நண்பர்கள்; (இ) சிற்றின்பம்; (ஈ) பரஸ்பர உறவினரோடு பழகுதல்; (உ) குடும்பத்தில் செலவு விஷயம்.

7. காலேஜில் படித்த பெண்களே பொதுவாக மனைவிமார் ஆவதற்குத் தகுதியற்றவர்கள் என்று தான் சொல்லவேண்டும் - இது சரியா, தவறு?

8. சாஸ்திர ரீதியாக மணம் செய்துகொண்டவர்கள் ரிஜிஸ்தர் மணம் செய்துகொண்டவர்களை விட ஒற்றுமையாய் வாழ்கிறார்கள்- இது சரியா, தவறு?

9. வெவ்வேறு மதத்தைச் சேர்ந்த தம்பதிகளின் பிற்கால வாழ்க்கை பொதுவாக, (அ) அப்படி அதிக மோசமாக இருப்ப

தில்லை. (ஆ) நன்றாகவே இருப்ப தில்லை—இவைகளில் எது சரி?

10. பாடகர்களின் மணவாழ்க்கையைவிட வக்கீல்களின் மண வாழ்க்கை எவ்வளவோ நன்றாக இருக்கிறது என்று சொல்ல வேண்டும் - இது சரியா, தவறா?

11. சாதாரணமாக மணமாகி வாழ்பவர்களின் இன்பத்தை ஒப்பிடும்போது, ஓடிப்போய் மணம் செய்துகொள்ளும் தம்பதிகளின் இன்ப வாழ்க்கை, (அ) அதே ரீதியில்தான் இருக்கிறது; (ஆ) இல்லை - இவற்றில் எது சரி?

12. தம்பதிகள் வாழ்வில் இன்பம் அநுபவிப்பது குடும்ப வருமான அளவைப் பொறுத்தே இருக்கிறது - இது சரியா, தவறா?

13. (அ) குடும்ப வரவுசெலவு விஷயத்தில் தம்பதிகள் அதிகமாக ஒத்துப்போவதைப் பொறுத்தே அவர்கள் இன்ப வாழ்வும் அமையும்; (ஆ) அப்படி ஒன்றும் இல்லை- இவற்றில் எது சரி?

14. புருஷனும் மனைவியும் சேர்ந்தே குடும்பச் செலவுப் பொறுப்பைக் கவனித்துக்கொள்ளவேண்டும். இது சரியா, தவறா?

15. மணம் ஆவதற்கு முன் ஏதாவது தொழில் செய்து வந்த பெண்கள் மற்றப் பெண்களைவிட, (அ) குடும்பத்துக்கு ஒத்த மனைவிமாராக இருப்பார்கள்; (ஆ) ஒத்திருக்க மாட்டார்கள். - இவற்றில் எது சரி?

16. பிறக்கும் ஒரு குழந்தை ஆணா, பெண்ணா என்று நிர்ணயமாவது அதன் (அ) தந்தையால்; (ஆ) தாயால்; (இ) இரண்டு பேராலுமே.

17. குழந்தை பிறப்பதற்குமுன் அது ஆணா, பெண்ணா என்று இப்போது நிச்சயமாகச் சொல்லிவிட முடிகிறது—இது சரியா, தவறா?

18. குழந்தை பெறக்கூடிய பருவத்தில் என்றைக்கு வேண்டுமானாலும் ஒரு ஸ்திரீ கர்ப்பம் தரிக்கலாம்—இது சரியா, தவறா?

19. சில பெண்கள் குழந்தை பெறாதிருக்கிறார்களே; எவ்வளவு தூரத்துக்குக் கணவன் காரணம்? (அ) 5%; (ஆ) 10%; (இ) 20%; (ஈ) 40%; (உ) 60%—இவற்றில் எது சரி?

20. பெண்களுக்கு மாதவிடாய் ஆகும் வயது கடந்துவிட்டால் காம இச்சை இராது - இது சரியா, தவறா?

21. பொதுவாக உடல் நிலை சரியாக இராதபோதுதான் பெண்கள் சிற்றின்பத்தில் நாட்டங் கொள்வதில்லை - இது சரியா தவறா?

நிபுணரின் பதில்கள்

1. தவறு. ஒரேமாதிரி குணமும் அறிவும், கருத்தும் கொண்ட தம்பதிகள்தான் பெரும்பாலும் ஒற்றுமையாய் வாழ்கிறார்கள் என்று ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது.

2. சரிசமமாக இருப்பதுதான். டாக்டர் பால் போபனோ என்பவர் 3000 தம்பதிகளைப்பற்றி ஆராய்ந்தார். இரண்டு பேருமே சரிசமமாகப் பொறுப்பேற்று நடந்து கொள்ளும்போதே மண வாழ்க்கை

பெரும்பாலும் இன்பமாக இருக்கிறது. மனைவி தலைமை ஏற்றால் அவ்வளவு இன்பமாக இராதென்றும் கணவன் ஏற்றால் சிறிது தேவலை என்றும் தெரிகிறது.

3. தயாதாட்சிண்ணியமின்றிச் சுயநலப் பேர்வழியாக இருப்பதே.

4. அவள் தொணதொணப்புச் சகிக்காதததுதான்.

5. பெரிதும் சரி.

6. சிற்றின்பத்தில்தான். டாக்டர் ஜூட்ஸன் டி. லாண்டிஸ் என்பவர் நடத்திய ஆராய்ச்சி மூலம் இப்படித் தெரிகிறது. மணமாகி நெடுநாளான தம்பதிகளில் பாதிப் பேர், ஆரம்பத்திலேயே இதில் ஒத்துப்போக முடிகிறது. மீதிப் பேருக்கு, எத்தனையோ மாதம், ஏன், வருஷங்கூடப் பிடிக்கிறது.

7. தவறு. நன்றாகப் படித்த பெண்களை மணந்துகொள்வதால் கணவனுக்கும் சரி, மனைவிக்கும் சரி, நன்மையே ஏற்படுகிறது. காலேஜில் படிக்கும்போது பழகினவர்கள் மணம் செய்துகொண்டால், பின்னும் விசேஷமே.

8. சரி. சாஸ்திர ரீதியாக மணந்தவர்களில் முக்கால்வாசிப் பேர் ஒற்றுமையாய் வாழ்ந்து வருகிறார்கள். ரிஜிஸ்தர் மணம் செய்துகொண்டவர்களில் 100-க்கு 65 பேர்தான் ஒற்றுமையாய் வாழ்கிறார்கள். இதற்குக் காரணம், சாஸ்திர ரீதியாக மணக்கும்போது ரகசியம் பாராட்டவோ, அவசரப்படவோ தேவையில்லை; பெற்றோர்களும் சம்மதிப்பார்கள்.

9. நன்றாகவே இருப்பதில்லை. இப்படி மணம் செய்துகொண்ட தம்பதிகளில் முக்கால்வாசிப்பேர் ஒத்து வாழ்வதில்லை.

10. சரி. கணவன் ஒரே இடத்தில் நிலையான உத்தியோகத்தில் இருந்து பிரபலஸ்தனாகவும் இருந்தால் மண வாழ்க்கை இன்பமாகக் கழியும். பள்ளிக்கூட ஆசிரியர், மந்திரி, வக்கீல், ஆபீஸ் உத்தியோகஸ்தர் இப்படி ஒரு வேலையில் இருந்தால் பரவாயில்லை. இதனால் பாடகர்களையோ, நடிகர்களையோ, சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் ஸேல்ஸ்மான்களையோ மணம் செய்துகொண்டால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. கணவன் மனைவிக்குள் மனம் ஒத்துப்போகக் கொஞ்சநாள் பிடிக்கும்; அவ்வளவுதான்.

11. இல்லை. ஓடிப்போய் மணம் செய்துகொள்பவர்களில் பாதிப்பேர்தான் இன்பமாக வாழ்கிறார்கள்.

12. தவறு. அதிக வருமானத்தைவிட நிலையான வரும்படியும் நிர்வகிக்கும் திறமையும் இருந்தால் போதும்; தம்பதிகள் இன்பமாக வாழலாம்.

13. முதலில் சொன்னது சரி. நன்றாக ஒத்துப்போகும் தம்பதிகளில் 100-க்கு 61 பேர் இன்பமாகவே வாழ்கிறார்கள். ஏதோ சில பேருக்குத்தான் அதிருப்தி ஏற்படுகிறது. கணவனும் மனைவியும் ஒத்துப் போகாத குடும்பத்தில் அப்படிப் பிரமாத இன்பம் இராது; இன்னும் கேட்டால் துன்பமே ஏற்படுகிறது.

14. தவறு. கணவன் மனைவி இரண்டு பேரில் யாராவது ஒருவர் மட்டுமே பரஸ்பர சம்மதத்துடன் குடும்பப் பொறுப்பேற்று நடத்த வேண்டும். ஆனால் அதிகமாக மிஞ்சும் பணத்தைச் செலவு செய்யும்போது இரண்டுபேருமே சேர்ந்து யோசித்துத்தான் அப்படிச் செய்யவேண்டும்.

15. ஒத்திருப்பார்கள். ஏதாவது ஒரே தொழிலில் நிலையாக இருந்து தேர்ச்சி பெற்றிருந்தாலும் சரி, ஆபீஸ் வேலையில் நிலைத்திருந்தாலும் சரி, விசேஷம். அடிக்கடி ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாறியவர்களாக இருந்தால் அவ்வளவு விசேஷம் என்று சொல்வதற்கில்லை.

16. தந்தையால். தாயின் உடலில் உள்ள 'ஓவம்' என்ற அண்டத்தில் 'எக்ஸ்' என்ற கணுக்கோல் (க்ரோமஸோம்) மட்டுமே இருக்கிறது. தந்தையின் உடலிலிருந்து வெளியாகும் 'ஸ்பேர்ம்' என்ற விந்தணுவில் 'எக்ஸ்' 'ஒய்' என்ற இரண்டு வகைக் கணுக்கோல்களில் ஏதுவாயினும் இருக்கலாம். தந்தையிடமிருந்து 'எக்ஸ்' உள்ள விந்தணு, தாயின் அண்டத்தில் வந்து சேர்ந்தால் ஆண் குழந்தையும் 'ஒய்' உள்ள விந்தணு வந்து சேர்ந்தால் பெண்ணும் உண்டாகும்.

17. தவறு. சமீபத்தில் கீழ்க் கண்ட இரண்டு முறைகளை அநுஷ்டித்துப் பார்த்தார்கள்: (அ) கர்ப்பத்தில் இருப்பது பெண் குழந்தையாக இருந்தால் ஆண் குழந்தைக்கு இருப்பதைவிட இன்னும் வேகமாகத் தாயின் இருதயம் அடித்துக்கொள்ளும். இருந்தாலும் பெரிய அளவு குழந்தையாக இருக்கும்பட்சத்தில் நிதானமாக அடித்துக்கொள்வதால் எதையும் நிலையாகச் சொல்வதற்கில்லை. (ஆ) தாயின் ரத்தத்தில் தென்படும் ஹார்மோன் என்ற கசிவுப் பொருளை ஆராய்ந்தால், கடைசி மாதங்களில், ஓரளவு சரியாகச் சொல்லிவிடலாம். எக்ஸ்-ரே படத்தின் மூலம் இதைக் கண்டுபிடிக்கலாம். இதவும் ஆறு ஏழு மாதம் ஆன பிறகுதான் முடியும். தவிர, குழந்தை ஆணாக இருந்தால்தான் இந்தப் பரீட்சை பலிக்கிறது.

18. தவறு. மாதவிடாய் ஆன முதல் நாளிலிருந்து 11-ஆம் நாள் வரையில் கருத் தரிப்பதற்கு ஏற்ற வளம் பெற்றிருப்பதாகச் சொல்வதற்கில்லை. 11 முதல் 14-ஆம் நாளுக்குள்ளேதான் கருத் தரிக்க சேருகிறது. அப்போது கருப்பையிலிருந்து 'எக்-ஸெல்' (அண்டம்) விடுடுவதே இதற்குக் காரணம்.

19. சுமார் 40%. ஆண்கள் இப்படி இருப்பதற்குப் பல காரணம் உண்டு. கோனேரியா, சுரப்பியில் கோளாறு, நீடித்த நோய், உணவு போதாதிருத்தல், மனசில் கலக்கம் இப்படி ஏதாவது ஒன்று இருக்கும். இவர்களில் பாதிப்பேரைக் குணப்படுத்தி விட முடியும்.

20. தவறு. குழந்தை பெறுவதற்குரிய சக்தி போய்விடலாம். வயது ஆக ஆகக் காம இச்சையும் படிப்படியாகக் குறைந்துதான் வரும். ஆனால் மாதவிடாய் நின்று 10 அல்லது 15 வருஷகாலம் வரையில்கூடக் காம இச்சை என்னவோ பலமாக இருக்கக்கூடும்.

21. தவறு. உடல் சோர்வு, சுரப்பிகளில் கோளாறு இவை தவிர இன்னும் பல காரணங்களும் உண்டு. ஆண் - பெண் உறவு என்றாலே ஏதோ மட்டம் என்ற கருத்து, சிறு வயதில் நடந்த ஏதாவது விபரீதம் காரணமாக வெறுப்பு, வலிக்குமே என்ற திகில், இப்படி ஏதேதோ இருக்கும். அதோடு கணவனுக்கு நாசூக்காக நடந்துகொள்ளத் தெரியாதிருந்தாலும் பொறுமை இல்லாதிருந்தாலும் சரி, மனைவிக்கு இப்படி அருவருப்பு மூளும்.

மல் வித்தை

எம். எஸ். ஸ்ரீநிவாஸன்

ஆயுதம் எதுவும் இல்லாமல் தேகபலம் ஒன்றையே சார்ந்து போரிடும் மல் வித்தை, பூர்வ காலத்தில் பிரசித்தமாயிருந்தது. அதில் எத்தனையோ முறைகள். அவைபற்றிய இந்தச் சுருக்கமான விவரத்தை, 'சுதேசமித்திரன்', 'தமிழ் நாடு' இரண்டிலும் தாம் எழுதிய விஷயங்களிலிருந்து கட்டுரை ஆசிரியரே 'மஞ்சரி'க்கென்று தொகுத்துத் தந்திருக்கிறார்.

மல் வித்தையை உடல் உறுதி சேரும் விளையாட்டு என்று உலகில் எல்லா நாடுகளிலும் கருதி ஆதரித்து வருகிறார்கள். இன்று மட்டுமல்ல, சரித்திர காலத்துக்கு முன்பே நம் நாட்டிலும், எகிப்திலும், ரோமாபுரியிலும், கிரேக்க நாட்டிலும் மல் வித்தை பழக்கத்தில் இருந்தது தெரிகிறது. சீனாவிலும் ஜப்பானிலும், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் அந்த அந்த நாட்டுக்கு ஏற்றபடி ஏதோ ஒரு வகை மல்போர் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

அமெரிக்க முறை: இப்போது எத்தனையோ பிற விளையாட்டுகளைப் போலவே மல்வித்தையும் ஒரு சர்வதேச விளையாட்டு ஆகிவிட்டது. ஆகவே, அதற்குச் சர்வதேசவிதிகள் ஏற்பட்டன. இவையும் பலமுறை மாறி இப்போது 'அமெரிக்கன் ஃப்ரீ ஸ்டைல்' என்ற முறை வந்திருக்கிறது. இந்த முறையை எல்லா நாட்டு மகா மல்லர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்திய வீர விளையாட்டு: அமெரிக்க முறை என்று பேர் இருந்தாலும் மல்வித்தை நம் நாட்டுக்குப் புதிதல்ல. நம்முடைய பழங்கதை, காவியம் எல்லாவற்றிலும் மல்போர் பற்றிய வர்ணனைகள் நிறைந்திருக்கின்றன. அநுமன், பீமன், துரியோதனன் முதலியோர் புராண மல்லர்கள். நம் மன்னர்கள் எல்லாரும் இளம்வயதில் யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வில்வித்தை, சிலம்பு முதலியவை கற்றுக்கொண்டதுபோல மல்வித்தையும் பழகினார்கள். புகழ்பெற்ற பல்லவ மன்னர் நரசிம்ம சக்கரவர்த்தி ஒரு பெரும் மல்லர். அவருக்கு மாமல்லர் என்று ஒரு பட்டப் பெயர் உண்டு.

தேசீய விளையாட்டு: மன்னர் மட்டுமன்றி நம் நாட்டுப் போர் வீரர் எல்லாருமே முன்காலத்தில் மல்லர்களாயிருந்தார்கள். முகலாய ஆட்சி நடந்த காலம் வரைக்கும் நம் நாட்டினர் நன்றாய்ப் பாதுகாத்துப் பேணி வளர்த்து வந்த இந்த வீர விளையாட்டு, ஆங்கில ஆட்சியில் மற்ற எத்தனையோ

காப்பிரைட்: (1) சுதேசமித்திரன் (தமிழ்: 22-11-'52), சென்னை.
(2) தமிழ் நாடு (தமிழ்: 23-11-'52), மதுரை.

இந்தியக் கலைகளைப்போலவே மறையத் தொடங்கியது. ஆனாலும் அங்கங்கே பெயரைக் காத்து வந்த ஹார்பான் ஸிங், காமா போன்ற வீரர்கள் இருப்பதால் இந்த விளையாட்டு ஓரளவு இன்னும் நிலைத்திருக்கிறது. இப்போது இந்த விளையாட்டுப் பயிற்சியைப் பரவச் செய்ய நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம் நாடு இந்த விளையாட்டில் பழைய இடத்தை மீண்டும் சீக்கிரத்தில் பெறும் என்றும் ஒலிம்பிக் பந்தயம் வரை நம் வீரர்கள் செல்வார்கள் என்றும் எதிர்பார்க்கலாம்.

மேல்நாட்டு மல்-முறை: தற்காப்புக்கும், நிராயுதபாணியாய் இருக்கையில் எதிரியைத் தாக்கவும், உடல்பயிற்சிக்கும் நம் நாட்டில் இந்த விளையாட்டுப் பழக்கத்தில் இருந்தது. ஆனால் பழைய ரோமாபுரியிலோ கோழிச் சண்டை, மாட்டுச் சண்டைபோல இரண்டு மனிதர்களைச் சண்டை போடச் செய்து வேடிக்கை பார்த்தார்கள். அங்கே சண்டையில் விதி ஒன்றுமில்லை; கொலைகூடச் செய்யலாம்! ஆனால் பிற்காலத்தில் கிரேகோ-ரோமன் முறை என்று ஒருவகை மல்போர் பல ஐரோப்பிய நாடுகளில் பழக்கத்தில் இருந்தது. அதன்படி இடைக்கு மேல்தான் தொட்டுப் போர் புரியலாம்; காலால் இடறக் கூடாது. எதிராளியைக் கீழே தள்ளிவிட்டால் போதும்; அதுவே வெற்றி.

கிடைத்த பிடியைப் பிடி என்ற முறையைத்தான் இப்போது அமெரிக்க ஃப்ரீ ஸ்டைலில் பின்பற்றுகிறார்கள். இதன்படி மல்லன் தனக்கு எது வாட்டமோ அந்தப் பிடியால் எதிரியைப் பிடித்து அவனைக் கீழே வீழ்த்த முயலுவான். ஆனால் எதிரியை மூச்சுத் திணறச் செய்யக்கூடாது; அவனுடைய கண், காது, மூக்கு, வாய் முதலிய உறுப்புகளுக்குத் தீங்கு செய்யக்கூடாது. தலைமயிரைப் பிடித்து இழுப்பதோ, முஷ்டியால் குத்துவதோ தவறு. ஆனால் கை கால்களை முறுக்கிப் பிசைந்தோ, உடலை வாட்டி வளைத்தோ எதிரியைத் தவிக்க வைத்து, அவனைச் 'சரணாகதி' அடையச் செய்யலாம். இதற்கு 'ஸப்மிஷன் வீழ்ச்சி' என்று பெயர்.

இங்கிலாந்து முறை: இங்கிலாந்தில் முன்பு பழக்கத்திலிருந்த சில முறைகள் கடினமானவை. 'கார்னிஷ்' முறை என்பது ஒன்று. அதன்படி நின்றுகொண்டே தான் சண்டையிட வேண்டும். எதிரியைத் தூக்கிப் போட்டோ, காலால் இடறியோ வீழ்த்த வேண்டும். எதிரியின் உடலில் மூன்று முக்கிய முனைகள் (இரண்டு தோளும் ஓர் ஆசனமும் அல்லது இரண்டு ஆசனமும் ஒரு தோளும் போன்றவை) தரையில் பட்டுவிட்டால், அது தோல்வியின் சின்னம்.

கம்பாலண்ட் முறை: இதிலும் நின்றபடிதான் போர் புரிய வேண்டும். ஆனால் எதிரியின் காலைத் தவிர வேறு எந்த உறுப்புத் தரையில் பட்டாலும் அவன் தோற்றான். இந்தச் சண்டை சில நிமிஷத்தில் (அல்லது விநாடிக்குள்) முடிந்துவிடும்.

சர்வ தந்திர மல்: இதைச் சில மல்லர்கள் (தொழிலாகக் கொண்டவர்கள்) செய்து காட்டுவார்கள். மிக ரோஷமாய், பார்க்கப் பயங்கரமாய் இந்தச் சண்டை நடக்கும். ஈவு இரக்கமில்லாமல், எதிரியைச் சித்திரவதை புரிவது போல்

தோன்றும் இந்த மல் போர், உண்மையில் பதிக்கு மேல் தந்திர வேலைகள் நிறைந்தது. இது மேல் நாடுகளில் மட்டுமே நடக்கிறது.

ஜுஜுட்ஸு: சீன-ஜப்பானில் பிறந்து வளர்ந்த ஒரு நரம்புப் பிடிப்பு முறை. ஒரு சோனி கூட மிகப்பலிஷ்டனை இந்த முறையில் எளிதிலே வீழ்த்திவிட முடியும். இதில் வல்லவர்கள் உடல் கூறு பற்றி நன்கு தெரிந்தவர்கள்; மணிக்கட்டு, கழுத்து, முழங்கை, முதுகு போன்ற இடங்களில் உள்ள மூல நரம்புகளைப் பக்குவமாகப் பிடித்து அழுத்தித் திருகி, உடலை ஸ்தம்பிக்கச் செய்து, கணத்தில் வெற்றி பெறுவார்கள். இதைக் கற்பது கடினம். ஆனால் ஜப்பானியர் இதில் வல்லவர்கள். அவர்கள் அமெரிக்காவில் ஜுஜுட்ஸு முறையில் மல்போர் செய்து வேடிக்கை காட்டுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். பல நாடுகளில் போலீஸாருக்கும் ரகஸியப் போலீஸாருக்கும் போர்வீரர்களுக்கும் இந்த முறையில் சில பிடிகளைக் கற்றுத் தருகிறார்கள். அதைத்தான் 'ஜுடோ' என்று செல்லமாகக் கூறுகிறார்கள்.

நவீன விளையாட்டு முறை: சர்வதேச மல்லர்கள் இப்போது 'அமெரிக்க ஃப்ரீ ஸ்டைல்' என்ற மல்வித்தை முறையைத்தான் பழகுகிறார்கள். இதன்படி வீரர்கள் ஒருவர் உடல் நலத்தை மற்றவர் மதித்துப் போர் புரிய வேண்டும். அதாவது, எதிரியை மூச்சுத் திணறச் செய்யக் கூடாது; கண், காது, மூக்கு, வாய், தலை மயிர் இவற்றைத் தீண்டக் கூடாது; முஷ்டியால் குத்தக் கூடாது. இந்த விளையாட்டின் நோக்கமெல்லாம் இதுதான்: ஒரு வீரன் மற்றொரு வீரனைத் தன் பலத்தால் வீழ்த்த வேண்டும். இந்த வீழ்ச்சி பலவகைப்படும்: (1) பிடித்து உலுக்கி, எதிரியைக் கீழே தள்ளிய பின் எதிரி பத்து விநாடிக்குள் எழாவிட்டால் அது எதிரிக்கு ஒரு 'வீழ்ச்சி'. (2) எதிரியைக் கீழே தள்ளி, அவர் முதுகும் இரண்டு தோளும் நன்றாகக் கீழே படும்படி மூன்று விநாடிகள் அழுத்திப் பிடித்திருந்தால் அது ஒரு 'வீழ்ச்சி.' (3) ஒரு வீரனின் தாக்குதலை எதிர்க்க முடியாமல் எதிரி திணறித் தவித்துத் 'தோற்றேன்' என்று சொல்லி ஒப்புக்கொண்டால் அது ஒரு 'வீழ்ச்சி.' (4) திரும்பத் திரும்பச் சொல்லியும் கேளாமல் ஆட்ட விதிகளை மல்வீரன் எவனாவது மூன்று முறை மீறினால் அப்போது அவனைத் தோற்றவன் என்று ரெபரி தீர்ப்புச் சொல்லி விடுவார்.

ஆட்டத்தின் போக்கு: மல்யுத்த மேடை 4 அடி உயரத்தில் அமைந்திருக்கும்; 24 அடி சதுரம் இருக்கும். மேடைக்கு மேல் சுமார் நாலு அங்குல உயரத்துக்கு மரத்தூளை அடர்த்தியாகக் கொட்டி அதை நல்ல தடியான கோணியால் இழுத்து மூடிக் கெட்டியான மெத்தைபோல் செய்திருப்பார்கள். மேடையைச் சுற்றி மூன்றடி உயரத்தில் தடிப்பான மூன்று கயிறு போட்டுச் சுற்றியிருப்பார்கள்.

மல்யுத்த மேடையில் எதிர் எதிரான இரண்டு மூலைகளில் மல்லர் இருவரும் நிற்பார்கள். சண்டையைக் கவனித்து நீதி வழங்கும் 'ரெபரி', அவர்களுடைய உடலைப் பரிசோதிப்பார். கை நகம், கால் செருப்பு, காது முதலியவை

'சுத்தமாய்' இருக்கின்றனவா, ஆயுதம் எதுவும் அவர்கள் ஒளித்து வைத்திருக்கவில்லையா என்று பார்ப்பது அவர் வேலை. போரிடு முன் வீரர் இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் அஞ்சலி செய்துவிட்டுப் பிறகே போர் தொடங்குவார்கள். சாதாரண ஆட்டம் என்பது ஆறு ரவுண்டு கொண்டது. ஒவ்வொரு ரவுண்டும், எழு நிமிஷம் நீடிக்கும். ரவுண்டுகளுக்கு இடையே இடைநேரம் ஒரு நிமிஷம் ஓய்ந்திருப்பார்கள். ஆறு ரவுண்டில் யார் அதிகமாக மற்றவரை 'வீழ்ச்சி' பெறச் செய்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர். எவரும் வீழ்ச்சி அடையாவிட்டாலும் இரண்டு பேரும் சம வீழ்ச்சி பெற்றுவிட்டாலும் 'சமம்' ஆவார்கள். இதைத் 'தீர்த்துக் கட்ட' இன்னொரு நாள் போர் நடக்கும்.

சர்வதேச மல்லர்கள்: இப்போது தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பயில்வான்களில் புகழ் பெற்றவர் கிங்காங் என்ற ஹங்கேரியர். ஆனால் மக்களின் ஆதரவும் அபிமானமும் அதிகமாகப் பெற்றவர் தாரா சிங் என்ற இளம் இந்திய மல்லர். ஆஸ்திரேலிய இளம் வீரர் டைகர் ரே ஹோல்டன்; பாலஸ்தீன வீரர் கோல்ட்ஸ்டீன்; துருக்கிய வீரர் ஆலி ரஜா பே; ஆஸ்திரிய வீரர் பாரன் வான் ஹக்ஸ்கி; இத்தாலியப் பெரு வீரர் ஜார்ஜ் ஸெபிஸ்கோ; சீன வீரர் (அமெரிக்கர்) வான் பெக்லீ; ருஷிய வீரர் ஷெர்ஜீ ஓர்லாப்-இப்படி வேறு பல வீரர்களும் ஓரளவு கீர்த்தி பெற்றவர்கள் தான்.

எதிர்கால மல்யுத்தம்: எவ்வளவோ காலமாகப் பலவகையாய் வளர்ச்சி பெற்று வந்திருக்கும் இந்த வீர விளையாட்டை இப்போது ஒலிம்பிக் பந்தயங்களிலும் சேர்த்திருக்கிறார்கள். தற்காப்புக்காக மனிதன் கண்டுபிடித்த இந்தப் போர்முறை, இன்று உடல் நலம் போற்றும் வீர விளையாட்டாகவும் உதவுகிறது. சர்வதேச மல்லர்கள் இப்போது இந்தியாவுக்குத் திக்விஜயம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் விளையாடும் முறையைப் பார்க்கும் நம் இளைஞர்களில் சிலராவது ஆர்வத்துடன் அதைத் தாங்களும் கற்றுத் தேர்ந்தால், அது அந்த இளைஞர்களுக்கு மட்டும் அல்ல, தேசத்துக்குமே மிகவும் நன்மை தரும்.

கடலுக்கு வெந்நீர்

கலைப் பொருள் வியாபாரத்தில் உலகத்தின் சக்கரவர்த்தியாக விளங்குபவர் ஜோஸஃப் டுவீன். அவர் ஒரு சமயம் தம் குடும்பத்தோடு கடற்கரைக்குப் போனார். கடல் நீர் மிகவும் குளிர்ச்சியாக இருந்ததால், அவருடைய சிறு மகள் தண்ணீரில் இறங்க மறுத்தாள். வியாபாரி உடனே கரையில் ஓர் அடுப்பை மூட்டிக் கெட்டிலில் கொஞ்சம் தண்ணீர் கொதிக்க வைத்தார். அதை வெகு ஜாக்கிரதையாய்க் கடலில் ஊற்றினார். சிறுமிக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டது. தட்சணமே தயக்கமின்றி நீரில் குதித்துவிட்டாள்.

—'புக் - அவ் - தி - மன்த் - க்ளப் நியூஸ்'

இனித் திக்க வேண்டாம்!

அந்தோனி எலஞ்சிமித்தம்

சில மாதங்களுக்கு முன் 'மஞ்சரி'யில் வெளியான 'திக்குவாய் நீங்க வழி' என்ற கட்டுரையில் ஆங்கிலேயர் ஒருவர் அதை எப்படிப் போக்குகிறார் என்ற விவரம் வெளியாயிற்று. இப்போது பம்பாயில் ஒரு பிரபல இந்திய வைத்தியர் பத்தே வாரத்துக்குள் எப்பேர்ப்பட்ட திக்குவாய்க்காரரையும் சகஜமாகப் பேசப் பழக்கும் அற்புத விவரத்தை இங்கே காணலாம்.

பம்பாயில் கோலாபா பகுதியிலே ஆர்த்தர் பந்தர் ரோடிலும், காட்கோபர் என்ற இடத்தில் காமா சந்திலும் திக்குவாய்ச் சிகிச்சை நிலையம் நடத்தி வருகிறார் எம். எஸ். ராமி என்ற டாக்டர். "பத்து அல்லது இருபது வருஷ காலமாகத் திக்கி வந்தவர்கள்கூட அங்கே நாலு அல்லது ஆறே வாரத்துக்குள் ரண சிகிச்சை, மருந்து, மாயம் எதுவும் இல்லாமல் தேறி விடுகிறார்கள்" என்று கேட்டதும் முதலில் எனக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை. ஆனால், அங்கே நேரில் போய்க் கவனித்ததில் டாக்டர் ராமியின் அருமை பெருமை தெரிந்தது. குரலைச் சரியானபடி பழக்கித் தெளிவாகப் பேசும்படி செய்யும் இவருடைய முறையே அலாதியானது; மிகவும் சிறந்தது.

மோசமாகத் திக்கி வந்த சில பேருக்குச் சிகிச்சை நடந்தபோது நேரில் கவனித்தேன். ஆக்ராவிலிருந்து கமலேந்திர சிங் என்ற காலேஜ் மாணவன் மே 14-ஆம் தேதி அங்கே வந்தான். அவன் திக்குவதைப் பார்க்க ஒரே கண்ணராவியாக இருந்தது. சில வார்த்தைகளைத் திக்கித் திக்கிச் சொல்லி முடிக்கக் கிட்டத்தட்ட ½ நிமிஷங்கூட ஆயிற்று. மூன்று வாரங் கழித்து அவனை மறுபடியும் பார்த்தேன். அப்போது பாதி சிகிச்சை நடந்துகொண்டிருந்தது. ஆனாலும் அதற்குள் திக்கு வாய் நீங்கி விட்டது. சற்று நின்று

டாக்டர் ராமி ஒரு திக்குவாய்ச் சிறுவனின் வாய்க்குள் கருவியைப் பொருத்துகிறார்.

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்; டிஸம்பர்'52), கல்கத்தா.

திதானமாகப் பேசினன்; அவ்வளவுதான். ஆறுவாரங் கழித்துச் சிகிச்சை முடிந்ததும் அவன் முன்பு திக்குவாய்ப் பேர்வழியாக இருந்தான் என்று யாராலும் கண்டுகொள்ளவே முடியவில்லை.

காட்கோபர் நிலையத்தில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அநேகம் பேர் வந்து சிகிச்சை பெற்றுப் போகிருர்கள். இது இப்படிச் சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம், டாக்டர் ராமி தம்மிடம் சிகிச்சை பெற வருபவர்களோடு சகஜமாகப் பழகுவது தான். இப்போது பம்பாயிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்கும் நிபுணர்களெல்லாருங் கூட, தங்களிடம் திக்குவாய்க்காரர்கள் யாராவது வந்தால், உடனே டாக்டர் ராமியிடம் போய்ச் சிகிச்சை பெறும்படி சொல்லுகிருர்கள் என்ருல் பாருங்களேன்!

இதில் ஒரு விசேஷம் என்னவென்ருல், டாக்டர் ராமியே சிறு வயதில் மிகவும் மோசமாகத் திக்குவாராம். எட்டு வயதுக்கு மேல், அதிகமாகத் திக்க ஆரம்பித்துவிட்டாராம். பள்ளிக்கூடத்தில் மற்றப் பிள்ளைகள் இதைப் பார்த்துக் கேலி செய்யச் செய்யப் பின்னும் அதிகமாகத் திக்கத் தொடங்கிவிட்டார். 23 - ஆம் வயதில் பல் வைத்தியம் சம்பந்தமாகப் படிக்க ஜப்பானுக்குப் புறப்பட்டுப் போனுர். அப்போது திக்கு வாயிஞல் அவர் பட்ட சிரமம் சொல்லி முடியாது.

இந்தியாவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும், ஜப்பானிலும் பல சிகிச்சை முறைகளை அநுஷ்டித்துப் பார்த்தார். ஆற்றில் கழுத்தளவு நீரில் அமிழ்ந்து, வாயில் கூழாங் கற்களைப் போட்டுக்கொண்டு, கூவிக்கூடப் பார்த்தாராம். இப்படிச் செய்தால் திக்குவாய் நீங்கிவிடும் என்று பாமர மக்கள் சொல்வார்கள். ஒரு பலனும் ஏற்படவில்லை. கடைசியில் குரல்வளை வழியே மூச்சு வரும்போது அதை ஒழுங்காகக் கட்டுப்படுத்திப் பேசிப் பார்ப்பதென்று தீர்மானித்தார். இதற்காக வாய்க்குள் பொருத்தும்படி துவாரம் வைத்த ஒரு கருவியை அமைத்தார்; மறுபடியும் தாராளமாக உயிர் எழுத்திலிருந்து உச்சரிக்கப் பழகினுர்.

விரைவில் அவருக்குத் திக்குவாய் நீங்கிவிட்டது. இப்படித் தம் அநுபவத்தைக் கொண்டே அவர் மற்றவர்களையும் குணப்படுத்தி வருகிருர். இதுதான் அவர் சிகிச்சை முறையிலுள்ள விசேஷம். இதுவரை விஞ்ஞான நூல்களில் வெளியாகியிருக்கும் சிகிச்சை முறைக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. இருந்தாலும் முழுக்க முழுக்க இதனுல் பலன் உண்டு என்பதை நேரில் காண முடிந்தது.

சிகிச்சை பெற்றவர்களில் 100-க்கு 90 பேருக்குமேல் (அதுவும் குழந்தைகள்) திகிலினுல் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாகவோ, பரம்பரையாக உள்ள நரம்புக் கோளாற்றினுலோ, திக்குவாய்க்காரர் யாரையாவது ஏளனம் செய்து பழகினதாலோ, யோசித்து அதற்கேற்றபடி பேசத் தெரியாததாலோ இப்படித் திக்கத் தொடங்கிவிடுகிருர்கள். இது ராமியின் சிகிச்சைச் சாலை தஸ்தாவேஜிகளிலிருந்து தெரிகிறது. ஆகவே, யாருக்குமே விளங்காத ஏதோ காரணங்களாலும், மூளைக் கோளாற்றினுலும், குரல்

வளையில் ஏதோ குறை இருப்ப தாலும் திக்க நேருகிறது என்று சில நூலாசிரியர்கள் சொல்லி யிருப்பதெல்லாம் தவறு என்று தெரிகிறது.

குரலும் மூச்சும் ஒத்து இயங்கச் சரியாக உச்சரித்துப் பழகாததால் தான் 100-க்கு 95 பேர் இப்படித் திக்குகிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. தெரிந்தோ தெரியாமலோ எப்போதோ நரம் பில் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். கூச்சம், தான் எப்படி நடந்து கொள்வதாகப் பிறர் எண்ணுகிறார் களோ என்ற ஓர் அபிப்பிராயம்- இந்த மாதிரி ஏதாவது ஒன்று காரணமாக இருக்கும். இருந்தா லும், எவ்வளவுக்கு ஒரு யோசனை தோன்றுகிறதோ, அவ்வளவுக்கு எளிதில் உச்சரிக்க வராதிருப்பதே முக்கியமான காரணம். அதனால் தான் அடியிலிருந்து தொடங்கி, முதலில் எழுத்தையும் பிறகு சொல் லையும் கடைசியில் வாக்கியத்தை யும் குறித்த நேரத்துக்குள் உச்சரிக் கக் கற்றுக்கொடுக்க வேண்டியிருக் கிறது.

திடீரென்று ஒன்றைக் கண்டோ கேட்டோ பயந்தும், அதிசயம் ஒன் றைப் பார்த்தும் இப்படித் திக்க நேரிடலாம். ஒரு பையன் ஏதா வது நாடக மேடையிலோ சபை யிலோ பேச வாய் வராமல் விழிக் கும்போது அளவுக்கு மீறி எல் லாரும் கேலிசெய்தால் அவன் சற்று நேரம் வரை அந்த அதிர்ச்சி காரணமாகத் திக்கத்தான் திக்குவான். பருவ வயது நெருங் கிய ஒரு பெண் தன் அங்கங்களில் மாறுதல் ஏற்படுவதாலும் இப்படி அடிக்கடி திக்கித் தடங்கிப் பேச லாம். எல்லாவற்றிற்கும் அச்சம், தன்னை யாராவது கவனிக்கிறார் களோ என்ற எண்ணம் இவையும் காரணமாக இருந்தாலும், ஒரு யோசனை தோன்றும்போது அதோடு ஒத்தபடி எளிதில் பேச வராததுதான் முக்கியமான கார ணம்.

'சிகிச்சை ஆரம்பித்த முதல் வாரத்தில் இதே சிகிச்சைக்கு உட்பட்ட பிற ஆசாமிகளோடு மட்டுமே பேசவேண்டும்; மற்றவர்களோடு பேசவே கூடாது' என்று கண்டிப்பாகச் சொல்லிவிடு கிறார் டாக்டர் ராமி. இந்த முதல் வாரத்தில் தாம் அவர்களோடேயே 6 மணி நேரம் இருந்து இதற் கென்று தயாரித்த அட்டவணை, வாசகங்கள் இவைகளை வைத்துக் கொண்டு கிரமமாக உச்சரிக்கப் பழக்குகிறார். நிதானமாகவும் பொ றுமையோடும், எடுத்துக்கொண்ட முயற்சியை விடாமல் அவரும் மற்ற மாணவர்களும் ஒவ்வோர் எழுத்தா கச் சரியானபடி ஒலிக்கும்படி உச் சரிக்கிறார்கள். அப்போது வாயில் பொருத்தியிருக்கும் கருவிவழியாக மூச்சும் ஓரளவுக்குக் கட்டுப் பட்டு வருவதால், யோசனை செய் வதும் பிறகு உச்சரிப்பதும் ஒத்துப் போகின்றன.

மூச்சைச் சரியானபடி கட்டுப் படுத்தி இழுப்பதும் விடுவதுந்தான் மிகவும் முக்கியம். சாதாரணமாகப் பேசும்போது சில தசைகள் அசைவதோடு, குரல்வளை, சுவாசக் குழாய், சில நரம்புகள், அண்ணம், நாக்கு, உதடு, தொண்டை இவை களும் ஒத்து வேலை செய்தாக வேண்டும். திகில், பரபரப்பு இப் படி ஏதாவது ஒரு காரணத்தால் தசைகள் சரியானபடி சுருங்கி விரியாமல் போய்விடலாம். சகஜ மாக மூச்சு விடுவதில் இதனால்

தடை ஏற்பட்டுத் திக்கித் தயங்க வேண்டியிருக்கிறது.

உதடு, தாடை எலும்பு, அண்ணம், நாக்கு எல்லாம் சரி வர அசைந்து கொடுத்து, சரியான ஒலியை வெளியிட்டால்தான், சொல்லும் கருத்தும் ஒத்திருக்கும். திக்குவாய்க்காரர்களுக்கு இது சாத்தியமில்லை. ஆகவே, இன்ன இன்ன வார்த்தை பேசும்போது இவ்வளவு தூரம் மூச்சுப் பிடித்து விட வேண்டும் என்ற விஷயத்தில் பயிற்சி பெறுவது அவசியமாகும். இதற்கு வைத்தியனைவிட வாத்தியார்தான் ஏற்றவர். அவர்தான் பொறுமையாக இருந்து அநுபவப் பட்டவர்; மணிக் கணக்கில் மாணவருடன் உட்கார்ந்து, எழுத்து, சொல், வாக்கியம் இவைகளை அவர்கள் உச்சரிக்கும்போது எப்படி மூச்சைக் கட்டுப்படுத்துவது என்று பழக்க அவரால்தான் முடியும்.

மூச்சைக் கட்டுப்படுத்தக் கருவியை உபயோகிப்பதோடு எச்சனவேயுள்ள திகில், தான் தாழ்ந்தவன் என்ற மனோபாவம், இவைகளையும் போக்கியாக வேண்டும். இப்படி மனத்தத்துவ சம்பந்தமான கோளாற்றை நீக்குவதென்றால், இந்தக் காலத்து நிபுணர்கள் செய்கிறார்களே, அந்த மாதிரி வீண் செலவும் நேரமும் விரயமாகும் சிகிச்சை முறை என்று எண்ண வேண்டாம். இன்ன இன்னார் மனசில் இன்ன குறை இருக்கிறது என்று கண்டு பிடித்து அதற்குத் தகுந்தபடி அவர்களைப் பழக்கும் திறமை வேண்டும்.

இதோடு நமக்குத் தெரியாத சில காரணங்களும் இருக்கலாம். அநுபவ மூலம் சாமர்த்தியமாகக் கேள்வி கேட்டும் ஆளைக் கவனித்தும் வந்தால் விஷயத்தை அறிந்து கொண்டு விடலாம்.

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது மூச்சைக் கட்டுப்படுத்தி ஒழுங்காக இழுத்து விடுவதுதான். இப்படி இயற்கையாகக் குரல் முதலியவை இயங்கும்போது தான், யோசிப்பதும் பிறகு எழுத்து, சொல் இவைகளை உச்சரிப்பதும் ஒத்துப் போகும். ஆகவே, டாக்டர் ராமி தம்மிடம் சிகிச்சை பெற வந்ததும் திக்குவாய்க்காரர்களின் வாய்க்குள் அளவெடுத்து அதற்கேற்றபடி ஒரு கருவியை அமைத்துப் பொருத்திக்கொள்ளச் செய்கிறார். ஆளுக்குத் தக்கபடி ஒரு வாரம் முதல் பத்து வாரம் வரைக்கும் சிகிச்சை நீடிக்கும். அது பூர்த்தியாகும் வரைக்கும் இந்தக் கருவியை பொருத்திக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தியாவிலேயே இந்த மாதிரி சிகிச்சைக்கு இந்த ஒரே ஒரு நிலையந்தான் இருக்கிறது. இங்கே வந்து திக்குவாய் நீங்கிப் போனவர்களும் சரி, அவர்களுடைய உற்றார் உறவினர்களும் சரி, யோகசக்தியால்தான் டாக்டர் ராமி இப்படிக் குணப்படுத்துகிறார் என்று சொல்லிக்கொள்கிறார்கள். சகஜமாக இதைச் செய்திருக்க முடியும் என்று அவர்களாலேயே நம்ப முடியவில்லை.

ஆகவே, திக்குவாய்க்காரர்களுக்கு அவர் ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். சிகிச்சை பெறப் போனவர்களில் ஒருவர் தவறாமல் எல்லாரும் முழுதும் குணமடைந்துதான் திரும்பி வந்திருக்கிறார்கள் என்றால், அதற்குமேல் கேட்பானேன்?

இல்லா நாட்டுச் செய்தி

- வில்லியம் மாரிஸ் கனவு -

ஆனந்தமே எங்கும் நிறைந்த புதிய உலக சமுதாயம் அமைய என்ன வழி என்று விளக்கும் கற்பனைச் சித்திரங்களைப் பல பேராசிரியர்கள் வரைந்திருக்கிறார்கள். வில்லியம் மாரிஸ் அவர்களுள் ஒருவர். அவருடைய நூல் கருத்துக்களை ரா. ஸ்ரீ. தேசிகன் இங்கே விளக்கம் செய்கிறார்.

19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து மக்களின் வாழ்க்கையில் மாபெரும் புரட்சிக்கான மாறுதல்கள் ஏற்பட்டன. விஞ்ஞான அறிவு ஓங்கிற்று. இயற்கையின் பெருஞ் சக்திகளை மனிதன் தனக்கு வசமாக்கிக்கொண்டான். திரை கடல்மீது ஆணை செலுத்தியே தொழில் செய்யத் தொடங்கினான். யந்திரங்கள் இடையறாது சுற்றும் தொழிற்சாலைகள் எங்கும் தோன்றின. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் போராட்டம் நிகழவே, மனக் கசப்புப் பிறந்தது. வாழ்க்கையில் இன்பமுமில்லை; மணமுமில்லை. புகை சூழ்ந்த தொழிற்சாலைகளில் பால் மணம் மாறாத இளங் குழந்தைகள் புழுங்கினர். எங்கே பார்த்தாலும், அழுக்கும் துர்நாற்றமும் குப்பையும் கூளமுந்தான். தொழிலாளிகள் அடிமைகளாகி விட்டனர்.

'குழந்தைகளின் ஓலம்' என்று பாரட் பிரவுனிங் அம்மையார் எழுதிய பாட்டு நம் உள்ளத்தைத் தொடாமற் போகாது. டிக்கன்ஸ் தம் சிறந்த நாவல்களில் சமூகத்தின் கோரமான சூழ்நிலையை, தம் கண்ணீரில் பேனாவைத் தோய்த்தே சித்திரித்திருக்கிறார். கொழிக்கும் செல்வம் ஒரு பால்; கோர தாண்டவமாடும் வறுமை ஒரு பால்; குப்பை நிறைந்த குடிசைகள் ஒரு பால்; இன்பம் நிறைந்த மாட மாளிகைகள் ஒரு பால். வாழ்க்கையில் நேர்மையில்லை; நன்மையில்லை; இன்பமில்லை; அழகில்லை. பணப் பேய் தலை விரித்தாடிற்று. மனிதன் மனிதனை அடிமைப்படுத்தினான்.

இந்த நிலை கண்டு, கார்லைலின் உள்ளம் குமுறிற்று; அவருடைய பேனாவிலிருந்து எரிமலையின் தீயைப்போல் சொற்கள் வெடித்தெழுந்தன. ரஸ்கின், கவிதை நயம் ததும்பும் தம் உரை நடையில் இந்த விபரீதமான நிலையை விளக்கிக் காட்டினார். இவருடைய அடிச் சுவட்டை மாரிஸ் பின்பற்றினார். கலையில் எழுவது போல், வாழ்க்கையிலும் இன்பம் அழகு இரண்டும் தோன்ற வேண்டும் என்று ரஸ்கின் மொழிந்தார். ரஸ்கின், அழகுக் கலையின் தத்துவத்தை நன்கு உணர்ந்தவர் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. ஆனால் அதில் சொந்த அநுபவமில்லை.

மாரிஸ், தம் வாழ்க்கையிலேயே, தாம் கண்ட நல்லதை நடத்திக் காட்டினார். புதியதொரு சமுதாயத்தை நிறுவத் தம் உடல், பொருள், ஆவி-இவை யாவற்றையும் மாரிஸ் சமர்ப்பணம் செய்தார் என்று மாக்கேல் (Mackail) தம் அபூர்வமான மாரிஸ் சரிதத்தில் சொல்லியிருக்கிறார். மாரிஸ் எழுதிய ஒவ்வொரு வரிக்கும் நம் உள்ளம் எதிரொலி கொடுக்காமல் போகாது. 'வாழ்க்கை வேறு, கலை வேறு என்று பிரிக்காதீர்கள்; கலைதான் வாழ்க்கை, வாழ்க்கைதான் கலை' என்ற பல்லவி அவர் எழுதிய நூல்கள் முழுவதும் ஒலிக்கக் கேட்கிறோம். 'செய்கிற வேலையில் இன்பமில்லாமல் போனால், அதைவிட நரகம் வேறில்லை' என்ற கொள்கையைப் பல இடத்தில் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

மாரிஸ் 1834-ஆம் வருஷம் வால்தம் ஸ்டோ (Waltham Stow) என்ற இடத்தில் பிறந்தார். மார்ல்பரோ பள்ளியிலும், ஆக்ஸ்போர்டிலும் படித்தவர். நன்றாய்க் கவிதை பாடும் இயல்புள்ளவர். அவர் ஒரு கவி; ஓவியப் புலவர்; பொதுவுடைமைக்காரர். அவருடைய கொள்கைகளை 'ஜான் பாலின் கனவு' (The Dream of John Ball), 'எங்குமில்லா நாட்டின் செய்திகள்' (The News From Nowhere) முதலிய நூல்களில் பார்க்கலாம்.

'எங்குமில்லா நாட்டின் செய்திகள்' என்ற நூலின் நயங்களை ஆராய்வோம். இது ஒரு கனவுச் சித்திரம். ஒருவருடைய கனவில் ஒரு பெருங் கற்பனை நாடு விரிகிறது. அந்தக் கனவை நமக்கு ஆசிரியர் தருகிறார்.

ஒரு சபையில் சொல் போர் ஒன்று நடந்தது. அதில் பல பேர்கள் கலந்துகொண்டார்கள். புதிய லட்சிய சமுதாயம் ஒன்றை எப்படி நிறுவலாம் என்ற விஷயத்தைப் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் ஒரு சம்பாஷணை எழுந்தது.

வாதப் போர் ஓய்ந்ததும், ஆசிரியரும் அவருடைய நண்பரும் சிந்தையில் ஆழ்ந்தபடியே ரெயில் வண்டியில் ஏறினார்கள். நண்பரின் இடம் நெருங்கிக்கொண்டிருந்தது. அது தேம்ஸ் நதிக்கப்பால் உள்ள இடம். வண்டி நின்றதும் ஆசிரியரிடம் நண்பர் விடை பெற்றுக்கொண்டார். பிறகு அவர் மெல்லத் தம் வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். "என் கனவு உலகத்தைக் காணும்பட்சத்தில்...." என்று சொல்லிக்கொண்டே நதியை நோக்கிப் போகுமளவில், இன்னல்கள், கவலைகள், நிம்மதியின்மை எல்லாம் அவருடைய மனத்தை விட்டுப் பறந்துவிட்டன.

முன் பனிக் காலத்தில் ஓர் அழகான இரவு. வண்டிப் புழுக்கத்திலிருந்து வெளியே வந்த நண்பருக்கு, சில் என்று அடிக்கும் காற்றும் இன்பமாயிருந்தது. சூழ்ந்துள்ள முகில்கள் காற்றில் கலையவே, ஆகாயம் நிர்மலமான காட்சி அளித்தது. குழவித் திங்கள் விண்ணில் ஒளி விட்டுக்கொண்டிருந்தது. ஆற்றங் கரைக்கு அவர் வந்தார். நிலவு படிந்த அந்த நதியை நோக்கியபடியே சற்று நின்றார். புகலரும் இன்பம் ஒன்று அவருடைய உள்ளத்தில் பாய்ந்தது. அந்த இன்பத்தைப் பருகியபடியே வீடு சேர்ந்தார். உடனே தூக்கத்தில் ஆழ்ந்தார்.

தூக்கம் சிறிது கலைந்தது. மணி ஒன்றடித்தது; இரண்டும் அடித்தது; மூன்றும் அடித்தது. மீண்டும் தூங்கினர். பல தோற்றங்கள் அவர் முன் விரிந்தன. அவைகளை ஆசிரியரிடம் சொன்னர். நண்பர் தாமே சொல்கிற முறையில் கதையை ஆசிரியர் தொடங்குகிறர்:

"பொழுது புலர்ந்தது; நான் படுக்கையை விட்டு எழுந்தேன். காற்று இன்பமாய் வீசிற்று. வெளியிலே உலாவச் சென்றேன். நான் படுக்கப் போகும்போது இருந்த குளிர் காலம் சட்டென்று மாறி விட்டது. ஒளிவிடும் வேனிற் காலம். குளிர் கால நிலவில் மிளிர்ந்த தேம்ஸ் நதி, வெய்யோனின் விரி சோதியில் தோய்ந்து ஓடக் கண்டேன். தேம்ஸ் நதிமீது பழைய பாலம் தோன்றினலும், எல்லாம் மாறிவிட்டன. தொழிற்சாலையின் இடையருத சத்தமும் ஓய்வில்லாத இரைச்சலும், அமைதியில் இறந்தவிட்டன.

"விருந்தினர் விடுதிக்கு நான் சென்றேன். அது ஓர் அழகான கட்டிடம். வனப்பு வாய்ந்த இளம் வனிதையர் மூவர் நடமாடக் கண்டேன். திடகாத்திரமுடையவர்கள்; ஆரோக்கியமுடையவர்கள்; அழகு வாய்ந்தவர்கள். மிகவும் நேர்த்தியான ரொட்டியை அருந்தினேன். எனக்கு வயது குறைவாயிருந்தபோதிலும், நான் வயது முதிர்ந்தவனுகத் தோன்றினேன். அவர்களுக்கு வயதான போதிலும், அவர்களிடம் வாலிப உணர்ச்சி ததும்பி நின்றது. நான் மார்க்கெட்டுக்குப் போனேன். அது இரைச்சலும் நாற்றமும் குப்பையும் கூளமுமாயுள்ள மார்க்கெட்டாய்த் தோன்றவில்லை. அழகிய கழனிகளின் நடுவே கம்பீரமாய் அது காட்சி அளித்தது. அனைவரும் மிக வனப்பு வாய்ந்த உடைகளை அணிந்திருந்தார்கள். ஓர் ஓவிய மண்டபம்போல அது தோன்றிற்று. அங்கே மக்கள் கொண்டு வந்த கூடைகளில்கூட மிகுந்த வேலைப்பாடு தென்பட்டது.

"என்னை அழைத்துக்கொண்டு போகிற அந்த நாட்டு டிக் (Dick) என்பவனைப் பார்த்து, 'என் வழியில் ஏழைகளைக் காணவில்லை?' என்றேன். நோயாளிகளும் இல்லையே என்று வியப்புடன் அவனை நோக்கினேன். 'அவர்கள் எதற்காகத் தோன்ற வேண்டும்? என்னேடு வந்தீர்களானல் என் கொள்ளுப் பாட்டனர் எல்லாவற்றையும் உங்களுக்கு விளக்கிக் காட்டுவார்' என்று டிக் சொன்னன். டிக்கும் நானும் சென்று கொண்டிருக்கும்பொழுது, ஓக், செஸ்ட்நட் இந்த இரண்டு வகை மரங்களும் அடர்ந்த ஓர் இடத்தை அடைந்தோம். மரநிழலில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்த குழந்தைகளென்று சொன்னன் டிக். 'குழந்தைகளுக்குப் படிப்பு வேண்டாமா?' என்றேன். 'இந்தக் குழந்தைகளுக்குச் சமையல் செய்யத் தெரியும். வீட்டுக் காரியங்களை இவர்கள் நன்ருய்ச் செய்வார்கள். சற்றுப் பெரிய பையன்களுக்குக் கதிர் அறுக்கத் தெரியும்; புல் அறுப்பார்கள்; கூரை வேய்வார்கள்; தச்சு வேலை செய்வார்கள்; கடைகளைக் கவனிப்பார்கள' என்ருன் டிக். 'இவை யாவும் கை வேலைகள் தானே? மூளைக்கு வேலை வேண்டாமா?' என்றேன். 'புத்தகங்கள் எங்கும் இறைந்து கிடக்

கும். நான்கு வயதிலே குழந்தைகள் படிக்கத் தொடங்கிவிடும். கண்டவாறு குழந்தைகளை எழுதச் சொல்ல மாட்டோம். அவர்களின் கையெழுத்து அச்சுப்போல் இருக்க வேண்டும். கையெழுத்தையே ஒரு கலையாக இங்கே கருதுகிறோம்' என்றான் அவன். 'எழுதப் படிக்கத் தொடங்கிய பிறகு அவர்கள் வேறு மொழிகளைக் கற்க வேண்டாமா?' என்றேன். 'படிப்பதற்கு முன்பே அவர்கள் ஃபிரெஞ்சு பாஷையைப் பேசுவார்கள். ஜெர்மன் பாஷையைத்தெரிந்துகொள்ளுவார்கள். ஆங்கிலம், வெல்ஷ், ஐரிஷ் மொழிகளையும் கற்பார்கள். இந்தப் பாஷைகளை அவர்கள் மிகச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளுகிறார்கள். முதியவர்கள் பல மொழிகளில் வல்லவர்களாயிருக்கிற காரணத்தால், இவர்களுக்கும் மொழிகள் சுலபமாய் வந்துவிடுகின்றன. பண்டைய கிரீக், லத்தீன் பாஷைகளையும் இவர்கள் பயின்று விடுகிறார்கள்' என்று டிக் சொன்னான்."

நம் தமிழ் நாட்டைப்பற்றி நினைத்தால் நம் அறியாமை விளங்கும். எத்தனை சாதிச் சழக்குகள்! எத்தனை வகுப்புச் சண்டைகள்! அந்நிய பாஷைகள்மீது எத்தனை பகை!

அந்த நாட்டில் மக்கள் விரும்பியதைப் படிப்பார்கள். ஒன்றும் கட்டாயமில்லை. முதியவர்கள் என்ன செய்கிறார்களோ அதைப் பின்பற்றுவது குழந்தைகளின் இயல்பன்றோ? கட்டிட வேலை, பாதையைச் செப்பனிடுதல், தோட்டக்கலை - இவைகளில் குழந்தைகளும் ஈடுபடுகின்றன. அதோடு பையன்கள் அன்புள்ளவர்களாயும் நிர்மலமான சிந்தை உள்ளவர்களாயும் அடக்கம் உள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

மேலும், ஆசிரியர் சொல்வதைப் பார்ப்போம்: " 'வெஸ்ட்மின்ஸ்டர் கட்டிடம் எங்கே? அதை என்ன செய்தீர்கள்?' என்றேன். 'அதை என்னசெய்வது? அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே அதன் வெளிப்புறம் கெட்டுப் போய்விட்டது. முட்டாள்களுக்கும் தகுதியற்றவர்களுக்கும் எழுப்பிய ஞாபகச் சின்னங்களை வெளியேற்றி விட்டோம். அழகுள்ள பொருள்களை அப்படியே வைத்திருக்கிறோம்' என்றான் டிக். 'சட்டசபைகள் எங்கே?' என்றேன். டிக் 'கொல்' என்று சிரித்துவிட்டான். 'எருவைக் கொட்டி அதில் வைத்திருக்கிறோம். மார்க்கெட்டின் ஒரு பகுதியாக அவைகள் விளங்குகின்றன' என்றான் டிக்.

"தோட்டங்கள், வனங்கள் - இந்த இடங்களிலிருந்து வெளிக் கிளம்பினோம். அழகாய்க் கட்டிய வீடுகள் நிறைந்த ஒரு சிறிய தெருவுக்கு வந்தோம். 'பிக்காடிலோ என்று முன்பு சொல்வார்களே, அந்த இடந்தான் இது' என்று டிக் கூறினன்.

"கடைக்குப் போனோம். அங்கே குழந்தைகள் உட்கார்ந்திருந்தன. 'இந்தக் கனவானுக்குப் புகையிலையும், புகையிலைக் குழாயும் தேவை' என்று டிக் மொழிந்தான். ஓர் அழகான கூடையில் இந்த இரண்டு சாமான்களையும் வைத்து ஒரு பையன் அளித்தான். 'நிறுத்துக் கொடுக்கவில்லையே?' என்றேன். 'தேவையானதை எடுத்துக்கொள்ளுங்கள். நிறுக்கிற அலுவல் இந்த நாட்டில் இல்லை' என்றான் டிக். எல்லாவற்றையும் ஒரு பையில் வைத்துத் தந்தான் சிறுவன்.

கூடை, பை, புகையிலைக் குழாய் எல்லாப் பொருள்களும் கலை மணம் வீசின.

"அந்தக் கனவு உலகத்தில் நிகழ்ந்த காதல், மணம் முதலிய வற்றைப்பற்றிக் கேளுங்கள். டிக் தன் கொள்ளுப் பாட்டனிடம் அழைத்துச் சென்ருன். டிக்குக் கும் அவன் மனைவிக்கும் சற்றுப் போதாதாம். 'கோர்ட்டுக்குப் போய்ப் பிரிந்து போகப் போகி றீர்களா?' என்று கேட்டேன். 'வியாஜ்யம், விவகாரம் எல்லாம் சொத்தைப்பற்றி யல்லவா எழு கின்றன? இந்த நாட்டில் அந்த வழக்கமில்லை. எல்லாம் பொது வுடைமை ஆயிற்றே. மேலும், வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள நீதி மன்றங்கள் இல்லை. அன்பில்லா மல், சமுதாய மரியாதைக்காக நடந்துகொள்ள மாட்டார்கள். அன்பிலே பிறந்த காதல் அதிக நாள் நீடித்து நில்லாமல் போனு லும், அதிலே தோன்றுகிற அழகு வாய்ந்த பிள்ளைகள் போதும் என்று நினைக்கிற கொள்கை தான் எங்கள் நாட்டில் இருக் கிறது' என்று அந்தக் கிழவர் கூறினர். மேலும், 'வியாபார முறையில் நடக்கிற மணத்தை நாங்கள் வெறுக்கிருேம்' என்ருர்."

19-ஆம் நூற்ருண்டில் வறுமை யால் மக்கள் வருந்தினர்கள். அந் தக் காரணத்தால், உண்மையான படிப்புக்கு இடமில்லாமல் போயிற்று. இது சம்பந்தமாக ஆசிரியரின் கற்பனையை இங்கே கவனிக்கலாம்.

" 'இப்பொழுது அரசியல் எப்படி நடக்கிறது?' என்றேன். 'ஏழை, பணக்காரர் என்ற நிலையை ஒழித்துவிட்டோம். ஏழை, பணக் காரர்கள் என்ற நிலை இருந்தால் தானே, அரசியல் வேண்டும்? எல் லோரும் எல்லாச் செல்வமும் எய்த லாலே, அரசியலுக்குத் தேவை ஏது? தனி உடைமை போனதால் அதன்பால் ஏற்பட்ட சட்டதிட் டங்கள் மறையத்தானே மறை யும்? அவரவர் விருப்பத்துக் கிசைந்தவாறு, அவரவர் தொழில்களில் இறங்கலாம். நிபந் தனை இல்லை. செய்யும் தொழிலில் இன்பம் கண்டால் பொருமைக்கு இடமுண்டோ? தண்டனை இல்லை; சட்டமுமில்லை' என்ருர். 'மற்ற நாடுகளோடு எப்படிப் பழகு கிறீர்கள்?' என்று வினவினேன். 'ஒன்ளோடு ஒன்று போராடுகிற நிலை போயிற்று. மனிதனிடையே ஏற்றத் தாழ்வு என்ற நிலையை வேரோடும் மாய்த்துவிட்டோம். உண்மையான, நிரந்தர விஷயங் களில் சர்ச்சைகள் ஏற்படமாட்டா. எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்பதே எங்கள் கொள்கை. பொதுக் காரியத்தில் எல்லோரும் சேர்ந்து உழைக் கிருேம். சாப்பாடு, உடை இவை கள் சம்பந்தப்பட்டவரையில் மனிதன் தன் விருப்பத்தின்படி நடக்கலாம். உலகத் தேவைக்குத் தகுந்தபடி பொருள்களைப் படைக் கிருேம். ஒருவரை யொருவர் ஏமாற்றும் நிலை மாறிவிட்டது. செய்கிற தொழிலில் இன்பம் பெருகுமானல் தொழிலை விரும் பியே மாந்தர் புரிவார்கள் என் பதில் ஐயமில்லை' என்ருர் கிழவர்.

"வியாபார முறையில் பிறந்த அடிமைத்தனம் நீங்க மாந்தர்கள் எப்படிப் பாடுபட்டார்கள், எப்படி அவர்கள் சுதந்தரம் அடைந்தார் கள் என்பதை அழகாகக் கிழவர் கூறினர். 'நாங்கள் கலையைத் தனித்து வைத்து அழகு பார்ப்ப

தில்லை. உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும சுவைமிக்க பண்டமும் எல்லாம் கலைமுறையில் சமைந்து கிடக்கின்றன' என்று முடித்தார்.''

இறுதியில் கண்ட இந்தக் கருத்துக்களைத்தான் நாம் திரும்பத் திரும்ப மாரிஸ் இயற்றிய வேறு நூல்களில் காண்கிறோம். 'ஜான் பாலின் ஒரு கனவு' நம் உள்ளத்தைத் தொடாமல் போகாது. 'போட்டியில் இன்பமில்லை. சேர்ந்து வாழ்வதே நீள் சொர்க்கமாகும். அந்த நிலையிலலையேல், அதுதான் வெங் நரகமாகும்' என்கிறார் மாரிஸ். 'ஆண்டவனை நேரில் பார்த்த சான்றோர்கள் அவன் தரிசனத்தை எல்லாப் பொருள்களிலும் காண்பது போல, செய்கிற தொழில்கள் அனைத்திலும் இன்பமும் அழகும் காணவேண்டும்' என்கிறார். பயனற்ற தொழிலை உலகத்திலே வளர விடக் கூடாது என்பது தான் அவருடைய கொள்கை. யந்திரங்களை வேண்டாம் என்று அவர் சொல்லவில்லை. ஆனால் அவைகளுக்கு மனிதன் அடிமையாகக் கூடாதென்பதே அவர் கொண்ட உயர்ந்த கருத்து. 'அவை தருகிற ஓய்வால் மனிதன் சுதந்தரம் அடையவேண்டும்; இன்பம் நுகர வேண்டும். ஒருவரை யொருவர் பிடுங்கித் தின்னும் நிலை மாறி எல்லோரும் ஒரு குலமாகத் திகழ வேண்டும்' என்று அவர் கனவு கண்டார். இத்தகைய மனப்பண்புடையவரை உண்மையான கிறிஸ்துவர் என்று சொல்லுவதற்குத் தடை என்ன?

கடல்மீது ஆணை செலுத்துகிறோம்; விண்ணில் உலாவுகிறோம்; நீருக்கடியில் திரிகிறோம். ஆனால் சேர்ந்து வாழும் தன்மையை இழந்துவிட்டோம். ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது; அதை அவன் போற்றி வளர்க்கவேண்டும். பொறாமை, போட்டி இவைகளால் விளையும் துன்பம், இன்னல் முதலியவை மறைவதற்கு ஒவ்வொருவரும் பாடுபடுவது மாந்தர் கடனாகும். மாசு படிந்த வாழ்க்கைக்கு இடமில்லை; தூய்மை, அழகு, அமைதி, நேர்மை எல்லாம் கரைந்து பாயவேண்டுமென்பதே மனிதனின் நோக்கமாகும்.

'ஒரு வேந்தன் போதனை' (A king's lesson) என்ற இவர் நூலில் கண்ட கருத்துக்கள் நோக்கத் தகுந்தவை. வேந்தர்களுக்கு இடமில்லை; பிரபுக்களுக்கு இடமில்லை; பணத்தை வட்டிக்கு விடும் மாந்தர்களுக்கு இடமில்லை. ஆனால் ஒரு தொழிலுண்டு. அது யாதென்றால், நாம் இன்பமாய் உழைக்க வேண்டும்; இன்பமாய் வாழ வேண்டும்.

'மக்களின் கலை' (The art of the people) என்ற மற்றொரு நூலில் மாரிஸ் கண்ட தத்துவம் மிளிர்கிறது. 'கலை என்பது வெறும் பொழுதுபோக்கன்று. அது எப்பொழுதும் மக்களின் சிந்தையில் உறையவேண்டும்; மக்கள் வாழ்க்கையின் அடிப்படையாய்த் திகழ வேண்டும். கலையை மக்கள் சமைக்கவேண்டும். மக்களுக்காகவே அது தோன்றும்படி செய்வது ஒரு கடனாகும். அவர்களுடைய இன்பத்துக்கும் தேவைக்கும் அது உதவுமாறு அமைத்தல் அறமாகும்' என்கிறார்.

'வாழ்க்கையின் வனப்பு' (The beauty of life) என்ற அவருடைய கட்டுரை ஒன்றிலும் இதே கருத்துத்தான் தோன்று

கிறது. இதில் தாம் ரஸ்கின் கருத்தைத் தந்திருப்பதாகச் சொல்லுகிறார்: "தேவையான பொருள்களை அழகுடன் அமையுங்கள், அமையுங்கள்; அதில்தான் வாழ்க்கையின் இன்பஊற்றுப் பெருக்கெடுத்து ஓடும்" என்கிறார். எப்படி வாழ்கிறோம்; எப்படி வாழ வேண்டும் என்ற கேள்வியை எழுப்புகிறார். அதற்குத் தகுந்த விடையையும் தருகிறார். 'தக்க உடல் நலம் வேண்டும்; சென்றது, நிகழ்வது, வருவது - இந்த முக் காலங்களிலும் நம் மனம் ஈடுபட வேண்டும். உடலும் மனமும் இன்பத்தில் தோயவேண்டும். தாம் உறைய ஒரு வனப்பு வாய்ந்த உலகத்தைச் சமைப்பது மாந்தரின் கனவும் நோக்கமும் ஆகும். 'கலையின் நோக்கங்கள்' என்ற கட்டுரையில் 'நிதம் நிகழும் அலுவல்களைக் கலைக் கண்ணோடு நோக்கி அவைகளை வனப்புக்கோர் உறைவிடமாக அமைக்கப் பாடுபடுவோமாக!' என்று மொழிகிறார். 'பயனுள்ள வேலையும் பயனற்ற உழைப்பும்' என்ற தலைப்பிலும் அவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். 'போட்டியும் பொறாமையும் நிறைந்த உலகத்தில் அமைதிக்கு இடமில்லை; வலியார் எளியாரை வாட்டும் நிலை மாறவேண்டும். கீழ்ச் சாதி மேல் சாதி என்ற எண்ணம் மாறி மனிதத்தன்மை என்ற புனிதமான உயர்ந்த இடத்தில் எல்லாரும் கூடவேண்டும்?' என்று அதில் கூறுகிறார்.

'கலையும் சமுதாய உடைமையும்' (Art and Socialism) என்ற கட்டுரையில் மாரிஸ் தந்த கருத்துக்களும் போற்றற்குரியவை: 'எதைச் சமுதாயத்துக்குச் செய்யவேண்டுமோ அதை எல்லாரும் சேர்ந்து செய்யவேண்டும். அயர்வும் கவலையும் நீங்கிய ஒரு சூழ்நிலையைப் படைக்கவேண்டும். வியாபாரப் போட்டியில் நிகழ்ந்த வெம்போரில், கவி, கலைஞன், பௌதிக சாஸ்திர நிபுணன் இவர்களுடைய உன்னத முயற்சிகள் பாழடைகின்றன. புகை சூழ்ந்த யந்திரசாலைகளும் மாசடைந்த புனலும் மறையவேண்டும்' என்பது அவர் கருத்து.

ஒரு தொழிற்சாலை எப்படி இருக்கவேண்டும் என்பதை மாரிஸ் சித்திரிக்கிறார்: 'ஓர் அழகான தோட்டத்தின் நடுவில் அது இருக்கவேண்டும். சூழ்நிலைக்கு அது ஓர் அழகை அளித்தல் நலமாகும். வகுப்புச் சண்டை ஒழிந்தால்— எல்லாரும் ஒரு குலமாய்த் திகழ்ந்தால்—தொழிற்சாலையுங்கூட அன்பு, அழகு, இன்பம் இவையெல்லாம் தாண்டவமாடும் ஓர் இடமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை' என்கிறார்.

'என் சரித்திரப் படிப்பும், என் பழுத்த அநுபவமும், கலையில் நான் வைத்த ஆர்வமும் என்னை ஒரு பொதுவுடைமைக்காரனாகச் செய்துவிட்டன' என்று மாரிஸ் கூறுகிறார்.

இவருடைய நூல்களைப் படிக்குந்தோறும் உலகமே நறுமணம் வீசும் ஓர் அழகிய நந்தவனமாக நம்முன் விரியுமென்பதில் ஐயமில்லை. இது ஒரு கனவுதானா? அல்லது தோற்றந்தானா? நிறைவேறக்கூடிய லட்சியந்தானா? ஒன்றும் சொல்வதற்கில்லை. 'இது என் விருப்பம்; இது என் ஆர்வம்' என்று மாரிஸ் இயம்புவது போல இந்த நூல்கள் காட்சி அளிக்கின்றன.

ருஷியக் கதை:

கடவுள் வந்தார்

லியோ டால்ஸ்டாய்

ருஷிய மகான் டால்ஸ்டாயைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதே யில்லை. காந்தியடிகள் இவரது வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்த பிறகு அதன் தத்துவத்தைத் தாமும் கடைப்பிடித்தார் என்றால் கேட்பானேன்? டால்ஸ்டாயின் கதை ஒவ்வொன்றும் ஆழ்ந்த கருத்துக் கொண்டது. 'அன்பு இருக்கும் இடத்திலே கடவுள் இருக்கிறார்' என்ற தலைப்புடன் டால்ஸ்டாய் எழுதியுள்ள இதிலும் அதைக் காணலாம்.

ஒரு பட்டணத்தில் ஜோடு தைக்கும் தொழிலாளி ஒருவன் இருந்தான். மார்ட்டின் ஆவ்டிச் என்று அவனுக்குப் பெயர். ஒரு சின்ன வீட்டில் ஓர் அறையை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு அவன் வசித்தான். அறைக்கு ஒரே ஒரு ஜன்னல். அந்த ஜன்னல் வழியாகப் பார்த்தால், வீதியிலே போகிறவர் வருகிறவரின் கால் மட்டுமே தெரியும். அக்கம் பக்கத்தில் உள்ள அத்தனை பூட்ஸுகளும் என்றாவது ஒரு நாள் அவன் கைக்கு வந்துதான் போயிருக்கும். ஆகவே, தன் கை வேலைப்பாட்டை ஜன்னல் மூலம் அடிக்கடி அவன் பார்த்து மகிழ்வான்.

மார்ட்டின் எப்போதுமே ரொம்ப நல்லவன். அதுவும், கிழவனாய்ப் போன பிறகு, ஆத்மார்த்த விஷயங்களில் அதிகமாகச் சிந்தனையைச் செலுத்தினான்; தெய்வத்திடம் அதிக பக்தி கொண்டான். எஜமான் ஒருவரிடம் அவன் வேலை செய்துகொண்டிருந்த போதே, அவனுடைய மனைவி இறந்துவிட்டாள். மூன்று வயதுச் சிறுவன் ஒருவனை விட்டுவிட்டுப் போய்விட்டாள். பிறகுதான் அவன் சொந்தத்தில் தொழில் செய்யத் தொடங்கினான். மூத்த குழந்தைகளெல்லாம் பிள்ளைப் பிராயத்திலேயே போய்விட்டன. இந்தக் கடைசிப் பையனை நாட்டுப்புறத்தில் உள்ள தன் தங்கையிடம் அனுப்பிவிடலாமா என்று முதலில் மார்ட்டின் நினைத்தான். ஆனால் சிறுவனை விட்டுப் பிரிய அவனுக்கு மனம் இல்லை. 'பழக்கமில்லாத ஒரு குடும்பத்தில் போய் வளர்ந்தால், என் குழந்தை காபிடான் என்ன கஷ்டப்படுவானோ? அவன் என்னோடேயே இருக்கட்டும்' என்று எண்ணினான்.

எஜமானை விட்டு, ஒரு ஜாகை எடுத்துக்கொண்டு, மார்ட்டின் தன்

மகனுடன் வசிக்கலானுன். அவனுக்குத்தான் குழந்தைகள் விஷயத்தில் அதிருஷ்டம் இல்லேயே! சிறுவனுக்கு வயது வந்து, தகப்பனுக்கு உதவத் தொடங்கிய சந்தோஷம் சில நாள்கூட நிலேக்கவில்லே. சிறுவன் நோயில் விழுந்தான். ஒரு வார காலம் தாபஜ்வரம் அடித்தது. மாண்டு போனுன். மகனே மார்ட்டின் கொண்டுபோய்க் குழியிலே வைத்தான். பெருந் துக்கம் அடைந்தான். கடவுளே நொந்து முணுமுணுக்கத் தொடங்கினுன். துயரந் தாங்காமல், "தெய்வமே, என்னேயும் கொண்டுபோய் விடேன்" என்று திரும்பத் திரும்ப வேண்டிக்கொண்டான். "என் ஆசை மகன்-ஒரே குழந்தை-அவனேக் கொண்டு போய்விட்டாய். கிழடு தட்டிய என்னே ஏன் வைத்திருக்கிருய்?" என்று தெய்வத்தை நிந்தித்தான். இதற்குப் பிறகு மார்ட்டின் தேவாலயத்துக்குப் போவதையே நிறுத்திவிட்டான்.

ஒரு நாள் மார்ட்டினின் சொந்த ஊரைச் சேர்ந்த ஒரு கிழவன் வந்தான். எட்டு வருஷமாகப் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து வரும் தேசாந்தரி அவன். ட்ராயிட்ஸா சந்நியாசி மடத்துக்குப் போகும் மார்க்கத்தில், மார்ட்டினே அவன் வந்து பார்த்தான். தன் மனத்தைத் திறந்து, தன் உள்ள வேதனேயை அந்தக் கிழவனிடம் மார்ட்டின் சொன்னுன்.

"பெரியவரே, எனக்கு இனிமேல் உயிர் வாழவே பிடிக்கவில்லே. ஆண்டவனே நான் வேண்டுவதெல்லாம் கூடி, என்னே உடனே கொண்டு போய்விடு என்பதுதான். உலகத்தில் எனக்கு ஒரு நசையும் இல்லே."

தேசாந்தரிக் கிழவன் சொன்ன பதில் இது: "மார்ட்டின், இந்த மாதிரியெல்லாம் பேச உனக்கு அதிகாரம் இல்லே. கடவுளின் வழிகளேப்பற்றி நாம் தீர்ப்புச் சொல்ல முடியாது. நம் நியாயமெல்லாம் பயனில்லே; கடவுளின் சித்தம் எதுவோ அதுவே சரி. உன் மகன் சாக நீ வாழ வேண்டும் என்பது கடவுளின் சித்தமானுல், அதுவே சிறந்த நன்மை என்று நீ கொள்ள வேண்டும். உனக்கு ஏன் சோர்வு உண்டாகிறது, தெரியுமா? உன் சுயமகிழ்ச்சிக்காகவே நீ வாழ விரும்புகிருய். அதனுல்தான்."

"வேறு எதற்காக ஒருவன் வாழ வேண்டும்?" என்று கேட்டான் மார்ட்டின்.

"கடவுளுக்காக, மார்ட்டின். அவரே உனக்கு உயிர் கொடுத்தார். தமக்காக ஒருவன் எப்படி வாழ்வது என்பதைக் கிறிஸ்து நமக்குக் காட்டிவிட்டார். உனக்குப் படிக்கத் தெரியுமா? அப்படியானுல் சுவிசேஷங்கள் என்ற புஸ்தகத்தை வாங்கிப் படி" என்ருர் தேசாந்தரி.

இந்த வார்த்தைகள் மார்ட்டினின் இருதயத்தில் ஆழப் பதிந்தன. அன்றே போய்ப் 'புதிய ஏற்பாடு' என்ற புஸ்தகத்தின் பெரிய எழுத்துப் பதிப்பு ஒன்றை வாங்கி வந்து படிக்க ஆரம்பித்தான்.

இதிலிருந்து மார்ட்டினின் வாழ்க்கையே மாறிவிட்டது. முன்னே ஓய்வு நாட்களிலெல்லாம் வெளியே போய்க் கடையிலே டீ குடிப்பான். ஒன்றிரண்டு குவளே வோட்கா மதுவைக்கூடக் குடிப்பதுண்டு. இப்போது அப்படி இல்லே. காலேயிலே

வேலை செய்ய உட்காருவான். நாள் முழுவதும் வேலை செய்வான். அஸ்தமித்ததும், சுவரிலிருந்து விளக்கை எடுத்து மேஜை மேல் வைப்பான். அலமாரியிலிருந்து புஸ்தகத்தை எடுத்து வந்து பிரிப்பான். உட்கார்ந்து படிக்கத் தொடங்கிவிடுவான். அதிகமாகப் படிக்கப் படிக்க, விஷயம் அவனுக்கு மேலும் மேலும் நன்ருக விளங்கியது; அவன் மனத்திலே சந்தோஷம் அதிகரித்தது.

ஒரு நாள் மார்ட்டின் வெகு நேரம் உட்கார்ந்து ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தான். லூக்கா எழுதிய சுவிசேஷத்தில் ஆருவது அத்தியாயத்தில் பின்வரும் வசனத்துக்கு அவன் வந்து சேர்ந்தான்:

> உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு. உன் அங்கவஸ்திரத்தை எடுத்துக்கொண்டவனுக்கு உன் அங்கியையும் தந்துவிடு. கேட்டவனுக்கெல்லாம் இல்லையென்னுமல் கொடு. உன் பொருளை அபகரித்துக் கொண்டவனிடம் அதைத் திருப்பித் தரும்படி கேட்காதே. உன்னிடம் மற்றவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிருயோ அப்படியே அவர்களிடம் நீ நடந்துகொள்.

இதைத் தொடர்ந்து ஏழாவது அத்தியாயத்தைப் படித்தான். பணக்காரப் பரிசேயன் ஒருவன் தன் வீட்டுக்கு ஆண்டவரை விருந்துண்ண அழைத்த பகுதிக்கு வந்து சேர்ந்தான். பாவியான பெண் ஒருத்தி, ஆண்டவரின் கால்களுக்குத் தைலம் பூசி, அவைகளைக் கண்ணீரால் கழுவியதையும், அவளை ஆண்டவர் பாராட்டியதையும்பற்றிப் படித்தான். நாற்பத்து நாலாவது வசனத்துக்கு வந்தான்:

> ஆண்டவர் அந்தப் பெண்ணைப் பார்த்துத் திரும்பி, ஸைமன் என்ற பரிசேயனுக்குச் சொன்னுர்: "இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? நான் உன் வீட்டுக்குள் நுழைந்தேன். நீ என் காலைக் கழுவவில்லை. இவளோ என் காலைக் கண்ணீரால் கழுவிவிட்டாள்; தன் கூந்தலால் துடைத்துவிட்டாள். நீ என்னை முத்தமிடவில்லை. இவளோ, நான் உள்ளே நுழைந்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டிருக்கிருள். நீ என் தலைக்குத் தைலம் தடவவில்லை; இவளோ என் பாதங்களுக்குத் தைலத்தால் அபிஷேகம் செய்துவிட்டாள்."

இந்த வசனங்களை மார்ட்டின் படித்தான். சிந்திக்கலானுன்: "அவன் அவர் காலைக் கழுவவில்லை; அவருக்கு முத்தம் கொடுக்கவில்லை; அவர் தலைக்குத் தைலம் பூசவில்லை..." மார்ட்டின் மறுபடியும் மூக்குக் கண்ணுடியைக் கழற்றிஞன்; புஸ்தகத்தின் மீது வைத்தான்; ஆழ்ந்து யோசிக்கத் தொடங்கினுன்:

"அவன் என்னைப் போல்தான் இருந்திருக்க வேண்டும் — அந்தப் பரிசேயன். அவனுங் கூடத் தன்னைப்பற்றியே கவலையாயிருந்திருக்கிருன் — எப்படி ஒரு கோப்பை டீ குடிப்பது, உடம்பைக் கதகதப்பாய்ச் சுகமாய் வைத்துக்

கொள்வது என்பதே கவலை; தன் விருந்தாளியைப்பற்றி அவன் துளியும் கவலைப்படவில்லை. ஆனால், அந்த விருந்தாளி யார்? ஆண்டவரே விருந்தாளி. அவர் என்னிடம் வந்தால், நானும் இப்படியா நடப்பது?"

மார்ட்டின் தன் புஜங்களின் மீது தலையைச் சாய்த்துக்கொண்டான். தன்னை மறந்து அப்படியே தூங்கிவிட்டான்.

"மார்ட்டின்!" என்று திடீரென்று ஒரு குரல் கேட்டது. யாரோ காதருகில் வந்து அவனைக் கூப்பிடுவதுபோல் இருந்தது.

அவன் திடுக்கிட்டு விழித்தான். "யார் அங்கே?" என்று கேட்டான்.

கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தான். அங்கே யாரும் இல்லை. மீண்டும், "யார் அங்கே?" என்று கேட்டான். அப்போது தெளிவாக ஒரு குரல் கேட்டது: "மார்ட்டின், மார்ட்டின்! நாளைக்குத் தெருவிலே பார். நான் வருவேன்."

மார்ட்டின் பரபரப்புடன் நாற்காலியிலிருந்து எழுந்தான். கண்ணைத் துடைத்துக் கொண்டான். இந்த வார்த்தைகளை விழிப்பிலே கேட்டானா அல்லது கனவிலே கேட்டானா? அவனுக்கே தெரியவில்லை. விளக்கை அணைத்தான். தூங்கிவிட்டான்.

அடுத்த நாள் காலையில் சூரியன் உதிக்குமுன்பே, மார்ட்டின் விழித்தெழுந்தான். பிரார்த்தனை செய்தான். அடுப்பை மூட்டினான். முட்டைக்கோஸ் சூப்பு வைத்துப் பால் கஞ்சி கிண்டினான். டீ வைக்கும் கெட்டிலை அடுப்பிலே போட்டான். ஏப்ரான் துணியை மார்பிலே மாட்டிக் கொண்டு, வேலை செய்ய ஜன்னல் அருகே உட்கார்ந்தான். புதிய ரோம பூட்ஸ் போட்டுக்கொண்டு ஒரு வீட்டுத் தர்வான் முதலில் போனான். பிறகு தண்ணீர்ப்பானைக்காரன் போனான். நிகோலஸ் ஆட்சியில் ஸோல்ஜர் வேலை பார்த்த கிழவன் ஒருவன் அடுத்தபடியாகக் கையிலே ஒரு மண்வெட்டியுடன் ஜன்னலுக்கு அருகே வந்தான். அந்தக் கிழ ஸோல்ஜரின் பெயர் ஸ்டெப்பானிச். அண்டையில் உள்ள ஒரு வியாபாரி தர்மத்துக்காக அவனை வைத்துக்கொண்டு சம்ரட்சிக்கிறான். வியாபாரியிடம் வேலை செய்யும் கூலியாளுக்கு உதவி புரிவதே ஸ்டெப்பானிச்சின் கடமை. இந்த ஜாகையின் ஜன்னல் முன்பு இருந்த பனித் திரளையெல்லாம் கிழ ஸோல்ஜர் ஒதுக்கித் தள்ளிச் சுத்தம் செய்யத் தொடங்கினான். அவனை மார்ட்டின் ஒரு முறை பார்த்துவிட்டு, பிறகு தன் வேலையில் ஈடுபட்டான்.

ஸோல்ஜர் கிழடு தட்டித் தள்ளாடிப் போனவன். பனித் திரளை ஒதுக்கிச் சுத்தம் செய்யக் கூட அவன் உடம்பில் திராணியில்லை என்பது நன்ருகப் புலப்பட்டது.

'அவனை உள்ளே அழைத்து நான் கொஞ்சம் டீ கொடுத்தால் என்ன?' என்று எண்ணினான் மார்ட்டின். அவனை உள்ளே வரச் சொன்னான்.

"ஆண்டவர் உனக்கு அருள் புரிவாராக! என் எலும்பு மூட்டெல்லாம் வலிக்கிறது. உண்மை" என்று பதிலளித்தான் ஸ்டெப்பானிச்; பனித்துளிகளை உதறிவிட்டு, உள்ளே வந்தான்.

அறைக்குள் தூசி படியக்கூடாதே என்பதற்காகத் தன் பாதங்களைத் தட்டித் துடைத்துக் கொண்டான். அப்போது அவன் தள்ளாடி விழுந்து விடுவான் போல் இருந்தது.

"என் சிரமப்படுகிறாய்? காலை ஒன்றும் துடைக்க வேண்டாம். தரையை நான் பெருக்கி விடுகிறேன். அதுதான் தினந்தோறும் செய்யவேண்டிய காரியமாயிற்றே. வா, அப்பா. உட்கார். கொஞ்சம் டீ குடி."

இரண்டு டம்ளர் நிறைய டீ ஊற்றி ஒன்றைக் கிழ ஸோல்ஜரிடம் மார்ட்டின் கொடுத்தான். தன் டீயை ஒரு தட்டில் வார்த்து, 'உப்-உப்' என்று ஊதத் தொடங்கினான்.

ஸ்டெப்பானிச்சோ தன் டம்ளரைக் காலி செய்து அதைக் குப்புறக் கவிழ்த்தான்.

"இன்னொரு டம்ளர் குடி" என்று சொல்லி, விருந்தாளியின் டம்ளரிலும் தன் டம்ளரிலும் மார்ட்டின் மறுபடியும் டீ ஊற்றினான். ஆனால், தன் டீயைக் குடித்துக்கொண்டே வீதியை அவன் பார்த்தான்.

"யாரையாவது எதிர்பார்க்கிறாயா?" என்று கேட்டான் ஸ்டெப்பானிச்.

மார்ட்டின் முன் இரவு நடந்ததை யெல்லாம் சொல்லிக் கூச்சத்தோடு, "நம் அருமை ஆண்டவரைத்தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

ஸ்டெப்பானிச் மௌனமாகத் தலையை ஆட்டினான். தன் டம்ளரைக் காலி செய்தான். அதைக் கீழே ஒருக்களித்து வைத்தான். ஆனால் மார்ட்டின் மறுபடியும் அதை நிமிர்த்தி அதில் டீ ஊற்றினான்.

"இந்தா, இன்னொரு கிளாஸ் குடி, அப்பா. அப்புறம் நான் மேலும் எண்ணமிட்டுக்கொண்டேயிருந்தேன்: ஆண்டவர் இந்த மண்ணிலே நடந்தார்; யாரையும் வெறுக்கவில்லை; ஏழை மக்களின் நடுவிலேயே பெரும்பாலும் உலவினார். தொழிலாளிகளும் பாவிகளுமான நம்மைப் போன்ற ஏழைகளிலிருந்தே தம் சிஷ்யர்களைப் பொறுக்கிக் கொண்டார். 'எவனொருவன் தன்னைப்பற்றிப் பெருமை யடித்துக்கொள்கிறானோ, அவன் இழிவடைவான்; எவனொருவன் பணிவோடிருக்கிறானோ அவன் பெருமை அடைவான்' என்று அவர் சொன்னார். 'என்னை ஆண்டவரே என்று அழைக்கிறீர்கள்; உங்கள் கால்களை நான் கழுவுவேன். எவன் ஒருவன் முதல் இடம் பெற விரும்புகிறானோ, அவன் எல்லாருக்கும் சேவகனாய்த் தொண்டுபுரிவானாக! ஏனென்றால், ஏழைகள், பணிந்தவர், சாதுக்கள், இரக்கமுள்ளவர் இவர்களே பாக்கியவான்கள்!' என்று அவர் மொழிந்தார்."

ஸ்டெப்பானிச் தன் டீயை மறந்துவிட்டான். அவன் கிழவன் இல்லையா? அவனுக்குச் சட்டென்று கண்ணீர் வந்துவிட்டது. மார்ட்டின் சொன்னதையெல்லாம் அவன் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்த போது, கண்ணீர் முத்துக்கள் அவன் கன்னத்திலே வழிந்தோடலாயின.

"இந்தா, அப்பா, இன்னும் கொஞ்சம் குடி" என்றான் மார்ட்டின். ஆனால், ஸ்டெப்பானிச் தன் கைகளால் சிலுவைக் குறி இட்டு, மார்ட்டினுக்கு வந்தனம் செலுத்தி,

டம்ளரை ஒரு புறம் நகர்த்தி வைத்து எழுந்தான்.

"உனக்கு வந்தனம், மார்ட்டின் ஆவ்டிச். நீ என் உடல், ஆத்மா இரண்டுக்கும் உணவும் ஆறுதலும் அளித்தாய்'' என்று அவன் சொன்ஞன்.

"நீ வந்தது எனக்கு ரொம்பச் சந்தோஷம். மறுபடியும் வா. ஒரு விருந்தாளி வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது" என்ருன் மார்ட்டின்.

ஸ்டெப்பானிச் கிளம்பிப் போனபிறகு, மார்ட்டின் முன் போலவே தன் வேலையில் ஈடுபட்டான். அதற்குள் எத்தனேயோ பேர் வீதியில் போய் வந்துகொண்டிருந்தார்கள். வெகுநேரம் கழித்து ஒரு பெண் கைக்குழந்தையோடு அந்த ஜன்னலருகில் வந்து நின்ருள். கிழிந்துபோன ஸ்டாக்கிங்ஸ், நாட்டுப் புறத்தான் தைத்த பாதரட்சை இவைகளே அவள் அணிந்துகொண்டிருந்தாள். காற்று வரும் திசையில் முதுகைத் திருப்பிக்கொண்டு, சுவர் அருகே ஒதுங்கிக் குழந்தைக்குப் போர்த்துவிட முயன்ருள். ஆனல் போர்த்துவிடத் துணிதான் போதவில்லே. கோடைக்காலத்துக்குத் தேவையான அற்ப ஆடையே அவள் உடுத்திருந்தாள். அதுவும் அலங்கோலமாய்க் கிழிந்திருந்தது. குழந்தை அழுவது ஜன்னல் வழியாய் மார்ட்டினுக்குக் கேட்டது. அதைச் சமாதானம் செய்யப் பெண் முயன்ருள். பலிக்கவில்லே. மார்ட்டின் எழுந்தான். கதவைத் திறந்து வெளியே போய்ப் படியில் நின்றுகொண்டு, அந்தப் பெண்ணேக் கூப்பிட்டான்.

"ஏ பெண்பிள்ளே, உன்னேத்தானே! ஏ பெண்பிள்ளே!"

பெண் இதைக் கேட்டுத் திரும்பினுள்.

"இந்தக் குளிரில் விறைத்துக்கொண்டு குழந்தையையும் வைத்துக்கொண்டு அங்கே என் நிற்கிருய்? உள்ளே வா. கதகதப்பான இடத்தில் வந்து அதற்கு நன்ருய்ப் போர்த்துவிடலாம். இப்படி வா."

கழுத்திலே ஏப்ரன் துணி, மூக்கிலே கண்ணுடி இந்தக் கோலத்தில் இருந்த ஒரு கிழவன் தன்னேக் கூப்பிடுவதைக் கண்டு, அந்தப் பெண் ஆச்சரியம் அடைந்தாள். அவன் பின்னல் உள்ளே வந்தாள்.

படியில் இறங்கி அறைக்குள் இருவரும் வந்து சேர்ந்தார்கள். கட்டிலுக்கு அவளே மார்ட்டின் அழைத்துச் சென்ருன்.

"அடுப்புக்கு அருகே உட்கார். குளிர் காய். குழந்தைக்குப் பால் கொடு."

"என்னிடம் பால் ஏது? காலேயிலிருந்து நான் ஒன்றும் சாப்பிடவில்லே" என்ருள் பெண். ஆயினும், குழந்தையை மார்போடு அணேத்துக்கொண்டாள்.

மார்ட்டின் தலையை ஆட்டினன். ஒரு வாணலியையும் கொஞ்சம் ரொட்டியையும் எடுத்துவந்தான். அடுப்புக் கதவைத் திறந்தான். கொஞ்சம் முட்டக்கோஸ் சூப்பை வாணலியில் ஊற்றினன். பால் களிப் பானையையும் திறந்தான். ஆனல் பால் களி இன்னும் வேகவில்லே. அதனல், மேஜைமீது ஒரு துணியை விரித்து, சூப்பையும் ரொட்டியையும் மட்டும் வட்டித்தான்.

"உட்கார்ந்து சாப்பிடு, பெண்ணே, குழந்தையை நான் பார்த்துக்கொள்கிறேன். ஆண்டவன் கருணையால் எனக்கும்

குழந்தைகள் இருந்தன. அவைகளைப் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும்.''

பெண் தன் கைகளால் சிலுவைக் குறி இட்டாள். மேஜை முன் உட்கார்ந்து உண்ணத் தொடங்கினாள். குழந்தையை மார்ட்டின் வாங்கிப் படுக்கையின்மீது விட்டு, அதன் பக்கத்தில் உட்கார்ந்தான். 'த்சொ, த்சொ' என்று நாவைச் சொடுக்கினான். ஆனால், அவனுக்குத்தான் பல் இல்லையே; நன்றாய்ச் சொடுக்க முடியவில்லை. குழந்தையின் அழுகையும் ஓயவில்லை. பிறகு குழந்தையின் வாயில் விரலை வைத்தான்; சட்டென்று எடுத்தான். திரும்பத் திரும்ப இப்படிச் செய்தான். ஜோடு தைக்க உபயோகமான அரக்குப் பட்டுப் பட்டு அவன் விரல் கறுத்திருந்தது. அதைக் குழந்தை சப்பி விடக் கூடாதே என்பது அவன் கவலை. முதலில் அவன் விரலைக் குழந்தை சும்மா பார்த்துக்கொண்டிருந்தது; பிறகு சிரிக்கத் தொடங்கிவிட்டது. மார்ட்டினுக்குச் சந்தோஷம் பொங்கியது.

பெண் சாப்பிட்டுக்கொண்டே பேசினாள். தான் இன்னாள் என்றும் இன்ன இடத்துக்குப் போய் வருவதாகவும் மார்ட்டினுக்குச் சொன்னாள்.

''நான் ஒரு ஸோல்ஜரின் பெண்டாட்டி. எட்டு மாதத்துக்கு முன் என் கணவரை அவர்கள் எங்கேயோ கண்காணாத இடத்துக்கு அனுப்பிவிட்டார்கள். இதுவரைக்கும் அவரிடமிருந்து எனக்கு ஒரு தகவலும் இல்லை. இந்தக் குழந்தை பிறக்கும் வரையில் ஒரு வீட்டில் சமையல் செய்தேன். உணவுக்காக எங்கள் பண்டம் பாண்டங்களையெல்லாம் விற்றேன். யார் வீட்டிலாவது பால்தாதியாக அமர எண்ணினேன். யாரும் அமர்த்திக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. நான் எலும்பும் தோலுமாக மெலிந்திருப்பதாக அவர்கள் எல்லாரும் சொல்லிவிட்டார்கள். இப்போது தான் ஒரு வியாபாரியின் மனைவியைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். (எங்களூர்க்காரி ஒருத்தி அவளிடம் வேலை பார்க்கிறாள்.) அந்த அம்மாள் என்னை வைத்துக்கொள்வதாக வாக்களித்திருக்கிறாள். நிச்சயம் என்றே நினைக்கிறேன். ஆனால் அடுத்த வாரம் வரைக்கும் வரவேண்டாம் என்று அவள் சொல்லிவிட்டாள். அந்த இடம் ரொம்பத் தூரத்தில் இருக்கிறது. நடந்து நடந்து களைத்துப் போனேன். குழந்தையோ ஒரே பட்டினி, பாவம்! நல்ல வேளையாக வீட்டுச் சொந்தக்காரி எங்களிடம் கருணை காட்டுகிறாள். வாடகையில்லாமல் குடியிருக்க இடம் கொடுத்திருக்கிறாள். இல்லாவிட்டால், நாங்கள் எங்கே போவோம்?''

மார்ட்டின் பெருமூச்சு விட்டான். ''குளிருக்கு அடக்கமான வேறு துணி ஒன்றும் உன்னிடம் இல்லையா?'' என்று கேட்டான்.

''எப்படி என்னிடம் இருக்கும்? என்னிடம் கடைசியாக மிஞ்சியிருந்த கம்பளிப் போர்வையையும் நேற்றுத்தான் ஆறு பென்ஸுக்கு அடகு வைத்தேன்.''

பிறகு அந்தப் பெண் வந்து குழந்தையை எடுத்துக்கொண்டாள். மார்ட்டின் எழுந்திருந்தான். சுவரில் தொங்கிக்கொண்டிருந்த சாமான்களுக்கிடையே என்னவோ தேடினான். பழைய போர்வை ஒன்றை எடுத்து வந்தான்.

"இந்தா, இது பழசுதான். நைந்து போய்விட்டது. என்ருலும், குழந்தைக்குப் போர்த்த இது போதும்" என்ருன்.

பெண் அந்தப் போர்வையைப் பார்த்தாள். பிறகு கிழவனைத் திரும்பிப் பார்த்தாள். போர்வையைக் கையிலே வாங்கிக் கொண்டே, பல பல என்று கண்ணீர் சொரிந்துவிட்டாள். மார்ட்டின் வேறு பக்கம் திரும்பி, படுக்கைக்குக் கீழே எதோ துழாவினன். ஒரு சிறு டிரங்குப் பெட்டியை வெளியே எடுத்தான். அதற்குள்ளே கையை விட்டபடி, மீண்டும் அந்தப் பெண்ணுக்கு எதிரே உட்கார்ந்துகொண்டான். பெண் சொன்னுள்:

"ஆண்டவர் உங்களுக்கு அருள் புரிவார். எசு பகவான் தான் என்னை உங்கள் ஜன்னல் பக்கம் அனுப்பியிருக்கிருர்; உங்களை அநாதையான என்னிடம் கருணை காட்டச்செய்திருக்கிருர்."

மார்ட்டின் புன்சிரிப்புடன், "ஆமாம், அம்மா. அவர்தான் என்னை அப்படித் தூண்டியிருக்கிருர். சும்மா அகஸ்மாத்தாக நான் வெளியே பார்த்துக் கொண்டிருக்கவில்லை" என்ருன்.

தான் கண்ட கனவைப் பெண்ணிடம் சொன்னுன். அன்று ஆண்டவன் தன்னிடம் வருவதாக வாக்களித்த குரலைத் தான் கேட்டதையும் தெரிவித்தான்.

"ஆமாம், யார் அறிவார் அவர் திருவுள்ளத்தை? எதவும் சாத்தியந்தான்" என்ருள் பெண். பிறகு எழுந்து போர்வையைத் தன் தோளிலே போட்டுக்கொண்டு, குழந்தைமீதும் சுற்றிவிட்டாள். மார்ட்டினை வணங்கி மீண்டும் அவனுக்கு வந்தனம் செலுத்தினுள்.

"இந்தா, ஆண்டவன் திருவுள்ளமாக இதை ஏற்றுக்கொள்" என்று அவன் ஆறு பென்ஸ் காசை அவளிடம் நீட்டினுன். "இதைக் கொண்டு உன் கம்பளிப் போர்வையை அடகிலிருந்து மீட்டுக்கொள்" என்ருன். பெண் தன் கையால் சிலுவைக் குறியிட்டாள். மார்ட்டினும் அப்படியே செய்தான். பிறகு வாயிற்படி வரை சென்று அவன் அவளை வழியனுப்பினுள்.

பெண் போன பிறகு, கொஞ்சம் முட்டக்கோஸ் சூப்பை மார்ட்டின் குடித்தான். மீண்டும் வேலை செய்யத் தொடங்கினுன். ஜன்னலில் எதாவது நிழலாடினுல், வீதியிலே யார் போகிருர்கள் என்று உடனே நிமிர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். யாரும் அப்படி விசேஷமானவராகத் தென்படவில்லை.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஆப்பிள் கூடைக்காரி ஒருத்தி வந்தாள். சரியாய் அவனுடைய ஜன்னலுக்கு எதிரே நின்ருள். அவளிடம் ஒரு பெரிய கூடை இருந்தது. ஆனல், அதில் பழங்களைத்தான் அதிகமாகக் காணவில்லை. பெரும் பகுதி பழங்களையும் விற்றுவிட்டாள் போல் இருக்கிறது. அவள் முதுகிலே ஒரு சாக்குப்பை நிறைய மரச்சில்லுகள் இருந்தன. எங்கேயோ கட்டட வேலைக்களத்திலிருந்து அவைகளைப் பொறுக்கிக்கொண்டு வந்திருக்கிருள். சாக்குப்பை அவள் முதுகை உறுத்தியிருக்கிறது. அதை ஒரு தோளிலிருந்து மறு தோளுக்கு மாற்றிக்கொள்ள எண்ணி, சுவர் ஓரமாக ஒற்றையடித் தடத்திலே அதை வைத்தாள். கூடையைக்

கம்பத்திலே சார்த்திவைத்தாள். மரச் சில்லுச் சாக்குப் பையைக் குலுக்கினாள். இந்தச் சமயம் பார்த்து, ஒரு பையன் ஓடி வந்தான். கந்தலான குல்லாய் ஒன்றை அவன் அணிந்திருந்தான். ஓடிவந்த பையன், கூடைக்குள் கையை விட்டு 'லபக்' என்று ஒரு பழத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினான். கூடைக்காரக் கிழவி இதைக் கவனித்துவிட்டாள். சட்டென்று திரும்பிப் பையனின் சட்டைக் கையைப் பிடித்துக்கொண்டாள். பையன் திமிறினான். அவனைக் கிழவி இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டாள். அவனுடைய குல்லாயைத் தட்டிக் கீழே தள்ளிவிட்டு அவனுடைய தலைமயிரைப் பிடித்துக்கொண்டாள். பையன் வீறிட்டான். கிழவி திட்டினாள். மார்ட்டின் தன் குத்தூசியை அப்படியே கீழே போட்டான். கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினான். படிகளில் கால் இடறவே, மூக்குக் கண்ணாடி விழுந்துவிட்டது. அதைக்கூடக் கவனிக்காமல் மார்ட்டின் ஓடினான். பையனின் தலைமயிரை உலுக்கி அவனைத் திட்டிக்கொண்டிருந்தாள் கிழவி. பையன் திமிறியபடி, "நான் அதை எடுக்கவில்லை. ஏன் என்னை அடிக்கிறாய்? என்னை விடு" என்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தான்.

அவர்களை மார்ட்டின் பிரித்து விலக்கிவிட்டான். பையனைத் தன் கையிலே பிடித்துக்கொண்டான். "பாட்டி, அவன் போகட்டும்; விட்டு விடு. கிறிஸ்து பெருமானை எண்ணி, அவனை மன்னித்து விடு" என்றான்.

"அவனுக்கு நான் நல்ல பாடம் கற்பிக்கிறேன். ஒரு வருஷம் வரைக்கும் அவன் மறக்கமுடியாத பாடம். இந்தப் போக்கிரிப் பயலைப் போலீஸாரிடம் இட்டுப்போகிறேன்."

கிழவியிடம் மார்ட்டின் மன்றாடினான்.

"அவன் போகட்டும், பாட்டி. மறுபடியும் இப்படிச் செய்யமாட்டான். கிறிஸ்து பெருமானை எண்ணி, அவனை விட்டுவிடு!"

பையனைக் கிழவி விட்டுவிட்டாள். பையன் ஓடப் பார்த்தான். அவனை மார்ட்டின் தடுத்து நிறுத்தினான்.

"பாட்டியிடம் மன்னிப்புக் கேள். இனி ஒரு போதும் இப்படிச் செய்யாதே. நீ பழம் எடுத்ததை நான் பார்த்தேன்" என்றான்.

பையன் அழுதுகொண்டே, கிழவியிடம் மன்னிப்புக் கேட்டான்.

"அதுதான் சரி. இந்தா. உனக்கு ஓர் ஆப்பிள் பழம்" என்று சொல்லி, கூடையிலிருந்து ஒரு பழத்தை எடுத்துப் பையனிடம் மார்ட்டின் கொடுத்தான். "பாட்டிக்கு நான் காசு கொடுத்துவிடுகிறேன்" என்றான்.

"இந்தப் போக்கிரிப் பசங்களை நீங்கள் கெடுக்கிறீர்கள். ஒரு வாரம் வரைக்கும் மறக்காதபடி இவனுக்குச் சாட்டையடி கொடுக்கவேண்டும்" என்றாள் கிழவி.

"பாட்டி, பாட்டி, அதுதான் நம் வழி; ஆனால் ஆண்டவன் காட்டும் வழி அல்ல. இவன் திருட்டுக்காகச் சாட்டையடி கொடுக்கவேண்டும் என்றால், நம் பாவங்களுக்காக நம்மை என்ன செய்வது?" என்றான் மார்ட்டின்.

கிழவி பேசவில்லை.

"பிறரை நாம் மன்னிக்க வேண்டும் என்பது ஆண்டவனின் ஆணை. நாம் அப்படி மன்னிக்காவிட்டால் அவன் நம்மை மன்னிக்க மாட்டான். எவரையும் மன்னித்து விடு; இந்த அறியாச் சிறுவனையும் மன்னித்துவிடு" என்று முடிவில் சொன்னான் மார்ட்டின்.

கிழவி தலையை அசைத்துப் பெருமூச்சு விட்டாள்.

"சொல்லப் போனால், இந்தப் பயல் சிறு பிள்ளைத்தனமாய்த் தான் இப்படிச் செய்துவிட்டான். ஆண்டவன் இவனுக்கு நல்ல புத்தி கொடுக்கட்டும்" என்று பையனைச் சுட்டிக் காட்டிக்கொண்டே கிழவி சொன்னாள்.

அவள் தன் சாக்குப் பையைத் தூக்கி முதுகிலே வைத்துக்கொள்ளப் போன சமயத்தில், பையன் துள்ளி எழுந்து, அவள் முன் சென்று, "பாட்டி, அதை நான் தூக்கி வருகிறேன். நானும் அந்தப் பக்கந்தான் போகிறேன்" என்றான்.

சரியென்று கிழவி தலையை ஆட்டினாள். சாக்குப் பையைச் சிறுவனின் முதுகிலே வைத்தாள். இரண்டு பேரும் வீதியிலே நடந்தார்கள். தன் ஆப்பிள் பழத்துக்கு மார்ட்டினைக் காசு கேட்கவே அவள் மறந்து போனாள். அவர்களையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு மார்ட்டின் நின்றான்.

கிழவியும் சிறுவனும் கண் மறைவாய்ப் போன பிறகு, வீட்டுக்குள்ளே மார்ட்டின் திரும்பிச் சென்றான். தன் குத்தூசியைக் கையில் எடுத்துக்கொண்டு மீண்டும் வேலையில் ஈடுபட்டான். கொஞ்ச நேரந்தான் வேலை செய்திருப்பான். அப்புறம் தோல் துளைகளில் நூலை நுழைக்க வெளிச்சம் தெரியவில்லை.

இப்போது, தெருவிலே விளக்கேற்றுவோன் வந்து விளக்குகளை ஏற்றிவிட்டுச் சென்றான்.

"விளக்கேற்ற வேண்டிய வேளை வந்துவிட்டதா?" என்று மார்ட்டின் தானே சொல்லிக்கொண்டான். விளக்குத் திரியைச் சரியாக நறுக்கி விட்டு, அதை ஏற்றிச் சுவரிலே மாட்டினான். மறுபடியும் வேலை செய்யத் தொடங்கினான். ஒரு ஜோட்டைத் தைத்து முடித்தான். பிறகு அது சரியாயிருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தான். சரியாகத்தான் இருந்தது. அப்புறம் தன் கருவிகளையெல்லாம் ஒரு புறம் அடுக்கி வைத்தான். கீழே கிடந்த துண்டு துணுக்கு, குப்பை கூளங்களைப் பெருக்கித் தள்ளினான். வார், நூல், குத்தூசி எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். விளக்கை எடுத்து மேஜைமீது வைத்தான். அலமாரியிலிருந்து சுவிசேஷத்தை எடுத்து வந்தான். முதல் நாள் மொராக்கோ தோல் துண்டு ஒன்றை அதில் அடையாளமாக வைத்த பக்கத்தையே அவன் பிரிக்க எண்ணினான். ஆனால், புத்தகத்தைப் பிரித்ததும் வேறொரு பக்கம் வந்தது. அதைப் பிரித்த போது மார்ட்டினுக்கு முந்திய நாள் கண்ட கனவு ஞாபகம் வந்தது. அந்த ஞாபகம் வந்தவுடனே, யாரோ அவனுக்குப் பின்னால் வருவது போல் ஒரு காலடிச் சத்தம் கேட்டது. மார்ட்டின் திரும்பிப் பார்த்தான். இருண்ட மூலை ஒன்றில் யார் யாரோ நிற்பது போல் அவனுக்குத் தோன்றியது. அவர்கள் யாரென்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் காதில் ஏதோ ஒரு மெல்லிய குரல் கேட்டது: "மார்ட்டின், மார்ட்

டின், என்னைத் தெரியவில்லையா உனக்கு?"

"யார் அது?" என்று முணுமுணுத்தான் மார்ட்டின்.

"நான்தான்" என்றது குரல். உடனே இருண்ட மூலையிலிருந்து, ஸ்டெப்பானிச் தோன்றி, புன்சிரிப்புப் பூத்து, மேகம்போல் மறைந்தான். பிறகு அவனைக் காணவேயில்லை.

"நான்தான்" என்று மறுபடியும் குரல் கேட்டது. இருளிலேயிருந்து கையிலே குழந்தையை அணைத்துக்கொண்டு அந்த ஏழைப் பெண் வந்தாள். அவள் புன்சிரிப்புப் பூத்தாள். குழந்தை சிரித்தது. அவர்களும் மறைந்துவிட்டார்கள்.

"நான்தான்" என்று மீண்டும் ஒரு முறை குரல் கேட்டது. கிழவியும் சிறுவனும் ஆப்பிள் பழக்கூடையோடு வெளித் தோன்றினார்கள். இருவரும் புன்சிரிப்புப் பூத்தார்கள். அவர்களுங்கூட உடனே மறைந்துவிட்டார்கள்.

மார்ட்டின் ஆத்ம பரவசம் அடைந்தான். கையால் சிலுவைக் குறியிட்டான். மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டான். சுவிசேஷத்தின் எந்தப் பக்கம் திறந்துகொண்டதோ, அதையே படிக்கத் தொடங்கினான். அதன் தலைப்பில் இருந்த வசனம் இதுவே:

> நான் பசியாயிருந்தேன்; எனக்கு உணவளித்தாய். நான் தாகமாயிருந்தேன்; எனக்குத் தண்ணீர் வார்த்தாய். நான் அந்நியனாய் இருந்தேன்; என்னை விருந்தாளியாய் ஏற்றுக்கொண்டாய்.

அந்தப் பக்கத்தின் அடியிலே இருந்தது இந்த வசனம்:

> இதோ இந்த என் சகோதரர்களுக்குள்ளே மிகவும் தாழ்ந்த ஒருவனுக்கு நீ செய்த உதவியெல்லாம், எனக்கே செய்த உதவியாகும்.

தன் கனவு உண்மையிலே பலித்துவிட்டது என்று மார்ட்டின் புரிந்துகொண்டான். ரட்சகர் உண்மையிலே அன்று அவனிடம் வந்திருக்கிறார்; அவரை அவன் நன்கு வரவேற்று உபசரித்துவிட்டான்.

க்விஸ் விடை

1. ஆண்டாள். (2) மகாபலிபுரம். (3) நளன். (4) ஸ்டான்லி பால்டுவின். (5) லார்டு எர்ஸ்கின். (6) ரஞ்சி, துலீப், பட்டௌடி. (7) சென்னையிலிருந்து. (8) நாகபுரியில். (9) உதவி ஜனாதிபதி, காங்கிரஸ் ஸ்பீக்கர், ஸெனேட் சபையின் தற்காலிக அக்கிராசனர். (ரூஸ்வெல்ட் இறந்தபோது ட்ரூமன் உதவி ஜனாதிபதியாக இருந்ததால்தான் முதல் முதலில் இப்படி ஜனாதிபதியானார் என்பது உங்களில் பலருக்கு நினைவிருக்கலாம்.) (10) இல்லை. (11) ஆண்ட்ரூ ஜான்ஸன். (12) இரண்டும் சமவேகத்தோடுதான் வழுக்கும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.